REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 நவம்பர் 9 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 266 | Thursday 09, November, 2023 | 20பக்கங்கள் | 50/-




மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி, நிர்மாணம்

## துறைமுக அபிவிருத்திக்கு 553 மில். டொலர் உதவி



அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம் வழங்குவதாக உறுதியளிப்பு

கொழும்பு துறைமுகத்தில் தெற்காசிய பிராந்தியத்துக்கு முக்கியமான உட்கட்டமைப்பை வழங்கக் கூடிய ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையத்தை, அபிவிருத்தி செய்யும் பணிக்கு உதவ அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

06

## அத்தியாவசிய சேவையாக தபால் சேவை பிரகடனம்

அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று (08) மாலை வெளியிடப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

06



## பாராளுமன்றின் மீது மக்களது நம்பிக்கை மிக மிக அவசியம்

தவறினால் எதிர்மறை விளைவுகளே ஏற்படும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பாராளுமன்றத்தில், மக்களுக்கு நம்பிக்கை இருக்கும் வரையே, பாராளுமன்றத்தின் கௌரவம் பாதுகாக்கப்படுமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மக்களுக்கு, பாராளுமன்றம்மீது நம்பிக்கை இல்லாமல்போகும்போது எதிர்மறையான விளைவுகளே உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார். சபையில் நேற்று

06

## இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய யாப்பை தயாரிக்க நியமித்த

# சித்ரசிறி குழுவின் அறிக்கை அமைச்சரவை உப குழுவுக்கு

ஜனாதிபதியின் பணிப்பில் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் கையளிப்பு

பாராளுமன்ற சட்டமொன்றினூடாக இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பொன்றை அறிமுகம் செய்வதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் கிரிக்கெட் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவர் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியிடம் நேற்று (08) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

**இந்த அறிக்கை இன்று பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டு ஆராய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவை உப குழுவின் தலைவர் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்**

எமது நாட்டில் பிரபலமான விளையாட்டான கிரிக்கட் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது மிகவும் சிக்கலானது மற்றும் ஆழமானது என்பதனால், அதனை இடைக்கால நிர்வாகக் சபை நியமிப்பதால் மாத்திரம் தீர்க்க முடியாதெனவும் விளையாட்டுத் துறையின் மேம்பாடு தொடர்பாக கவனம் செலுத்துகையில் இதற்காக நிரந்தரமான, உறுதியான தீர்வை வழங்குவது அவசியம் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும்.

"சித்ரசிறி குழுவின் அறிக்கை" அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட போதிலும், 2023 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் என்பவற்றுக்குப் பின்னர்

06

## வடக்கு பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்த 25 புதிய சாரதிகள்

இ.போ. சபையை இலாபகரமாக மாற்றினால் நிரந்தர நியமனம்



வடமாகாண பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையை மேம்படுத்தி வலுப்படுத்த வேண்டுமென போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

முழுமையான செய்தி 03ஆம் பக்கம் ➢



ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் சபையில் நிறைவேற்றம்

06

## நீர்க்கட்டணத்தில் தேசிய கொள்கை ஜனவரியில் அறிமுகமாகும்

பாராளுமன்றில் அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நீர்க் கட்டணம் தொடர்பான தேசியக் கொள்கையை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிடவுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

விவசாயத்துக்கான நீர் தொடர்பில் முகாமைத்துவத்தை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்

06

## மருத்துவர்கள், சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு நிவாரணம்

ஜனாதிபதி தலைமையிலான பேச்சில் இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்



மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் முக்கிய பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றதாக, சுகாதார

06

## 'அஸ்வெசும' திட்டத்தை இலகுபடுத்த நடவடிக்கை

சகல பிரதேசங்களுக்கும் தனித்தனி அதிகாரிகள்

'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல பிரதேச செயலாளர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாக, நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதேச செயலாளர் சங்கத்துடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (07) நடைபெற்ற கலந்துரையாடலிலே, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறியுள்ளார்.

இச்சந்திப்பு தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்

06

## 2,763 கிராம சேவகர்கள் வெற்றிடங்களை நிரப்ப

டிசம்பர் முதல் வாரம் பரீட்சை

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடளாவிய ரீதியில் நிலவும் 2,763 கிராமசேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை, டிசம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படுமென பிரதமரும் பொது நிர்வாக,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சருமான தினேஷ்

06



ஆழமற்ற கடற்பகுதிகளில் விஷப்பாறை மீன்கள்

பொதுமக்களுக்கு நிபுணர் ரூபன் எச்சரிக்கை

03



குவைத்திலிருந்து 26 பணிப் பெண்கள் நேற்று நாடு திரும்பல்

இரண்டாயிரம் பேர் நாடு திரும்ப காத்திருப்பு

03



தங்கத்தின் விலையில் தினமும் ஏற்ற, இறக்கம்

24 கரட் பவுண் 1,83,000 ஆக பதிவு

03

## ஐந்து நாட்களில் 22 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை

நாட்டில், இம்மாதத்தின் முதல் 05 நாட்களில் 22 ஆயிரத்து 202 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இவ்வருடத்தில் இதுவரையில் இலங்கைக்கு 11 இலட்சத்து 47 ஆயிரத்து 657 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இம்மாதத்தின் முதல் 05 நாட்களில் ரஷ்யாவிலிருந்து

06

## இஸ்ரேலில் உயிரிழந்த பண்டாரவின் சடலம் இன்று நாட்டுக்கு கொண்டுவரப்படும்



இஸ்ரேல் காஸா மோதல்களில் கொல்லப்பட்ட இலங்கையரான சுஜித் பண்டாரவின் சடலம் இன்று (09) நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

பண்டாரவின் உடலை சுமந்த பிளை டுபாய் விமான

06

## இலங்கையில் முதன்முதலில் அப்சீலிங் சாகச விளையாட்டு!

இலங்கையில் முதன்முதலில் தாமரை கோபுரத்தில் அப்சீலிங் சாகச விளையாட்டு ஆரம்பம்பிக்கப்பட்டுள்ளது. அப்சீலிங் சாகச விளையாட்டை கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ கம்பனி (பிரைவேட்) லிமிடெட் ஆரம்பித்துள்ளது.

அப்சீலிங் என்பது உயரமான இடத்திலிருந்து செங்குத்தாக கீழே இறங்க கயிற்றைப் பயன்படுத்தி நிகழ்த்தும் சாகச விளையாட்டாகும். சாகச விளையாட்டில் பொதுமக்கள்

06

## தீபாவளி: மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு 13இல் விடுமுறை

ஹற்றன் சுழற்சி நிருபர்



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை (13) மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர்

06

## மாபலாகமயில் கொழும்பு வந்த CTB பஸ் விபத்து,17 பேர் காயம்



காலி, மாபலாகம பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

காலி, மாபலாகம பகுதியிலிருந்து புறப்பட்ட இ.போ.ச

06



இன்று பிறந்தநாள் காணும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான கௌரவ ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!!!

SARITA Textorium

No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023

Web : www.saritatex.com
www.facebook.com/saritatextorium



இளம் வயதில் சாணக்கியத்துடன் மலையகத்திற்கு பெருமை சேர்த்த

# அமைச்சர் ஜீவன் தொண்டமான்

## இன்று அவரது 29ஆவது பிறந்த தினம்







இளம் வயதில் அரசியல் பிரவேசம் செய்வது புதிய விடயமல்ல. ஆனால் மிகவும் இளமையான பருவத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக வருவது மிகவும் அபூர்வமான விடயம். அப்படி ஒரு வாய்ப்பைப்பெற்று இதுவரை சாதுரியமாக அரசியல், தொழிற்சங்க பணிகள் செய்து வருகிறார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நீர்வழங்கல் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான்.

இது பெருந்தோட்ட சமூகத்திற்கு கிடைத்த கௌரவமாகவே கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். சரியான தருணத்தில் தொலைநோக்கோடு தொழிற்சங்கப் பணியில் அவரை ஈடுபடுத்தியதன் மூலம் தனது சாணக்கியத்தை நிலைநாட்டியவர் தந்தையாரான அமரர் ஆறுமுகன் தொண்டமான்.

தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகவே பயன்படுத்திக்கொண்டு குறுகிய காலத்தில் முழு மலையகத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டவர் அமைச்சர் ஜீவன் தொண்டமான். இதன் பெறுபேறாக இன்றைய அரசாங்கம் நம்பிக்கையோடு மலையக பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்தை இவர் பொறுப்பில் கொடுத்து அமைச்சராக்கியது.

இவரின் அர்ப்பணிப்பான முயற்சியின் பயனாகவே வீடமைப்புத்திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சியின்போது முழுமை பெறாத 1235 வீடுகளை பூர்த்தி செய்து அவற்றுக்குத் தேவையான மின்சாரம், குடிநீர், வீதிப்போக்குவரத்து ஆகியவற்றை நிவர்த்தி செய்து மக்கள் மயப்படுத்தியுள்ளார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இந்திய அரசின் நன்கொடை மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் முழு மலையகத்திற்கும் அத்தியாவசியமாக உள்ளதால் அவற்றைத் துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அமைச்சர் தனிவீட்டுத் திட்டத்தையும் மிகவும் சாதுரியமாக கையாண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பளத்தை பெற்றுத்தந்து தந்தையின் கனவை நனவாக்கியவர். தேசிய மட்ட அரசியல் தலைமைகளோடு மிக நெருக்கமான தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டும் தமிழக அரசியல் தலைவர்களோடு உறவுகளை பேணுவதிலும் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றார்.

### 'நாம் 200' தேசிய நிகழ்வு

அண்மையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மலையக வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒருதேசிய நிகழ்வாக 'நாம் 200' கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெருந்தோட்டங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் இருந்தும் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கெடுத்தனர்.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச்செயலாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், இந்திய மத்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழக அரசியல் பிரமுகர்கள் ஆகியோரையும் ஒரே மேடையில் சந்திக்க வைத்த பெருமை அமைச்சர் ஜீவன் தொண்டமானைச்சாரும்.

மலையகத்தின் இளைய தலைமுறை நாயகனாக இவர் வலம் வருகிறார். இளம் வயதிலேயே அனுபவ முதிர்வை வெளிக்காட்டும் அமைச்சர், மலையக சமூகவியல் மாற்றத்திற்கான முன்னெடுப்புக்களை துணிச்சலுடன் மேற்கொண்டு வருவதன் மூலம் நம்பிக்கை விடிவெள்ளியாகத் திகழ்கின்றார்.

இன்று அவரது 29ஆவது பிறந்த தினத்தில் பல தரப்பினரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர் பல்வேறு சரிதங்களுடன் வெற்றிகளைத் தொடர இறையாசி வேண்டி நாமும் வாழ்த்துகின்றோம்.



தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்




















தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 9 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.18
மஃரிப் - 05.50
இஷா - 07.02

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஐப்பசி 23
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 7.35 - 9.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# 'லிஸ்பனில் இருந்து காலி வரை' சுற்றுலா அபிவிருத்தித் திட்டம்

## பிரதமர் தினேஸ் போர்த்துக்கல் தூதுவருடன் பேச்சு

19 ஆம் நூற்றாண்டில் 'லிஸ்பன் முதல் கோவா வரை' சுற்றுலா அபிவிருத்தி திட்டம் போன்று 'லிஸ்பன் முதல் காலி வரை' என்ற சுற்றுலா திட்டத் தை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் குறித்து பிரதமர் தினேஸ் குணவர்த்தன போர்த்துக்கல் தூதுவர் ஜோவா மானுவல் மெண்டெஸ் டி அல்மேதாவுடன் கலந்துரையாடியுள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் போர்த்துக்கல் தூதுவர் ஜோவா மானுவல் மெண்டெஸ் டி அல்மேதாவுக்குமிடையிலான சந்திப்பொன்று (06) அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. போர்த்துக்கல் மக்கள் மத்தியில் இலங்கையை ஒரு சாதகமான சுற்றுலாத் தளமாக மேம்படுத்துவதற்கான பரந்த விளம்பரத் திட்டத்தை, நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன இதன் போது முன்மொழிந்தார்.



போர்த்துக்கல் சுற்றுலாப் பயணிகளை இந்தியாவுக்கு வரவழைப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட 'லிஸ்பன் முதல் கோவா வரையிலான 19 ஆம் நூற்றாண்டின் கிழக்குப் பயணம்' போன்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கையையும் ஒரு சாதகமான சுற்றுலாத் தளமாக போர்த்துக்கல் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு வாய்ப்புள்ளது.இதனால், போர்த்துக்கல் 'லிஸ்பன் முதல் காலி வரை' என்ற அத்தகைய திட்டம் சாத்தியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருபது வருடங்களுக்கு முன்னர் தானும் உல்லாசப் பயணியாக காலிக்கு வந்திருந்ததை நினைவு கூர்ந்த தூதுவர், போர்த்துக்கல் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குத் தேவையான அனைத்து காரணிகளும் இலங்கையிடம் இருப்பதாகத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் வாசனைத் திரவியங்கள் போன்றவற்றுக்கு போர்த்துக்கல்லில் அதிக சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தங்கத்தின் விலையில் தினமும் ஏற்ற, இறக்கம்

## 24 கரட் பவுண் 1,83,000 ஆக பதிவு

நாட்டில் ஆபரண தங்கத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. இதற்கமைய நேற்றைய நிலவரப்படி ஆபரண தங்கத்தின் விலை 24 கரட் 01 கிராம் 22,880 ரூபாவாக பதிவாகியிருந்தது.

24 கரட் ஒரு பவுண் தங்கம் 1,83,000 ரூபாவாக பதிவாகியது. அதேபோன்று, 22 கரட் 01 கிராம் தங்கத்தின் விலை 20,980 ரூபாவாக பதிவாகியது. இதற்கமைய 22 கரட் ஒரு பவுண் தங்கம்



1,67,800 ரூபாவாக பதிவாகியது.

# குவைத்திலிருந்து 26 பணிப் பெண்கள் நேற்று நாடு திரும்பல்

## இரண்டாயிரம்பேர் நாடு திரும்ப காத்திருப்பு

குவைத்தில் விசாயின்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த 26 பணிப்பெண்கள், இலங்கை தூதரகத்தின் மூலம் நேற்று நாடு திரும்பியுள்ளனர். இவர்கள், நேற்றுக் காலை (08) 07.05 மணியளவில் குவைத்திலிருந்து வந்த ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானமான UL 230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுமார் 2,000 இற்கும் மேற்பட்ட பணிப்பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதற்காக, குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்துள்ளனர்.இந்நிலையில்,26 பேரே நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இவர்களுக்கான விமான பயணச்சீட்டுகளை குவைத்திலுள்ள இலங்கை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கைத் தூதரக அதிகாரிகள் குவைத்தின் குடிவரவுத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நீதித்துறை மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து இவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை நீக்கம் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குவைத்தில் எஞ்சியிருக்கும் இலங்கையர் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# அனைத்து பொலிஸாருக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது

## அவரவர் பாதுகாப்பை அவர்களே உறுதி செய்ய வேண்டும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பொலிஸ் அதிகாரிகள் சகலருக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது என்றும் பொலிஸ் சீருடை அணிந்துள்ளவர்கள் அவரவர் பாதுகாப்பை அவர்களே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு பொதுமக்கள் அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமருடனான வினாக்கள் வேளையில், ஆளும் தரப்பு எம் பி சுதர்ஷன பெனிபிட்டிய எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார். விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பதிலளித்த அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாதாள உலகக் கும்பலின் செயற்பாடுகளையும் போதைப்பொருள் வர்த்தகத்தையும் இல்லாதொழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.எனினும், அனைத்து விடயங்களையும் பகிரங்கப்படுத்த முடியாது. எவ்வாறெனினும், பாதாள உலக கும்பலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் பிரதிபலன்களை வெகுவிரைவில் அறிந்து கொள்ள முடியும்.

06

# இலங்கையின் புதிய தூதுவர்கள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

## அபிவிருத்தி, சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு குறித்து கலந்துரையாடல்



இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் பதவி நிலைகளுக்கான பணிப்பாளர்களாக பதவியேற்ற இராஜதந்திரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்துள்ளனர்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (07) இச்சந்திப்பு இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், கைத்தொழில் பேட்டை ஸ்தாபிப்பு, கனிமத் துறைகளின் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை குறித்த நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

# ஆழமற்ற கடற்பகுதிகளில் விஷப்பாறை மீன்கள்

## பொதுமக்களுக்கு நிபுணர் ரூபன் எச்சரிக்கை

இலங்கையின் ஆழமற்ற கடற்பகுதிகளில் காணப்படும் விஷப் பாறை மீன்கள் தொடர்பில், ஒட்டுண்ணியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜானக ரூபன் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அவர்,அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விஷமீன் இனம் GonmahaStone Fish என அடையாளப்படுத்தப் படுகிறது. இந்த பாறைமீன்கள் மணல் அல்லது இடிபாடுகள் நிறைந்த பாறை அடுக்குகள், ஆழமற்ற தடாகங்கள் மற்றும்



குறைந்த அலைகள் உள்ள சிறிய குளங்களில் காணப்படும். இவை, மெதுவாக இயங்கும் மீன்கள் என்பதால் பெரும்பாலும் மறைக்கப்பட்டு மற்றும் சில நேரங்களில் பாசிகளால் மூடப்பட்டிருக்கும்.

06



யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட வடமாகாண சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறையினால் இயங்காத இ.போ.ச பஸ் சேவைகளை மீள ஆரம்பிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 25 புதிய சாரதிகள் மற்றும் 03 நடத்துனர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வன்னி மாவட்ட எம்.பி திலீபன் ஆகியோர் கலந்துகொண்டபோது..

# வடக்கு பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்த 25 புதிய சாரதிகள்

## இ,போ,சபையை இலாபகரமாக மாற்றினால் நிரந்தர நியமனம்

வடமாகாண பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையை மேம்படுத்தி வலுப்படுத்த வேண்டுமென போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட வடமாகாண சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறையால் இயங்காத இ.போ.ச பஸ் சேவைகளை, மீள ஆரம்பிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 25 புதிய சாரதிகள் மற்றும் 03 நடத்துநர்களு க்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற இவ்வைபவத்தில், அமைச்சர் மேலும் தெரிவித்தாவது,

கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாரிய பின்னடைவால், அடுத்த மூன்று வருடங்களுக்கு அரச சேவைக்கான நியமனங்கள் எதனையும் மேற்கொள்ளமுடியாதுள்ளது. புதியநியமனங்களை மேற்கொள்ளவும், அந்த பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கவும் அரசால் முடியாது.

கடந்த ஆண்டு அரசாங்கத்தின் மொத்த வரி வருமானத்தில் 72% அரசாங்க ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்பட்டது. மேலும் 28% சமுர்த்தி மற்றும் பிற மானிய கொடுப்பனவுகளுக்கு செலவிடப்பட்டது. மொத்த வரி வருமானமும் இந்நடவடிக்கைகளுக்காகவே செலவிடப்பட்டுள்ளது.

இதனால் அரசாங்கம் என்ற முறையில் முன்பு வாங்கிய கடனுக்கு வட்டியை செலுத்த வேண்டும். கடந்த ஆண்டு 1,765 பில்லியன் கடன் வட்டி செலுத்தப்பட்டது. அதுமட்டுமின்றி ஏனைய அபிவிருத்திப் பணிகளும் கடன் வாங்கியே செய்யப்பட்டுள்ளன. இதுவரை பெற்ற கடன்களை மறுசீரமைக்கும் வரை அரசாங்கம் மேலும் கடன் வாங்க முடியாது.

06

SriLankan Airlines
oneworld

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (PB 67)** ஆண்டறிக்கை 2022/2023, ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு மற்றும் பதிலாள் படிவம் கம்பனியின் வெப்தளமான **www.srilankan.com/AGM** இலும் பங்குடமையாளர் சமூகத்தளமான கீழே குறிப்பிடப்பட்ட வெப்தளத்திலும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது.
**www.srilankan.com/shareholdercommunitysite**

பின்வரும் QR குறியீடுகள் ஸ்கேன் செய்வதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் கைபேசி ஊடாகவும் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பை அணுகலாம்.

ஆண்டறிக்கை

கூட்டம் பற்றிய அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏயார்லைன்சின் பங்குடமையாளர்களது 45வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 நவம்பர் 30ஆம் நாள் வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் 'சினிமா லவுஞ்ச்' பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2023 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அனைத்தையும் இலத்திரனியல் தொடர்பூட்டல் தளத்திற்கு மாறிக்கொள்ளுமாறும் சாத்தியமானளவிற்கு காகிதங்களின் பயன்பாட்டினைக் குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்ற 2022 ஆகஸ்ட் 8ஆம் திகதியிடப்பட்ட 04/2022ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் நியதிகளுக்கிணங்க, PDF படிவத்தில் மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

ஏதேனும் விளக்கங்களுக்கு, கம்பனிச் செயலாளரை தொடர்பு கொள்ளவும்.
மின்னஞ்சல் : comsec@srilankan.com தொலைபேசி : 0197331010

திருமதி டல்ரீன் திருகுமார்
**கம்பனிச் செயலாளர் சேவைகளின் குழுத் தலைவர்/ கம்பனிச் செயலாளர்**
2023 நவம்பர் 8

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 24

### குறள் தரும் சிந்தனை



இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துத் தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயல்கின்ற ஒருவன், துன்பத்தைத் தாங்கி கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான்.

# தொழிற்சங்க நடவடிக்கைகளால் மக்கள் நலன் பாதிக்கப்படலாகாது!

அரசாங்க தபால் சேவை ஊழியர்கள் நேற்று முதல் 48 மணித்தியாலய பணிப்பகிஷ்கரிப்பு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். நுவரெலியா நகரிலுள்ள பழைமையான தபாலகக் கட்டடத்தை புதிய முதலீடுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்தே தபால் சேவைத் தொழிற்சங்கங்கள் இப்பணிப் பகிஷ்கரிப்பு தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றன.

இத்தபாலகக் கட்டடம் புதிய முதலீடுகளுக்காக வழங்கப்பட்டாலும் தபாலகத்திற்கென பொருத்தமான பிறிதொரு கட்டடம் வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபை உறுதியளித்துள்ளது. இது தொடர்பில் வெகுஜன ஊடக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறிருந்தும் கூட புதிய முதலீடுகளுக்காக நுவரெலியா தபாலகக் கட்டடத்தை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்து தபால் சேவை தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கையால் தபாலகங்களின் வழமையான சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டிருந்தன. இத்தொழிற்சங்க நடவடிக்கையினால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். தபால் சேவைகளின் நிமித்தம் தபாலகங்களுக்கு வருகை தந்த மக்கள் ஏமாற்றங்களுடன் வீடு திரும்பும் துரதிர்ஷ்ட நிலைக்கு உள்ளாகினர்.

அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய புதிய முதலீடுகளுக்காகவே நுவரெலியா தபாலகக் கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ள நாட்டில், மீண்டும் அவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடி இனியொரு போதும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

அந்நிலையில்தான் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாகக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறான நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிப்பது ஆரோக்கியமானதல்ல. இலங்கையில் நஷ்டத்தில் இயங்கும் திணைக்களங்களில் தபால் திணைக்களமும் ஒன்றாகும். வருடமொன்றுக்கு 7 பில்லியன் ரூபா நஷ்டத்திற்கு முகம்கொடுக்கும் இத்திணைக்களத்தின் நஷ்டம் இவ்வருடம் 3 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மூன்று பில்லியன் ரூபா என்பதும் சாதாரண ஒரு தொகை அல்ல. அதனால் அந்த நஷ்டத்தையும் குறைக்க வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில்தான் தபால் திணைக்களத்தின் நுவரெலியக் கட்டடத்தை புதிய முதலீடுகளுக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கே தபால் சேவை தொழிற்சங்கங்கள் ஆட்சேபனை தெரிவிக்கின்றன.

அப்படி என்றால் இத்தொழிற்சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனம் தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்க வேண்டும் என்று விரும்புகிறதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. ஆனால் எந்தவொரு நிறுவனமும் தொடராக நஷ்டத்தில் இயங்குவதை எவரும் விரும்பவே மாட்டார்கள். அதனால் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனத்தையும் இலாபமீட்டும் நிறுவனமாக கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும்.

அரச நிறுவனமொன்று நஷ்டத்தில் இயங்குகின்றது என்றால் அதன் சுமை மக்கள் மீதே விழும். அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டிய நிலைமை மக்களுக்குத்தான் ஏற்படும். அதனால் அரச நிறுவனங்கள் இலாபமீட்டுபவையாக இல்லாவிட்டாலும் நஷ்டம் ஏற்படாத வகையில் இயங்கும் நிறுவனங்களாக கட்டியெழுப்பப்படுவது அவசியம். அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

இருந்த போதிலும் இவை எதனையும் கருத்தில் கொள்ளாத தபால் சேவைத் தொழிற்சங்கங்கள் 48 மணித்தியாலய பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அறிவித்தன.

அதனால் தபால் மாஅதிபர் எம்.ஆர்.ஜி. சத்குமார, தபால் சேவை ஊழியர்கள் அனைவரதும் விடுமுறைகள் அடுத்துவரும் மூன்று நாட்களுக்கு இரத்து செய்யப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பையும் மீறி தபால் சேவை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளமை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் தபால் சேவை நேற்று பிற்பகல் முதல் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் விஷேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. இப்பிரகடனம் நடைமுறையில் இருக்கும் போது தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவும் முடியாது. விடுமுறையில் இருக்கவும் முடியாது. இப்பிரகடன ஒழுங்கு விதிகளை மீறிச் செயற்படுவது சட்டப்படி குற்றமாகும்.

ஆகவே தபால் சேவை முகம் கொடுத்துவரும் நஷ்ட நிலையைக் குறைத்து கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அப்போதுதான் தபால் சேவை நஷ்டத்தில் இயங்காத நிலையை அடையும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மலையகத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் அவசியம்



## இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர் பொன் ஜயசீலன் தினகரனுக்கு வருகை தந்திருந்த வேளையில் வழங்கிய பேட்டி

'இலங்கையில் நீண்ட காலமாகப் பிரஜாவுரிமையின்றி இருந்த பெருந்தோட்ட மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருப்பதையிட்டு இலங்கை அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரம் இம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் அவர்களது பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்யவும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்'.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்நாடு மாநில சட்ட சபை உறுப்பினர் சட்டத்தரணி பொன் ஜயசீலன்.

இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைந்துள்ளதையொட்டி நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் 'நாம் 200' என்ற வைபவத்தை சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்து நடத்தியது.

இவ்வைபவத்தில் பங்குபற்ற தமிழ்நாடு மாநில அ.தி.மு.க சட்ட சபை உறுப்பினர் சட்டத்தரணி பொன் ஜயசீலன் இலங்கை வந்திருந்தார். அவர் தினகரனுக்கு வருகை தந்து பேட்டியொன்றை வழங்கினார்.

**கேள்வி: உங்களைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

பதில்: நான் தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். எனது பிறப்பிடம் இலங்கையின் பதுளை மாவட்டத்திலுள்ள பசறை தொகுதியில் இருக்கும் ஏழுமலை யுரி குழுமத் தோட்டமாகும். இங்கு பணியாற்றிய தொழிலாளிக்கு மகனாகப் பிறந்த நான் சிறிமா_சாஸ்திரி ஒப்பந்தப்படி 1978 இல் எமது பெற்றோருடன் இந்தியாவுக்கு சென்றேன். அப்போது எனக்கு ஐந்தரை வயதாகும். தஞ்சாரின் பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள அருவிக்கோட்டைதான் எமது சொந்த ஊர். அங்கு எமது உறவினர்கள் இருக்கின்றனர்.

அங்கு எமது பெற்றோருக்கு தெரிந்த தொழில் கிடைக்கப்பெறவில்லை. அவர்களுக்கு தேயிலையும் தேயிலைத் தொழிற்சாலை சார்ந்த தொழில்களும்தான் தெரியும். அதனால் அங்கு சுமார் இரு வருடங்கள் கடந்த நிலையில் எமது பெற்றோர் கர்நாடகா மாநிலத்தின் சிக்மங்களுர் மாவட்டத்திற்கு சென்று அங்குள்ள தேயிலைத் தோட்டத்தில் தொழில் பெற்றுக்கொண்டார்கள். இதேவேளை நாம் எமது அப்பாவின் அம்மா உள்ளிட்டோரின் பராமரிப்பில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூரில் கல்வி கற்று தேறினேன். கோவை அரச சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை மேற்கொண்டேன்.

**கேள்வி: இலங்கையில் பிறந்து தமிழ்நாட்டு மாநில சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் உங்களது அரசியல் பிரவேசம் குறித்து குறிப்பிடுங்கள்?**

**பதில்:** மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஆளுமை, அவரது திறமைகள் மற்றும் அவர் ஏழை மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளில் கவரப்பட்டு 2006 இல் அ.தி.மு. கழகத்தில் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபட்டேன். வழங்கறிஞராக இருப்பதால் சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றது. இந்நிலையில் எனது அரசியல் பணிகளை பாராட்டிஜெயலலிதா என்னை கூடலூர் நெல்லியாரம் மாநகராட்சி மன்றத்திற்கான தலைவர் பதவிக்கான தேர்தலில் 2011 இல் போட்டியிட வாய்ப்பளித்தார். அத்தேர்தலில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தேன்.

இந்நிலையில், 2016 இல் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் கூடலூர் தொகுதியில் போட்டியிடவென நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்த போதிலும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்கப்பெறவில்லை. 2021 இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிச்சாமி வாய்ப்பளித்தார்.

**கேள்வி இலங்கையில் பிறந்து கூடலூர் தொகுதி மக்கள் பிரதிநிதியாக இருப்பது தொடர்பில் உங்கள் கருத்து?**

**பதில்:** இத்தொகுதி தி.மு.க வின் கோட்டையாகும். 15 வருடங்கள் தொடராக தி.மு.க வெற்றி பெற்ற இத்தொகுதியில் 2022 இல் நடைபெற்ற தேர்தலில் நான் வெற்றி பெற்றுள்ளேன். ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட இத்தொகுதியில் சிறுபான்மை மக்கள் தான் அதிகம் வாழ்கின்றனர். அவர்களில் தாயகம் திரும்பிய சுமார் 75 ஆயிரம் பேர் வாக்காளர்கள் இங்குள்ளனர். இது எனது வெற்றிக்கு வழிவகை செய்ததோடு தாயகம் திரும்பிய முதலாவது சட்ட மன்ற உறுப்பினர் என்ற பெருமையும் எனக்கு பெற்றுக்கொடுத்துள்ளது.



நான் தாயகம் திரும்பும் போது எங்கு போகிறோம்? என்ன செய்யப் போகின்றோம்? என்று எதுவும் தெரியாத நிலையில் இருந்தோம். ஆனால் இன்று சுமார் 08 கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ்நாட்டின் சட்ட மன்றத்தில் 234 உறுப்பினர்களில் ஒருவராக இருந்து மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன். இதற்கான வாய்ப்பை எனது கூடலூர் மக்கள் பெற்றுத் தந்துள்ளனர். அவர்களுக்கு என்றும் நன்றி கடன்பட்டவனாக இங்கு வாழும் அனைத்து மக்களுக்கும் சேவைகளைப் பெற்றுக்கொடுக்கின்றேன். தமிழ், கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகள் பேசும் மக்கள் வாழும் பகுதியாக கூடலூர் இருந்த போதிலும், எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

**கேள்வி: தாயகம் திரும்பிய மக்களின் வாழ்க்கை நிலைமை எவ்வாறு உள்ளது?**

**பதில்:** 1964 இன் சிறிமா_ சாஸ்திரி ஒப்பந்தப்படி, இலட்சக்கணக்கான மக்கள் தாயகம் திரும்பினர். அவர்களில் பெரும்பாலான மக்கள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு தொழிலுக்கு சென்றனர். அவர்களில் பெரும்பகுதியினர் தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் அனுபவத்தை மாத்திரம் கொண்டிருந்தனர். இவ்வாறு சென்றவர்களில் அநேகர் கூடலூர் பகுதிக்கு வந்து இங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் தொழில்களில் ஈடுபடுகின்றனர். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த போது எமது பகுதியிலுள்ள எல்லா தோட்டங்களுக்கும் சென்று மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தமிழ்நாடு மாநில முதலமைச்சருக்கும் மாநில அரசுக்கும் கொண்டு சென்றார். இந்நடவடிக்கைகளின் பயனாக இத்தோட்டங்களை வனமாக்கும் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன.

**கேள்வி: தாயகம் திரும்பிய அனைத்து இந்திய வம்சாவளி மக்களுக்கும் குடியுரிமை கிடைக்கப்பெற்றுள்ளதா?**

**பதில்:** சிவபு கடவுச்சீட்டு மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய எல்லோருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டு விட்டது. ஆனால் இங்கு இடம்பெற்ற கலவரங்களின் போது வந்த தமிழ் மக்கள் 117 அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்முகாம்களில் 28, 400 பேர் குடியுரிமை இன்றி உள்ளனர். இவர்கள் தினமும் கையெழுத்து வைத்துத்தான் வெளியே சென்று வர வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த முகாம்கள் தமிழ்நாடு மாநில அரசினால் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் வாழும் மக்களை விடவும் சுமார் 50 ஆயிரம் மக்கள் முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றனர். இவர்கள் தமிழ்நாடு மண்டபம் முகாமில் இருப்பவர்கள் அல்லர்.

இம்முகாம்களிலுள்ள மக்கள் விருப்பினால் இலங்கைக்கு வந்து இங்கு வாழுவதற்கான குடியுரிமையையும் இந்தியாவில் தொடர்ந்து வாழ விரும்பினால் அதற்காக குடியுரிமையையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்தோடு தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான தேயிலைத் தோட்ட வீடுகளில் 40 வருடங்களாக உள்ள மக்களை வீட்டை விட்டு வெளியேற்றும் நிலைமை உருவாகியுள்ளது. அதனால் இம்மக்களுக்கு அக்காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசுடன் பேசி இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொன் ஜயசீலன் தெரிவித்தார். இந்திய தொடர்பாளர் மணவை அசோகனின் ஏற்பாட்டில் ஜயசீலன் தினகரன் அலுவலகத்திற்கு வருகை தந்தார். அவருடன் இ.தொ.கா உபதலைவர் சிங்கமுத்து அசோக்குமாரும் வந்திருந்தார்.

பேட்டி கண்டவர்:
**மர்லின் மரிக்கார்...**

# ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக மக்களுக்கு கவிதைகளால் விழிப்புணர்வூட்டியவர் அல்லாமா இக்பால்

இந்தியா சுதந்திரமடைந்ததையடுத்து நாடாளுமன்றத்தில் முதன் முதலாக ஒலித்த பாடலான 'சாரேஜகான் சே அச்சா இந்துஸ்தான் ஹமாரா ஹமாரா' எனும் பாடலின் கவிஞர்தான் அல்லாமா முஹம்மது இக்பால் ஆவார்.

ஓர் ஏழை தையல்காரரின் மகனாக இக்பால், 1871 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி ஸியால் கோட்நகரில் பிறந்தார். அவர் பாடசாலைப் பருவத்திலேயே கவிதை எழுதுவதில் ஆர்வமாக இருந்துள்ளார். இந்த ஆர்வமே பின்னால் உலகில் பிரசித்தி பெற்ற கவிஞராக உருவாவதற்கு காரணமாக இருந்தது. பாடசாலைப் பருவத்தில் கவிதை புனைவது மட்டுமன்றி கவிபாடுவதிலும் அதிக திறமை காட்டினார்.

இக்பால் மாணவராக இருந்த காலத்தில் பாடசாலைக்கு தாமதமாக சென்ற போது ஆசிரியர் அவரிடம் 'நீ ஏன் தாமதமாக வந்தாய்?' எனக் கேட்டபோது அதற்கு 'இக்பால் எப்போதுமே தாமதமாகத் தான் வரும்' என்று சொன்னார்.

இக்பால் என்றால் புகழ் என பொருள்படும். இக்பாலின் பதிலை வியந்து பாராட்டினார் ஆசிரியர்.

1894 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பின் பின்பு லாகூரில் இரு அரச கல்லூரிகளில் பேராசிரியராக கடமையாற்றியுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் 'பொருளாதார கல்வி'என்ற நூலையும் எழுதினார். அவருக்கு மேற்படிப்பை தொடர்வதற்கு வாய்ப்பு கிடைத்தது.

இங்கிலாந்து சென்று பரிஸ்டர் படிப்பிலும் தத்துவஞான ஆய்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பின்னர் கலாநிதி பட்டமும் பெற்றார். இக்பால் மேற்படிப்பை முடித்தபின்னர் 1908 ஆம் ஆண்டு இந்தியா திரும்பியதும் சிறிது காலம் வழக்கறிஞராக பணியாற்றினார்.



## இன்று பிறந்ததினம்

இஸ்லாமிய புத்திஜீவிகளின் இயக்கத்தில் இக்பால் இணைந்து சேவைகளில் ஈடுபட்டார். 1919ஆம் ஆண்டு இந்த இயக்கத்தில் பொதுச்செயலாளராகத் தெரிவானார்.

இலக்கிய உலகில் இக்பாலின் கவித்துவப் படைப்பு முழுஉலகையுமே அதிரவைத்தது. அவரது கவிதைகள் சமூகத்தின் எழுச்சி பிரளயமாகவே அமைந்தன.

அவர் தனது தொகுப்பாக அஸ்ராரேகுதி (இதயப் புதையல்) என்னும் நூலை 1915ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து மேலும் பல நூல்கள் வெளியிட்டார். உருது, பாரசீக மொழி, ஆங்கிலம், பிரெஞ்ச் போன்ற மொழிகளில் அவர் புலமை பெற்றிருந்தார்.

இக்பால் கவிஞர் மட்டுமல்ல மிகச்சிறந்த தத்துவஞானி, அரசியல் மேதை, வழக்கறிஞர், சிந்தனையாளர் ஆவார். அவர் தனது முதிர்ந்த சிந்தனையில் விளைந்த கருத்துக்களை கவிதை வடிவில் எழுதி மக்கள் மத்தியில் பரப்பினார். வெள்ளையர்கள் இந்திய நாட்டை அடிமைப்படுத்திய காலத்தில் தனது கவிதைகளால் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கினார்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கும், அதிலிருந்து பாகிஸ்தான் தனிநாடு தோன்றுவதற்கும் இக்பால் எழுதிய கவிதைவரிகள் துணை புரிந்துள்ளன.

20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களில் இக்பாலும் ஒருவர். அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கள் 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தனது 65 ஆவது வயதில் லாகூரில் காலமானார்.

கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'கவி முளரி' மின்னூல் சஞ்சிகை

பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முதலாவது மின்னூலான 'கவிமுளரி' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு அண்மையில் பேத்தாழை பொதுநூலகத்தில் நடைபெற்றது. விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் மரகதம் பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ச.நவநீதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கோறளைப்பற்று பிரதேச சபைக்கான சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஹாரூன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டதோடு கவிஞர்கள், வளர்கவிகள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



இச்சஞ்சிகையின் நயவுரையை செல்வி தமிழூராள் அனுஷ்திக்கா ஆற்றியதைத் தொடர்ந்து, இச்சஞ்சிகை மின்னூல் வடிவில் வாசகர்களின் அணுகலுக்காக அதிதிகளால் பேத்தாழை பொதுநூலகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

எமது சமூகத்தில் காணப்படுகின்ற கவிஞர்களையும் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட 'கவிமுளரி' சஞ்சிகையானது ஒவ்வொரு மாதமும் மின்னூல் வடிவில் நூலக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




**மரகதம் பிரகாஷ்...**

# பாடசாலை சிறுவர்களின் கல்வி மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பாடசாலை உணவுத் திட்டம்



'இலங்கையில் ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு ஏற்கனவே அவசர உதவி தேவைப்படுகிறது. 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வி, ஏற்கனவே இரண்டு வருடங்கள் இடைநிறுத்தப்பட்ட கற்றல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலை வருகை தொடர்ந்து ஆபத்தில் உள்ளது. தற்போதைய நெருக்கடியால் சிறுவர்களின் கல்வி பல வழிகளில் தடைபட்டு வருகிறது—சிறுவர்களுக்கு நெருக்கடிக்கு முன்பு வழங்கப்பட்ட சூடான மற்றும் சத்தான பாடசாலை உணவு இனி கிடைக்காது....' என்று யுனிசெஃப் இன் தெற்காசியாவிற்கான பிராந்திய இயக்குனர் ஜோர்ஜ் லாரியா அட்ஜீ ஆகஸ்ட் 2022 இல் இலங்கைக்கு விஜயம் செய்த பின்னர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியின் தொடக்கத்தில் ஜோன் கீல்ஸ் குழுமத்தால் உருவாக்கப்பட்ட பலமுனை கொண்ட நெருக்கடி நிலைக்கான பதில் முன்முயற்சி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகிய மூன்று முக்கிய பகுதிகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை உள்ளடக்கியது. உடல்நலம் மற்றும் போஷாக்கின் கீழ் ஒரு முக்கிய திட்டமான ஜோன் கீல்ஸ் பாடசாலை உணவுத் திட்டம் (பாசல் திரிய) கல்வி அமைச்சுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் திகதி தேசிய சிறுவர்கள் தினத்தை நினைவுகூரும் வகையில் தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டில், நாடு முழுவதும் பல இடங்களில் உள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதில் இந்த திட்டம் கருவியாக உள்ளது.

ஜோன் கீல்ஸ் பாடசாலை உணவுத் திட்டம் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஃபவுன்டேஷன் ஆல் குழுமத்தின் வணிகங்களான சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் (எலிஃபன்ட் ஹவுஸ்), சினமன் ஹோட்டல் & ரிசார்ட்ஸ், ஜெய்கே மார்க்கெட்டிங் சர்வீசஸ் (கீல்ஸ்) மற்றும் ஜோன் கீல்ஸ் புரப்பொர்ட்டிஸ் ஆகியவற்றின் தீவிர ஈடுபாட்டுடன் இயக்கப்படுகிறது.

# மொபைல் Point of Sale தீர்வையை தோற்றுவித்துள்ள மக்கள் வங்கி



புத்தாக்கமும், வசதியும் ஒன்றிணைந்திருக்கும் இக்காலகட்டத்தில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைகள் மற்றும் நுண்மட்ட வணிகங்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அனைத்தையும் மாற்றும் வல்லமை கொண்ட *Mobile Point of Sale (mPOS)* தீர்வுக்கு முன்னோடியாக செயல்படுவதில் மக்கள் வங்கி முன்னணியில் உள்ளது.

*Mobile Point of Sale* ஐப் பயன்படுத்துவதன் மூலமாகக் கிடைக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளில் ஒன்று பாரம்பரிய அட்டை முனையங்களுடன் ஒப்பிடும்போது அதன் குறைந்த அளவிலான தள்ளுபடி/தரகு வீதமாகும். வணிகர்கள் இந்த கொடுப்பனவுத் தீர்வை குறைந்தபட்ச ஆவணங்கள் மற்றும் சிரமங்களின்றி பெறலாம். மேலும், மாதாந்தம் இவ்வளவு தொகையை செலுத்த வேண்டும் என்ற வகையில் கட்டாயமான சேவைக் கட்டணங்கள் அல்லது கடப்பாடுகள் எதுவும் இல்லை. இது ஒரு நெகிழ்திறன் கொண்ட மற்றும் செலவு குறைந்த தீர்வாக அமைகிறது. இதனை வாங்கியவுடன், இச்சாதனம் முழுமையாக வணிகருக்குச் சொந்தமானது.

*Mobile Point of Sale* என்பது ஒரு கையடக்கமான மற்றும் இலகுவில் எடுத்துச் செல்லக்கூடிய சிறிய சாதனமாகும். இது தங்குதடையின்றி செயல்படுவதை உறுதி செய்வதற்காக மீள்மின்னேற்றம் (ரீசார்ஜ்) செய்யப்படக்கூடிய மின்கலத்துடன் (பேட்டரி) பொருத்தப்பட்டுள்ளது. இந்த சாதனம் வணிகர்கள் சிரமமின்றி தம்முடன் எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# கொமர்ஷல் வங்கியின் 'Vibe' புதிய தலைமுறை விருதான WIM விருதை வென்றது



கொமர்ஷல் வங்கியின் இளைய தலைமுறையினருக்கான கணக்கான Vibe இனை ஊக்குவிப்பதற்காக செயற்கை நுண்;ணறிவின் (AI) மூலம் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரம், 2023ம் ஆண்டுக்கான புதிய தலைமுறை மகளிர் முகாமைத்துவ விருது (WIM) மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபை என்பனவற்றின் "ஆண்டுக்கான இளைஞர் பிரசார' விருதை வென்றுள்ளது.

'Tomorrow is Yours' ('நாளை என்பது உங்களுடையது') என்ற Vibe கணக்கிற்கான சுறுசுறுப்பான பிரசாரம் இளைஞர்களுக்கு அவர்களது வாழ்வு மற்றும் எதிர்காலம் என்பன பற்றிய ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. AI பாவனை மூலம் சாத்தியங்கள் முடிவற்றவை என்பது அவர்களுக்கு உணர வைக்கப்பட்டது. AI இன் உதவியோடு கனவுகளோடு வாழும் தங்களைப் பற்றிய ஒரு பார்வையை அபிவிருத்தி செய்வது மட்டுமன்றி அந்தக் கனவுகளை அடைந்து கொள்வதற்கான வழிகாட்டலும் அவர்களுக்கு இந்தப் பிரசாரத்தின் மூலம் வழங்கப்பட்டது.

www.yourvibe.lk என்ற மைக்ரோசைட் மூலம், Meta> Instagram> LinkedIn> Google Ads, மேலும் பல ஊடக நிறுவனங்களின் இணையத் தளங்கள், பிரபலமான சமூக ஊடக செல்வாக்குள்ள குழுக்கள் என்பன வழியாக இந்தப் பிரசாரங்கள் இடம்பெற்றன. 'Tomorrow is Yours' பிரசாரமானது 5000த்துக்கும் அதிகமான எதிர்கால கனவுகளை உருவாக்க உதவியுள்ளது. பங்கேற்ற இளைஞர்களில் 88% வீத மானவர்கள் மூன்று மாதங்களில் நான்கு தடவைகளுக்கும் அதிகமாகப் பங்கேற்றுள்ளனர், 6000த்துக்கும் மேற்பட்ட தலைமைகள் உருவாகி உள்ளன. அத்தோடு குறிப்பிட்ட Vibe பிரசார காலப் பகுதியில் Vibe இளைஞர் கணக்கை திறப்பதில் கணிசமான அளவு வளர்ச்சியும் காணப்பட்டுள்ளது என வங்கி அறிவித்துள்ளது.

Meta விலும் தாக்கம் மிக்க பெறுபேறுகளை இந்தப் பிரசாரம் ஈட்டியுள்ளது.

2020ல் தொடங்கப்பட்ட கொமர்ஷல் வங்கியின் Vibe இளைஞர் கணக்கு இளைஞர்கள் தமது வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் அவர்களுக்கு பிரத்தியேகமான ஆதரவை விஷேட நன்மைகளுடன் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அவர்களது அபிலாஷைகளை முன்னேற்றும் வகையில் அவர்களுக்கு உதவிசெய்து அத்தோடு கணக்கு வைத்திருப்பவர் விளையாட்டுத் துறையில் சாதனைகளை ஈட்டும் போது அதற்கான வெகுமதிகளை வழங்கும் வகையிலும் இது அமைந்துள்ளது.

# இலங்கையின் Audio துறையில் ஒரு தசாப்தகால வளர்ச்சியினைக் கொண்டாடும் Digital Ear



கொழும்பு, 22.10.2023: இலங்கையில் உயர்தர Audio தீர்வுகள் மற்றும் உயர்மதிப்பு வாழ்க்கை முறை தயாரிப்புகளில் பிரசித்திபெற்ற விநியோகஸ்தரான Digital Ear ஆனது அண்மையில் தனது பத்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

கொழும்பின் பிரபல பகட்டு உணவகங்கள் மற்றும் மதுஅருந்தகங்களில் ஒன்றான Verticle by Jetwingஇல் இடம்பெற்ற இம் மைல்கல் நிகழ்வின்போது, Digital Ear ஆனது Void Acoustics இனைப் பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச விநியோகஸ்தர்களை மற்றும் உள்ளூர் வாடிக்கையாளர்கள் உட்பட 150 இக்கும் மேற்பட்ட மதிப்பிற்குரிய விருந்தினர்களினை ஒன்றிணைத்தது. இந்நிகழ்வினில் நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுச் சின்னமானது இம்மாதம் 22ம் தகதியன்று வெளியிடப்பட்டது. மேலும் அதன் விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

Digital Ear இன் ஸ்தாபகரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான Haren Perera அவர்கள் இம் மைல்கல் நிகழ்வினைப் பற்றிய தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்: "இலங்கையில் Audio ஆனது சிறந்து விளங்கும் ஒரு தசாப்தத்தினை நினைவுகூருவதானது எனக்கு பெரு மகிழ்ச்சியினை அளிக்கின்றது.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு முன்பு, எமது நாட்டிலே மிக உயர்ந்த தரமான Audio தீர்வுகளை வழங்குவதற்கான ஒரு தொலைநோக்குப் பயணத்தினை நாம் ஆரம்பித்தோம். ஆனால் இன்றோ, எமது நிறுவனமானது பூரணத்துவமான Audio தொடர்பாக எமது இடையறாத முயற்சிக்கு ஒரு தக்க சான்றாக உயர்ந்து நிற்கின்றது. உள்ளூர் Audio துறையின் மதிப்பினை அதிகரிப்பதன் மூலம், Audio பொறியியலின் எல்லைகளைக் கடந்து ஏராளமான தனிநபர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் எமது உலகத் தரம் வாய்ந்த Digital சாதனங்களின் மூலம் யாவரும் ஒலியில் புதிய பரிமாணங்களை அனுபவிக்க உதவுவதில் நாங்கள் பெருமை கொள்கின்றோம்."

# தனது தங்க விருது வெற்றியாளர்களுக்கு வெகுமதி வழங்கிய யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது 2022 வருடாந்த விருதுகள் வழங்கலில் தங்க விருது வெற்றியாளர்களுக்கு, மனம் மறவாத சொகுசு ஹோட்டல் சவாரியை வழங்கியிருந்தது. இந்த சுற்றுலாவில் 125 க்கு அதிகமான வெற்றியாளர்களும் அவர்களின் குடும்பத்தாரும் பங்கேற்று, மனம் மறவாத அனுபவத்தைப் பெற்றிருந்தனர்.

வருடாந்த விருதுகள் 2022 தங்க விருது வெற்றியாளர்களுக்கான சொகுசு ஹோட்டல் சுற்றுலா வாய்ப்பை, யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கியிருந்ததனூடாக, முகவர் விநியோக விற்பனை செயலணிப் பிரிவில் சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களின் உயர் பங்களிப்புக்கான தமது கௌரவிப்பை வெளிப்படுத்தியிருந்தது. சொகுசுடன், களிப்பூட்டும் ஒன்றுகூடல் செயற்பாடுகளை இணைத்து, அணியினரிடையே நீண்ட காலம் நிலைத்திருக்கும் பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது.

சிறப்பு மற்றும் அணிநிலைச் செயற்பாடுகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பணிச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநர் எனும் வகையில், தனது சிறந்த அணி அங்கத்தவர்களின் சாதனைகளை கௌரவித்து, கொண்டாடுவதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த சுற்றுலாவில் வெற்றியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு பொருந்தக்கூடிய வகையில் பரந்தளவு செயற்பாடுகள் அடங்கியிருந்தன. சுற்றுலாவின் பிரதான உள்ளம்சமாக, மாபெரும் இரப்போசண நிகழ்வு அமைந்திருந்தது.

# ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மேன்மையில் 15 ஆண்டுகள் நிறைவை எட்டியது



இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், 2023 ஆம் ஆண்டில் தனது 15 ஆண்டுகள் நிறைவைப் பெருமையுடன் கொண்டாடுகின்றது. குறிப்பிடத்தக்க இச்சாதனை, ஆரோக்கியமான வாழ்வின் மீது அது காண்பிக்கும் ஓயாத அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி, இலங்கையின் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் சமூகத்தைக் கட்டியெழுப்புதல், புத்தாக்கம் மற்றும் சாதனைகள் நிறைந்த போற்றத்தக்க பயணத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

நோயாளரை மையப்படுத்திய கவனிப்பு, அதிநவீன தொழில்நுட்பம், சமூக சேவை முன்னெடுப்புக்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கான நலத் திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, மிகவும் தைரியமான வணிக நகர்வுகளின் மூலமாக ஹேமாஸ் வைத்தியசாலை குழுமம், சுகாதாரத்தை மேம்படுத்தும் அதேவேளை, உள்ளங்களைக் கவர்ந்து, இலங்கையில் மிகவும் நம்பிக்கை மிக்க மற்றும் போற்றப்படுகின்ற நிறுவனம் என்ற தனது இடத்தை ஆணித்தரமாக நிலைநாட்டியுள்ளது.

வத்தளைப் பிரதேசத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலை என்ற பெருமையைக் கொண்ட ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், இச்சமூகத்தின் பாதுகாவலராக மாறி, புதிய வாய்ப்புக்களைத் தோற்றுவித்து, சமூகத்துடன் கைகோர்த்து வளர்ச்சிப்பாதையில் பயணித்து வருகின்றது. தலவத்துகொடையில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் ஆரம்பிக்கப்பட்டமையால், வளர்ந்துவரும் புறநகர்ப் பகுதியில் உள்ளவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பை இலகுவாக வழங்குவதுடன், இச்சமூகத்தின் மத்தியில் அபிவிருத்திக்கான தாராளமான வாய்ப்புக்களையும் தோற்றுவிக்கின்றது.

இச்சாதனைமிக்க பயணம் தொடர்பில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி லகித் பீரிஸ் அவர்கள் கருத்து வெளியிடுகையில், "நோயாளரை மையப்படுத்திய கவனிப்பு, டிஜிட்டல் சுகாதார மேம்பாடுகள், இலத்திரனியல் முறையிலான சுகாதாரப் பதிவேடு மற்றும் தொலைவியக்க அடிப்படையிலான மருத்துவ சேவைகள் போன்ற எமது முன்னோடி முயற்சிகள் சமூகத்தின் மீதான எமது அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன. கடந்த 15 ஆண்டுகளாக, இலங்கையில் சுகாதாரப் பராமரிப்புத் துறையின் வடிவத்தை நாம் மாற்றியமைத்துள்ளதுடன், இலங்கை மக்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற அனைத்து வகையான உலகத்தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்கி, எதிர்வரும் காலங்களிலும் தொழில்நுட்பரீதியான மேம்பாடுகளை தொடர்ந்தும் வழங்க ஆவலாக உள்ளோம்," என்று குறிப்பிட்டார்.

# இலங்கை – மலேசியா வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த வர்த்தக ஊக்குவிப்பு தொடர்பில் நடந்த ஆரம்ப கூட்டம்



இலங்கை – மலேசியா வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த வர்த்தக ஊக்குவிப்பு பணியின் ஆரம்ப கூட்டம் மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸ், இலங்கை வர்த்தகங்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் உயர் ஸ்தானிகராலயம் வழங்கக்கூடிய ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவு குறித்து பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

வேலை வாய்ப்புகளுக்கு மலேசிய அரசாங்கம் அளித்து வரும் சிறப்பான ஆதரவிற்கு அவர் பாராட்டு தெரிவித்தார். நிறுவனங்களின் முயற்சிகளில் அவர்களுக்கு உதவுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் அவர் தனது உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இலங்கை – மலேசிய வர்த்தக சபையை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் எம்.எச்.கே.எம். ஹமீஸ் கருத்துத் தெரிவித்ததோடு, இலங்கையிலிருந்து ஏற்றுமதி விரிவாக்கத்தின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையடினார். போர்ட் சிட்டியில் உயர்மட்ட முதலீடு குறித்தும் கருத்து வெளியிட்டார்.

இந்த சந்திப்பு இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. இலங்கை மலேசியா வர்த்தக சபை வர்த்தகக் குழு இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல், மேலும் கூட்டு முயற்சிகளை எதிர்பார்க்கிறது.

(ருஸைக் பாரூக்)

டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம்

# சட்டங்களை முறைப்படுத்தல் ஊடாக நாட்டுக்கான முதலீடுகளை ஈர்க்கலாம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சட்டங்களை முறைப்படுத்துவது மற்றும் டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு வருகை தரும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள முடியுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பொருத்தமான வகையில் நாட்டின் சட்டங்கள் புதுப்பிக்கப்படுவது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனம் ஒன்றை அவமதித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்: சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவரும் இத்தகைய காலத்தில் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் மிக முக்கியமானவை. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரும்போது வழக்குகள் நிறைவு பெறும் காலம் தொடர்பில் கேள்வி எழுப்புவார்கள். அது தொடர்பில் எம்மால் உறுதியான பதிலை தெரிவிக்க முடியாது. வழக்குகள் முடிவடைவதற்கு பல ஆண்டுகள் செல்கின்றன. அவர்களுக்கு நாம் அதை எவ்வாறு கூற முடியும்? அவ்வாறு நாம் அதனை தெரிவித்தால் அவர்கள் முதலீடுகளையும் நிறுத்திவிட்டு மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கு திரும்பி விடுவார்கள். நாட்டுக்கு முதலீடுகள் கிடைக்காவிட்டால் எம்மால் நாட்டில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாது.

நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வருகை தராமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் அதற்கான சட்ட ரீதியான தீர்வை பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் காலம். இரண்டாவது காரணம் அதிகார வாதம். இந்த காரணங்களால் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதற்கு யோசிக்கின்றனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### அத்தியாவசிய சேவையாக...

தபால் திணைக்களத்தின் வளங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது. நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டுமென, அதன் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்கள் உடனடியாக போராட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ள தபால் திணைக்களம், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று இரவு முதல் இரத்து செய்தது. இவ்வாறான நிலையிலேயே, தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் பந்துல குணவர்தன வெளியிட்டுள்ளார்.

### பாராளுமன்றின் மீது மக்களது...

உரையாற்றிய அமைச்சர்: பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பது 225 எம்பிக்களினதும் பொறுப்பாகும். பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன மீது, இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த பிரயோகித்த வார்த்தைகள் தவறானவை. அதை, அவர் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி ரோஹிணி கவிரத்ன மீது தகாத வார்த்தைகளை பிரயோகித்ததாக குறிப்பிட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால், சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் கருத்துக்களை முன்வைத்த போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பது சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும். பாராளுமன்றம் பயனற்றதென, நாட்டு மக்கள் வெறுப்பதை நியாயப்படுத்தும் வகையில்தான், பாராளுமன்றத்தில் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த குறிப்பிட்ட பதிலில், முதல் வார்த்தையில் எவ்வித முரண்பாடும் கிடையாது.

ஆனால், அவர் அதனைதொடர்ந்து குறிப்பிட்ட வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவை தவறான சொற்பிரயோகங்கள். அந்த வகையில், அவர் தவறை ஏற்றுக் கொண்டு அதை திருத்திக் கொள்ள வேண்டும்.அல்லது சபைக்கு தலைமை தாங்குபவர் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளும் தரப்பு அல்லது எதிர்த்தரப்பினருக்கோ சார்பாக நான் பேசவில்லை. இராஜாங்க அமைச்சரின் கருத்து தவறு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### துறைமுக அபிவிருத்திக்கு...

இதற்கிணங்க 553 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கவுள்ளதாக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (DFC) நேற்று அறிவித்தது. பங்காளரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், உள்ளூர் சமூகங்களின் முன்னேற்றத்தில் முதலிடல் மற்றும் உள்ளூர் நிதி நிலைமைகளுக்கு மதிப்பளிக்கும் உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளித்தல் என்பவற்றில், அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை இப்புதிய முனையம் பிரதிபலிக்கிறது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி,பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு (இந்தியாவுடன் உட்பட) ஆகியவற்றை ஏற்படுத்துவதில் அமெரிக்கா கொண்டுள்ள நீடித்த அர்ப்பணிப்பை இம்முதலீடு மேலும் நிரூபிக்கிறது.

கொழும்புத் துறைமுகத்துக்குள் அமைந்துள்ள ஆழ்கடல் மேற்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திக்கு உதவி செய்வதற்காக Colombo West International Terminal Private Limited நிறுவனத்துக்கு வழங்கப்படும் 553 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு நேற்று விஜயம் செய்தார்.

புதிய முனையத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி பணிக்குழுவின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் ஆகியோர் பிரதம நிறைவேற்று அதிகாரி நேதனுடன் இணைந்து கொண்டனர்.

"உலகின் பிரதான கப்பல் போக்குவரத்து பரிமாற்று மையங்களில் (key transit hubs) இலங்கையும் ஒன்றாகும். உலகில் பயணிக்கும் அனைத்து கொள்கலன் கப்பல்களில் அரைவாசி இலங்கையின் கடல் வழியாகப் பயணிக்கின்றன. மேற்கு கொள்கலன் முனையத்துக்கான 553 மில்லியன் டொலர்களை தனியார் துறை கடன்களாக வழங்கும் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் அர்ப்பணிப்பு, இலங்கையின் இறையாண்மைக் கடன்களை அதிகரிக்காமல் பாதுகாக்கும். கப்பல் திறனை விரிவுபடுத்தி, இலங்கைக்கு அதிக செழிப்பை உருவாக்கும் அதேவேளை பிராந்தியம் முழுவதுமுள்ள எமது நட்பு நாடுகளின் நிலையையும் இவ்வுதவி பலப்படுத்தும்" என அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி ஸ்கொட் நேதன் கூறினார். இலங்கை தனது பொருளாதார அடித்தளத்தை மீளப் பெறுவதானது, சுதந்திரமான மற்றும் வளமான இந்தோ பசிபிக்கிற்கான எமது பகிரப்பட்ட தொலை நோக்கை மேலும் மேம்படுத்தும்." என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் கூறினார்.

### நீர்க்கட்டணத்தில் தேசிய கொள்கை...

பட்டுள்ளதுடன், வீடுகளுக்கான குடிநீர் விடயங்களுக்கே முன்னுரிமையளிக்கப்படுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார். இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர், நீர் கட்டணம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அல்ல.

எவ்வாறெனினும் வீட்டு நீர் வழங்கள் பிரிவு தொடர்பிலேயே நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். அத்துடன் விவசாயத்துக்கான நீரை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வோட்டர் மார்க்கெட் திட்டம் என்பது ஒரு நீண்ட கால திட்டம். அது தொடர்பில் நாம் இன்னும் சிந்திக்கவில்லை. அதற்கான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை. விஜித ஹேரத் எம்பி, தெரிவிப்பது போல் அது தொடர்பில் எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவும் இல்லை.

### மருத்துவர்கள், சுகாதாரத்துறை...

அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேற்படி பேச்சுவார்த்தையில் பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர்கள் பத்துப் பேரும் கலந்து கொண்டதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் டாக்டர்களான பத்துப் பேர் கலந்து கொண்ட விஷேட பேச்சு வார்த்தை நடைபெற்றது. அத்துடன் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க முக்கியஸ்தர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான நிலையிலும் டாக்டர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் ஏனைய ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய நிவாரணங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

அரசாங்கம் என்ற வகையில் அவர்களுக்கு முடிந்தளவு நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பி இராசமாணிக்கம் சாணக்கியன் சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சாணக்கியன் தமது கேள்வியின் போது, கிழக்கில் மாகாண சபையின் நிர்வாகத்தில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் காணப்படும் டாக்டர்கள் பற்றாக்குறை, அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

### 'அஸ்வெசும' திட்டத்தை...

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகள் சிலரின் தலைமையில் நடைபெற்றதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று, 'அஸ்வெசும' வேலைத் திட்டத்தை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் அதிகாரிகளை நியமிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன் 'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டத்தில் காணப்படும் தொழில்நுட்ப ரீதியான சிக்கல்களை நிவர்த்தித்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கான இயலுமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்துக்கமைய 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் திகதி 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக வெளியிடப்பட்ட, அமைச்சரவை அனுமதியுடனான, நலன்புரி கொடுப்பனவுகளை பகிர்ந்தளிக்கும் கட்டளைகளை திருத்தம் செய்து நடைமுறைப்படுத்தப்பட்ட 2022, 12, 15 இன், 2310/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

### 2,763 கிராம சேவகர்கள்...

குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதமருடனான வினாக்கள் நேரத்தின்போது, சஞ்சீவ எதிரிமான்ன எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் 14,022 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. அதில் 2,763 கிராமசேவகர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்பும் வகையில், 28.05.2023 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 2230 இலுள்ள அறிவிப்பில், பரீட்சைகள் திணைக்களம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சையை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன. இதன்படி நேர்முகப்பரீட்சை மூலம் கிராம சேவகர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவரென்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கையில் முதன்முதலில்...

ஈடுபடுவதற்கான வாய்ப்பு டிசம்பர் மாத இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரிமாத தொடக்கத்தில் வழங்கப்படுமென, அதன் நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சாகச விளையாட்டில் ஈடுபட தாமரை கோபுரத்துக்கு வருகை தருமாறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டினரிடம் அவர் வேண்டுகோளும் விடுத்துள்ளார். தாமரை கோபுரத்திலிருந்து 195 மீற்றர் ஏறி, இறங்கும் சாகசத்தில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஈடுபட்டது.

பொது அனுபவத்துக்காக இத்திட்டத்தை பெற்ற பின், நாட்டிலேயே மிக உயரமான கட்டடத்திலிருந்து கீழே இறங்கிய அனுபவத்தை மக்கள் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

### தீபாவளி: மத்திய மாகாண...

காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், இது தொடர்பான கோரிக்கையை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகேவிடம் விடுத்திருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்று திங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கும், இத்தினத்திற்குப்பதிலாக எதிர்வரும் சனிக்கிழமை (18) பாடசாலைகளை நடத்துவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

### மாபலாகமயில் கொழும்பு வந்த...

பஸ் நாகொட – கல்அஸ்ஸ பகுதியிலேயே விபத்தக்குள்ளானது. நேற்றுக் காலை இடம்பெற்ற இவ்விபத்து தொர்பில் தெரியவருவதாவது,

பஸ்ஸுக்கு முன்பாக ஒரே திசையில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி, திடீரென வலது பக்கம் திரும்பியபோது, பஸ்ஸின் சாரதி விபத்தை தடுப்பதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது, பஸ் வீதியை விட்டு விலகி, மதிலொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்த 13 பேர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை நாகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சித்ரசிறி குழுவின் அறிக்கை...

அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு உத்தேச யாப்பு வரைபை அமைச்சரவை உபகுழுவிடம் சமர்ப்பித்து பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி அறிக்கை இன்று (09) பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு ஆராய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவை உபகுழுவின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த உத்தேச புதிய யாப்பு வரைவின் மூலம் இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை நியமிக்கும் முறையை முற்றாக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் அதன் உள்ளடக்கம், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பனவும் திருத்தப்பட்டுள்ளன.

உத்தேச புதிய கிரிக்கெட் யாப்பின் பிரகாரம், இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை 04 வருட காலத்துக்கு நியமிக்கப்படும். 18 உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையினால் நிர்வகிப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது. கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரங்கள் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட வேண்டுமெனவும், அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் நாயகத்துக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த பணிப்பாளர் சபையின் 08 உறுப்பினர்கள் பரிந்துரைக்கப்பட்டு பெயரிடப்படும் பணிப்பாளர்கள் என்பதோடு அவர்களை பரிந்துரைக்கும் அதிகாரம், 06 பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த குழுவில் தேசிய கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர், வரையறுக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரினால் பெயரிடப்படும் அதிகாரி, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி,இலங்கை வணிகச் சபையின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி, இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி, இலங்கை முகாமைத்துவ கணக்காய்வு நிறுவனத்தின் (CIMA Sri Lanka) தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவர்.

பணிப்பாளர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் தேர்தலின் ஊடாகவே தெரிவு செய்யப்படுவர். அந்த தேர்தலில் 05 கிரிக்கெட் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 01 பணிப்பாளரும், கிரிக்கெட் நடுவர்களின் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும், பெண்கள் கிரிக்கெட் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களின் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும் தெரிவு செய்யப்படுவர்.

கிரிக்கெட் விளையாட்டின் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி செயற்பாடுகளை ஒழுங்குமுறையின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வதற்காக 12 குழுக்களை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட், கணக்காய்வுக்குழு, பங்குதாரர் கொடுக்கல் வாங்கல் குழு, வேட்பு மனுக் குழு, தெரிவுக்குழு, போட்டிக்குழு, வசதிகள் மேம்பாட்டுக் குழு, சுற்றுலாக் குழு, விதிகள் தீர்ப்பு ஒழுக்கம் தொடர்பான குழு, முதலீட்டுக் குழு, தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து மற்றும் மோசடி தடுப்பு குழு மற்றும் சம்பளக் குழு உள்ளிட்ட குழுக்களை நிறுவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் சபையில் நிறைவேற்றம்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஊழல் எதிர்ப்பு திருத்த சட்டமூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நேற்று சபையில் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று மேற்படி சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த வகையில் வாக்கெடுப்பில்லாமல் ஊழல் தடுப்பு திருத்த சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டன.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் கடந்த ஜூலை (06) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஜூலை 19 ஆம் திகதி பாராளுமன்றக் குழு நிலை விவாதத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும், இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

எவ்வாறாயினும் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நேற்று அது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



**மேஷம்:** புனித பயணங்களால் விரையங்கள் ஏற்படும். கைகூடுவது போல் இருந்த கல்யாண முயற்சி கடைசி நேரத்தில் கைநழுவி செல்லலாம்.



**ரிஷபம்:** உத்தியோகத்தை பொருத்தவரை பாதிப்பு ஏற்படாது. உங்களுக்கு இடையூறு செய்தவர்கள் விலகுவர். மேலதிகாரிகள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.



**மிதுனம்:** உடலில் தெம்பும் உற்சாகமும் குறையும். திடீர் திடீரென வரும் விரயங்கள் மனதை வாட வைக்கும். செய்யும் முயற்சிகளில் பலன் கிடைப்பது அரிது.



**கடகம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் அரிய பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். கட்டிய வீட்டை பழுது பார்ப்பதிலும் கவனம் செலுத்துவீர்கள்.



**சிம்மம்:** புதிய யுக்திகளை கையாண்டு வெற்றி பெறும் சூழ்நிலை உண்டு. உடன்பிறப்புக்களின் குணத்தில் மாற்றம் ஏற்படலாம். வழக்குகளில் திடீர் திருப்பங்கள் வரலாம்.



**கன்னி:** குடும்ப ஒற்றுமை குறையலாம் வாக்குவாதங்களை தவிர்க்கவும். பிள்ளைகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான்.



**துலாம்:** என்றைக்கோ வாங்கி போட்ட இடம் பல மடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி மகிழ்ச்சியை தரும். குறுக்கீடு சக்திகள் அகலும். கொடுக்கல் வாங்கல்கள் சரள நிலைக்கு வரும்.



**விருச்சிகம்:** வாழ்க்கைத் துணை வலியே கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. உத்தியோகம் தொடர்பாக வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும்.



**தனுசு:** உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். வீடு வாகனம் வாங்க கடன் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும்.



**மகரம்:** தொழிலில் கூட்டாளிகளுடன் பிரச்சினைகள் உருவாகலாம். பூர்வீக சொத்து பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். மனப்பயம் அதிகரிக்கும்.



**கும்பம்:** வாகன பழுதுகளின் காரணமாக வாட்டம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள இயலாமல் போகலாம். கவனம் தேவைப்படும் நேரமிது.



**மீனம்:** பயணங்கள் பலன் தரும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர்.

### அனைத்து பொலிஸாருக்கும்... (03ஆம் பக்கத் தொடர்)

சிறைச்சாலைகளில் உள்ள நிலையில் போதைப்பொருள் வர்த்தகத்தை முன்னெடுக்கும் தரப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவுடன் கலந்துரையாடியுள்ளோம். அத்துடன் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் நாட்டு மக்களின் முழுமையான ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்க்கிறோம்.சீருடையணிந்த பொலிஸார் அவர்களின் பாதுகாப்பை அவர்களே, உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### ஆழமற்ற கடற்பகுதிகளில்... (03ஆம் பக்கத் தொடர்)

இந்த மீன்கள் இனப்பெருக்க நோக்கத்திற்காக கரைக்கு வருகின்றன.

இவற்றின் முதுகில் அதிகளவான முட்கள் போன்ற எலும்புகள் உள்ளன. இவை மிகவும் விஷத்தன்மை பொருந்தியவையாகும்.

### வடக்கு பொதுப் போக்குவரத்தை...

தொழிற்சங்கங்கள் உட்பட சில அரசியல்வாதிகள் இந்த உண்மையை புரிந்து கொள்ளவில்லை. அரச அதிகாரம் கொண்ட அரசாக செயற்படாமல் இந்நிலைமையை புரிந்து கொள்ள முடியாது. அத்தகைய பொறுப்பை ஏற்காத ஒருவர் எந்த அறிக்கையையும் வெளியிடலாம். ஆனால், ஒரு அரசாங்கம் அப்படி பொறுப்பில்லாமல் செயல்பட முடியாது. நான், இந்த அமைச்சை பொறுப்பேற்ற வேளை 39 டிப்போக்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அந்த எண்ணிக்கை 09 ஆக குறைக்கப்பட்டுள்ளது. எவ்வளவோ சிரமங்கள் இருந்தபோதிலும், பொதுப் போக்குவரத்தின் இன்றியமையாத தன்மையை அடிப்படையாகக் கொண்டு இ.போ.ச வுக்கு புதிய நியமனங்களை வழங்க எம்மால் முடிந்தது. என்றார்.

### ஐந்து நாட்களில் 22 ஆயிரம்...

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து மூவாயிரத்து 866 பேர் வந்துள்ளனர்.

### பண்டாரவின் சடலம் இன்று...

சேவைக்கு சொந்தமான விமானம், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இன்று காலை 8.30 மணியளவில் வந்தடையவுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் கொழும்பிலுள்ள இஸ்ரேலிய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் சுஜித் பண்டாரவின் உறவினர்கள், கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சடலத்தை பொறுப்பேற்க வருவதாக தூதுவர் தெரிவித்தார். இதன் பின்னர் வழமையான நடைமுறையின்படி சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படுமென அவர் சுட்டிக்காட்டினார். இலங்கைத் தூதரகத்தால் கடந்த (06) பெறப்பட்ட பண்டாரவின் பூதவுடல் இலங்கை நேரப்படி (07) மாலை 5.30 மணியளவில் இலங்கைத் தூதுவர் வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். விமான நிறுவனம். வெளிவிவகார அமைச்சு, இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் இஸ்ரேலிலிருந்து இலங்கையர் குழுவினர் சுஜித் பண்டாரவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இலங்கை தூதரகத்துக்கு வந்ததாக நிமல் பண்டார தெரிவித்தார்.

# மாத்தளை (MDEF) அமைப்பின் ஏற்பாட்டில் நூல் வெளியீட்டு விழா













மாத்தளை கல்வி மேம்பாட்டு (MDEF) அமைப்பின் ஏற்பாட்டில் நூலாசிரியர் ஏ.எம். மாஹிர் தொகுத்த 'பாடசாலை அதிபர், ஆசிரியர் தாபன முகாமைத்துவமும் நடைமுறைகளும்' எனும் நூல் வெளியீட்டு விழா மாத்தளை கிராண்ட் சிட்டி ஹோட்டல் கேட்போர் கூடத்தில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்றைய தினம் மாத்தளையில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய கணக்காய்வு திணைக்களத்தில் கணக்காய்வு அத்தியட்சகராக பணியாற்றிவரும் ஏ.எம். மாஹிரின் ஐந்தாவது நூலாக 'பாடசாலை அதிபர், ஆசிரியர் தாபன முகாமைத்துவமும் நடைமுறைகளும்' என்ற நூல் 569 பக்கங்களுடன் 28 அத்தியாயங்களின் உள்ளடக்கங்களாக 11 பின்னிணைப்புக்களுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் என்.எம். இர்ஷான் (முப்தி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தளை அருள்மிகு ஏழுமுகக் காளியம்மன் திருக்கோயில் தலைவர் எஸ். சந்திரசேகரம் நூலின் முதற் பிரதியையும் விசேட அதிதியாக கலந்து கொண்ட ஏ.ஏ.எம்.வை. மரிக்கார் சிறப்பு பிரதியையும் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

நூல் அறிமுக உரையை மத்திய மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் உனைஸ் எம் ஆரிப் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நூலாசிரியர் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

மாத்தளை வலய கல்விப் பணிப்பாளர் ஜே.எம். இக்பால், உதவி கல்விப் பணிப்பாளர்கள், மதத் தலைவர்கள், சமூக சேவையாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**(மாத்தளை சுழற்சி நிருபர் எம்.சதூர்தீன்)**

## வானசாஸ்திர அறிவியலாளர் அனுர சி பெரேராவுக்கு விருது



மறைந்த கலாநிதி சி.டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரவின் 139 வது நினைவு தினத்தின் நிமித்தம் கன்னங்கர மன்றம் ஏற்பாடு செய்திருந்த 1960 முதல் இற்றை வரையும் வானசாஸ்திர அறிவியல் மற்றும் விண்வெளி விஞ்ஞானம் தொடர்பிலான அறிவைப் பரவலாக்கும் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் மத்துகம பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னணி வானசாஸ்திர அறிவியலாளர் அனுர சி பெரேரா 'பிரக்ஞா 2023' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனு பெஸ்குவல் இவ்விருதினை அனுர சி பெரேராவுக்கு வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.



வஸ்திரதானம் வழங்குவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சாய் சமர்ப்பணா சாரிடபிள் ட்ரஸ்ட் நிறுவனர் தொழில் அதிபர் ஜே.என் ஜெகத்ராம்ஜி, கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார். இவருக்கு ஆலயத்தின் நிர்வாகச் செயலாளர் வி. சுப்பிரமணியம் பொன்னாடை அணிவித்து அவரது சமூக ஆன்மீகப் பணிகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்த போது எடுத்தபடம்.

## பணிப்பாளர் நாயகமாக பதவியேற்பு

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிலிருந்து இராஜினாமாச செய்துள்ள அதன் பிரதம நிறைவேற்றதிகாரி டாக்டர் விஜித்த குணசேக்கர, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக கடமையேற்றுள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி டாக்டர் விஜித்த குணசேக்கரவை உடனடியாக பதவி விலகுமாறு, சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இதற்கமைவாக பதவியை இராஜினாமா செய்த டாக்டர் விஜித்த குணசேக்கர, நேற்று மீண்டும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக கடமையேற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் மாற்றுத் திறனாளிகளுக்காக புதிய சட்டம்

### தங்கிவாழ்வோர் மனநிலையில் எவரும் இருக்க வேண்டியதில்லை



மாற்றுத் திறனாளிகளுக்கான புதிய சட்டமூலமொன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில்,இப்புதிய சட்டமூலம கொண்டுவரப்பட உள்ளது.

மாற்றுத் திறனாளிகள் தொடர்ந்தும் தங்கி வாழ்வோர் என்ற மனநிலையில் இருக்க வேண்டிய சமூகமில்லை என்பதே அரசின் கொள்கை. இவர்களை இனிமேலும் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதக் கூடாது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (08) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல்,

சுமார் பதினாறு இலட்சம் மாற்றுத் திறனாளிகள் இதுவரை முறையாக சமூக மயப்படுத்தப்படவில்லை.ஜனாதிபதியின் முழுமையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் பேரில் எதிர்வரும் வருடத்தில் இவர்களுக்கான வேலைத்திட்டத்தை நாம், சிறப்பாக நடைமுறைப்படுத்தவுள்ளோம். டிசம்பர் மாதம் முதலாம் திகதி சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி ஒரு ஆரம்ப நிகழ்வாக மாற்றுத் திறனாளி சமூகத்தையும் ஏனைய சமூகத்தைப்போன்று, வலுவூட்டவும் அவர்களை அபிவிருத்திப் பணிகளில் இணைத்துக்கொள்ளவும்,

நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரமாணங்களுக்கு ஏற்பவும் சுற்றுலாத் துறையில் மாற்றுத் திறனாளி சமூகத்தை இணைத்துக்கொள்ளும் வகையிலும் , EMPO 2023 என்ற தொனிப்பொருளில் நிகழ்ச்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். கொழும்பு – கண்டி வரை மாற்றுத் திறனாளிகளுடன் பயணிக்கவுள்ளோம்.

எம்மைப் போன்று அவர்களுக்கும் அதே உரிமைகள், தொழில்நுட்ப வசதிகள் மற்றும் (Accessibility) வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ரயில் கட்டமைப்பு உள்ளிட்ட முழுமையான பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பிலும், மதஸ்தலங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு பயண வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதியாகத் தெரியப்படுத்துவதே இந்த கொழும்பு – கண்டி ரயில் பயணத்தின் விசேட நோக்கமாகும்.

## மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**



திருகோணமலை நிலாவெளி ஐயப்பன் கோயிலில் பூசை உதவியாளராக கடமையாற்றி வந்த 14 வயது சிறுவன், மின்சாரம் தாக்கி (08) உயிரிழந்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹர ஜோதி மண்டல பெருவிழா நடைபெற இருக்கின்றமையால், கோயிலில் வர்ணப்பூச்சு வேலைகள் நடைபெற்று வருகின்றன .

பூசை உதவியாளரான சிறுவன் கோயில் மேல்தளத்துக்குச் சென்று மின் குமிழ்களை பொருத்திக் கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் டயகம பகுதியைச் சேர்ந்த திருச்செல்வன் லுகநாத் (14 வயது) எனவும் தெரியவருகிறது. உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பிலான விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனாதிபதி ரணிலுக்கு சவுதி மன்னர் கைபட எழுதிய கடிதம் கையளிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவூதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் தம் கைபட விஷேட கடிதமொன்றை எழுதியுள்ளார்.

மன்னர் சல்மான், தம் கைபட எழுதியுள்ள இக்கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் நேற்று கையளித்துள்ளார். வெளிவிவகார அமைச்சில் வைத்து இக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இடம்பெற்ற சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சரும் தூதுவரும் கருத்துப் பரிமாறியுள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.11.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5291
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,788,616.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 8 4 0 7 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3533 சீட்டிழுப்பு திகதி 2023.11.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,055,975.60
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 24 34 49 72 விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 52036

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1639 2023.11.07
25295
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 413,620,456.00
ஆங்கில எழுத்து H சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 11 21 24 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 லக்கி
திகதி 2023.11.07 சீட்டிழுப்பு இலக்கம் 0117
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 0 5 6 7 4 0
L7 இலக்கம் 2 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 12,322,411.36

ராசி சுப பலன்
திகதி 2023.11.07 சீட்டிழுப்பு இலக்கம் 600
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,106,990.40
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 40 46 52 60
தனயோக இலக்கம் 49994 நாளுக்கான விதி எண் 28

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1321 2023.11.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 119,245,439.20
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 01 25 72 79 விசேட எழுத்து S
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14153

# நகர்வலம்



## பிரதமருடன் கம்போடிய, ஈரான் தூதுவர்கள் சந்திப்பு





பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் கம்போடிய தூதுவர் குவோங் கோயிக்கும் இடையிலான சந்திப்பொன்று (06) அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்தியாவுக்கான கம்போடிய தூதுவராக பணிபுரியும் இவர், புதுடெல்லியிலிருந்து பணியாற்றுவதுடன் இலங்கையிலும் தூதுவர் கடமைகளை மேற்கொண்டு வருகிறார். மேலும், ஈரானின் புதிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் அன்றைய தினம் (06) அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கது. இச்சந்திப்புகளில், பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கவும் கலந்து கொண்டார்.

## கொழும்பில் தேசிய விஞ்ஞான கண்காட்சி





உலக விஞ்ஞான தினத்தின் நிமித்தம் கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு தேசிய அருங்காட்சியக வளாகத்தில் ஏற்பாடு செய்துள்ள தேசிய விஞ்ஞானக் கண்காட்சியை உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், கல்வி அமைச்சின் செயலாளர் என்.என்.ரணசிங்க ஆகியோர் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுவதையும் மாணவர்களில் ஒரு பகுதியினர் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.



தென்னிந்தியாவிற்கான இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன், அசோக் குமார் தாஸ் ஆகியோர் சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆர்ட் ஹவுஸில் நடைபெற்ற தேஜஸ்வி ஹனியின் தஞ்சை ஓவியக் கலைக் கண்காட்சியில் (04) பங்கேற்றார். இயக்குநர் ஷங்கர் ஜிவால், தமிழ்நாடு காவல்துறை ஜெனரல் மற்றும் சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோரும் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் கடும் மழை; வான் கதவுகள் திறப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

அநுராதபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இராஜாங்கனை, அங்கமுவ மற்றும் உடவலவ நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த நாட்களில் பெய்து வரும் மழை காரணமாக இராஜாங்கனை குளத்தின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன் குளத்தின் மேலதிக நீரை வினாடிக்கு 10,850 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு கலாஓயவுக்கு திருப்பப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 4 அடி உயரத்தில் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார். அதனூடாக வினாடிக்கு 4100 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த் தேக்கங்களுக்கு அருகில் வசித்து வருவோர் கூடுதலான அவதானத்துடன் இருக்குமாறு இராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

உடவலவ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதனால் 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் தெரிவித்தார்.

## மின்சாரம் தாக்கி இளம் பெண் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மதுரங்குளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரெட்பானா புழுதிவயல் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (07) பிற்பகல் நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலாவி புழுதிவயல், ரெட்பானா பகுதியைச் சேர்ந்த குப்பை மரிக்கார் பாத்திமா சாபிகுனா (வயது 38) எனும் ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டில் மின்சார தேவைக்காக மின் வயரை எடுத்து கையாளுகையிலேயே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மின்சாரம் தாக்குதலுக்கு உள்ளான குறித்த இளம் பெண்ணை, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பேரவை உறுப்பினர் கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு தலைமையில் நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "இலங்கைத் தமிழர் சம்பிரதாயங்களும் வழக்காறுகளும்" எனும் தலைப்பில் முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் 'செந்தமிழ்ச்செம்மல்' 'கலைமாமணி' மு.சி.ஸ்ரீதயாளன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## களுத்துறை முஹியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு 'சோலா பவர்' மின்சாரம்

களுத்துறை முஹியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு "சோலா பவர்" மின்சார திட்டம் வழங்கப்பட்டுள்ளது. பேருவளை சீனன்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த பரோபகாரியொருவரினால் இந்த சோலா பவர் திட்டம் மேற்படி பள்ளிவாசலுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 40 இலட்சம் பெறுமதியான இத்திட்டம் தனது காலஞ்சென்ற தந்தையின் நினைவாக வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இத்திட்டத்தின் மூலம் 20 வருடத்துக்கான மின்சாரம் மஸ்ஜிதுக்கு இலவசமாக கிடைப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு களுத்துறை முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகம் சிறப்பாக ஒருங்கிணைத்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்து

## வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பி.க்கள் தமிழகம் சென்று விளக்க வேண்டும்

**கடற்படையின் பிரச்சினை அல்ல, வடக்கு மீனவர் பிரச்சினை என்பதை வலியுறுத்த வேண்டும்**

**- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமானால் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று, இங்கு நடப்பது இலங்கை கடற்படையினரின் பிரச்சினை அல்ல எனவும் வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களின் பிரச்சினையே என்பதை அங்கு தெளிவுபடுத்த வேண்டும் என, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்றொழில் நீரியல்வள சட்டமூலத் திருத்தம் தொடர்பான விவாதத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது,

"கடற்றொழில் அமைச்சு என்ற வகையில் நாம் மேற்கொள்ளும் சட்ட திருத்தங்கள் கடற்றொழிலாளர்களின் நிகழ்கால, எதிர்கால நன்மை கருதியதாகவே அமையும்.

எமது கடல் வளங்களை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். கடல் வளங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதை தடுக்க வேண்டும் என்பதுடன், கடற்றொழிலாளர்களும் கடலைப் பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்க்க வேண்டும்.

அத்துடன், அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களில் நாம் திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## கரைதுறைப்பற்று பண்பாட்டு விழா



**மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்**

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் கலாசாரப் பேரவை இணைந்து நடத்திய 2023ஆம் ஆண்டுக்கான கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உமாமகள் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் கலந்துகொண்டார்.

## உரும்பிராயில் வயோதிபர் கௌரவிப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம், கோப்பாய் தேசோதய சங்கத்தின் ஏற்பாட்டில் வயோதிபர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

கோப்பாய் தேசோதய தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ .சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

## வவுனியா நகரசபையின் முன்னாள் உபதலைவர் காலமானார்




**மாங்குளம் குறூப் நிருபர்**

மாங்குளத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பிரபல இந்துநாகரிக ஆசிரியரும் வவுனியா நகர சபையின் முன்னாள் உப தலைவருமான முத்துசாமி முகுந்தரதன் சுகயீனம் காரணமாக கடந்த திங்கட்கிழமை (06) காலமானார்.

பண்டாரிக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று புதன்கிழமை (08) இறுதிக்கிரியை நடைபெற்று, பூதவுடல் தட்சனாங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினூடாக தேர்தலில் போட்டியிட்டு, வவுனியா நகர சபைக்கு தெரிவாகி, உப தவிசாளராகவும் இவர் பொதுமக்களுக்கு சேவையாற்றியிருந்தார்.

### மன்னாருக்கு சீனத் தூதுவர் விஜயம்

## மீனவ குடும்பங்களுக்கு உலருணவு வழங்கிவைப்பு

**மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்**



மன்னாருக்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் Ki Chen Hong உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (07) விஜயம் செய்து, வங்காலையைச் சேர்ந்த 50 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு தலா 7,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை முதற்கட்டமாக வழங்கி வைத்தனர்.

சீனாவின் பௌத்த சங்கத்தினதும் இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கத்தினதும் உதவியில் முன்னெடுக்கப்படும் உலர் உணவு வழங்கும் திட்டத்துக்காக மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் 1,000 கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் மன்னாரில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் தள்ளாடி இராணுவ 541ஆவது படைப்பிரிவு அதிகாரி, அருட்தந்தையர்கள், கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பேசாலையில் நவ. 19 இல் 'கலைவிழி விருது' விழா

'கலைவிழி விருது' விழா தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் எதிர்வரும் 19ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) பேசாலை சங்கவி திரையரங்கில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

சங்கவி தியேட்டர் மற்றும் சங்கவி பிலிம்ஸ் ஆதரவுடன் 'விழிகள் கலா முற்றம்' நடத்தவுள்ள இவ்விழாவின் போது, பேசாலையில் நாட்டுக் கூத்து, மரபு நாடகங்களில் மிகவும் சிறப்பாக பங்காற்றிய சூசை ஞானப் பிரகாசம் லெம்பேட், செபமாலை விக்டர் ஜெயபாலன் பெர்னாண்டோ ஆகிய முதுபெரும் கலைஞர்கள் 'கலைவிழி' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் சங்கவி தியேட்டர் மற்றும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் பேசாலையில் ஏற்கெனவே நடைபெற்ற கலாவிபூஷன் விருது விழாவில் விருது பெற்ற விழிகள் கலா முற்ற கலைஞர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழிகள் கலா முற்றத்தின் இயங்கு நிலைக்கு அரங்க உதவி வழங்கி வரும் கலாநிதி சுரேஸ், தேசபந்து ஜெ.மெடோசன் பெரேரா ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழிகள் கலா முற்ற இயக்குநர், தேசிய கலைஞர் சாகித்யா எஸ்.ஏ.உதயன் தலைமை தாங்கும் இவ்விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு நுண்கலைப் பீடாதிபதி விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி சி.ஜெயசங்கர், சிறப்பு அதிதிகளாக பேசாலை பங்குத்தந்தை அருட்பணி அன்ரன் அடிகளார், மன்னார் பிரதேச செயலாளர் பிரதீப், சங்கவி பவுண்டேஷன் இயக்குநர் கலாநிதி துரைராசா சுரேஸ், மன்னார் கச்சேரி நிர்வாக அலுவலர் பிரின்சிலி ரின்சி பச்சேக், சிவனருள் அறக்கட்டளை இயக்குநர் செல்வரஞ்சன், சமூக சேவையாளர் ஜனாப் நியாஸ், கௌரவ விருந்தினர்களாக காவிய ஸ்ரீமன்னார் அமுதன், இயக்குநர் மெசிடோ யார்சன் பிகிராடோ, கலாவிபூஷணம் தர்மகுமார் சர்மா குருக்கள், புனித வெற்றிநாயகி அருட்பணிப்பேரவை செயலாளர் கி.மெக்லஸ் பெர்ணான்டோ, பொலிஸ் அதிகாரி எச்.எம்.கே.ஹேரத் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் மன்னார் மாவட்டக் கலைஞர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## நீண்டகாலமாக நூலக வசதிகளற்றிருந்த இரத்தினபுரி...

# நிவித்திகல தமிழ் வித்தியாலயத்தில் புதிய நூலகத்திறப்பு விழா



'குறிஞ்சி மலர்' எனும் தொனிப்பொருளில் மலையகத்தில் கல்வி, சமூகம் சுற்றுச் சூழல் அபிவிருத்தி நோக்கிய செயற் திட்டத்தின் கீழ் இறத்தினபுரி நிவத்திகல தமிழ் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நூலகத்திறப்பு விழா வைபவம் அதிபர் ராமசாமி நடராஜா தலைமையில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து



கொண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித் நூலகத்தை மாணவர்களின் பாவனைக்காக வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வு தொடர்பில் அதிபர் ராமசாமி



நடராஜா கருத்து தெரிவிக்கையில்;

பாடசாலையில் ஒரு சீரான நூலகம் இல்லாமை பெரும் குறைபாடாகும். மாணவர்களுடைய உள்ளத்தில் உள்ள உணர்வையும் அனுபவத் திறன்களையும் கிரகித்தல் திறமைகளையும் பெற்றுக் கொள்ள முடியாமையால் பாடசாலை மாணவ, மாணவிகள் பெரும் கஷ்டத்திலும் வேதனையிலும் காணப்பட்டனர்.

ஆசிரியர் குழாத்தினர் ஓய்வுவேளையில் கூட நூலகத்தை பயன்படுத்துவதற்கு வசதிகள் இருக்கவில்லை. எனவே, இந்த அவல நிலை குறித்து கிளிநொச்சியிலுள்ள சமூக நிறுவனங்களிடம் எடுத்துரைத்தோம்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு நூலகத்தின் வகிபாகம் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அது கல்வியின் மூலதனம் என்று கூறுவார்கள். நூலகம் பாடசாலை மாணவர்களின் அனைத்து கற்றல் நடவடிக்கைகளிலும் வெவ்வேறு வகிபாகத்தை கொண்டு நிற்கின்றன. அதேபோல், மாணவர்களுடைய பரீட்சை அடைவு மட்டத்திற்கும் எழுச்சிக்கும் வித்திடக் கூடியவை இந்த நூலகமாகும்.

எனவே, இந்த வாசிப்புப் பழக்க வழக்கங்கள் இல்லாமையின் காரணமாக பிள்ளை




கள் சமூகச் சீரழிவுகளுக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி சீரழிந்து போகும் நிலைக்கு ஆளாகி விடுகின்றனர்.

அந்த வகையில் எங்கள் பாடசாலையில் மிகவும் பழைமை வாய்ந்த கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன. இதனைப் புனர் நிர்மாணம் செய்து புதுப்பொலிவுடன் கிளிநொச்சி சிவில் சமூக நிறுவனத்தினர் இணைந்து நிர்மாணித்துத் தந்துள்ளனர்.



ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக இருந்தது. இத்தினத்தை முன்னிட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது. கல்விச் செயற்பாட்டுக்கு வாசிப்பு மிக முக்கியமானது. எமது பாடசாலை உயர் தரம் வகுப்பு பாடசாலையாக இருப்பதால் கல்வி மேம்பாட்டுக்கு நூலகம் அவசியம். நூலகத்தை நிரப்பமாகச் செய்து தந்துள்ளனர். நூல்கள் போதாது. எனினும் நிர்மாணிக்கப்பட்ட நூலகத்தில் பிள்ளைகள் நூல்களை எடுத்து வாசிக்கக் கூடியதாக ராக்கைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சீலின் வேலைகள், பேன் வசதிகள் உள்ளிட்ட ஓர் அங்க சம்பூரணமான முறையிலான நூலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நூலக ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொழுது பெரு எண்ணிக்கையிலான மாணவர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். முன்னர் மாணவர்கள் வாசிப்பை வகுப்பறைகளில் தான் மேற்கொண்டார்கள். ஆனால் இப்போது ஒரு நூலகம் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருக்கிறது. பிள்ளைகள் வந்து ஆர்வத்துடன் வந்து நூல்களை வாசித்து வருகிறார்கள்.

தோட்டப்புறப் பிரதேசத்தில் வாசிப்பு மிகவும் குறைந்து காணப்படுகின்றன. தொலைபேசி, தொலைக் காட்சி பார்ப்போர் தோட்டப்புறங்களில் அதிக நாட்டம் உள்ளவர்களே உள்ளனர். அது எல்லா இடங்களிலும் காணப்படும் பிரச்சினை. ஆனால் தோட்டப்புறங்களில்கூட முன்பு மாலை 6.00 மணி அளவில் புத்தகங்களை வாசிப்பதிலே அதிகம் நாட்டம் உடையவர்களாக இருந்தார்கள். இப்பொழுது அவைகள் இல்லை. அறவே கிடையாது.



புத்தகங்கள் வாசிக்க வாசிக்க ஆசை ஏற்படும். அந்த ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இந்த நோக்கத்தின் காரணமாகத்தான் முதல் திட்டமாக நாங்கள் இதனை முன் வைத்தோம். பாடசாலைக்கு வேறு தேவைகள் இருந்தன. இருப்பினும் மாணவர்களுடைய வாசிப்பை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வேண்டுகோளை முதன் முதலில் முன் வைத்தேன் என்று கூறலாம்.

இப்பொழுது நூலகத்தை மாணவர்களும் பயன்படுத்துகிறார்கள், ஆசிரியர்களும் பயன்படுத்துகிறார்கள். பிள்ளைகள் நூலக நேரத்திற்கு தவறாமல் செல்லுகின்றார்கள். முன்னர் வாசிப்பை பிள்ளைகள் முறையாகப் பயன்படுத்த வில்லை. தற்போது பிள்ளைகள் நூலகத்திற்கு ஆர்வத்துடன் சென்று முறையாக பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அமைதியாக இருந்து கற்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இத்தகைய நூலகம் பாடசாலையில் தொடர்ந்து கட்டாயம் இயங்க வேண்டும். அதற்கான வசதிகளைச் செய்து கொடுத்து மாணவர்களின் பயன்பாட்டுக்காக இந்த நூலகம் திறந்து கையளிப்பட்டமை மனதிற்கு பெரு மகிழ்ச்சியையூட்டுகிறது. அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலை சமூகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையில் திறன்மிக்க மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். பாடசாலைச் சுற்றுச் சூழலும் மிக அழகான முறையில் அமைந்துள்ளன. ஏனைய பாடசாலைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கு மிகவும் திறன் மிக்கதாகக் காணப்படுகின்றன.

வளங்கள் நிறைந்த பாடசாலையாக உள்ளன. அதேவேளையில் மாணவர்களுடைய கலை ஆர்வத்திறன் மிகவும் சிறப்பாகவுள்ளன. இப்பாடசாலைக்கு மென்மேலும்

**கல்வித்துறை மற்றும் விளையாட்டுத் துறையிலும் பாடசாலை மாணவர்கள் பெருமை சேர்த்துள்ளனர்**

எங்களால் இயன்ற பங்களிப்புக்களை வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று இத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் கருத்தினைப் பகிர்ந்து கொண்டனர். அவர்களுடைய இத்தகைய பேச்சு மனதிற்கு ஆறுதலைத் தருகிறது. எப்



படிப்பட்ட கடினமாக இருந்தாலும் சரி பாடசாலையை கட்டி எழுப்ப வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் எழுந்து நிற்கிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இப்பிரதேசம் நகருக்கு அண்மித்துள்ள பிரதேசம் ஆகும். இந்தப் பாடசாலைக்கு பிள்ளைகள் தூர இடங்களில் இருந்துதான் வருகின்றார்கள். தோட்டப்புறப் பகுதிகளில் இருந்து வரும் பிள்ளைகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் வருவார்கள். நிவித்திகலப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். சனி, ஞாயிறு தினங்களில் போக்குவரத்திற்காக பஸ் கூட இருக்காது. எங்களுடைய பாடசாலைக்கு 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து பிள்ளைகள் வருகின்றார்கள். இப்பிரதேசம் இரத்தினபுரி நகரில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இப்பாடசாலை நிவித்திகல நகருக்கும் தெயல நகருக்கும் இடையில் இருக்கிறது.

இப்பாடசாலைக்குப் பிள்ளைகள் நொரகொல்லத் தோட்டம், நிவித்திகலத் தோட்டம், தம்மோருவ, கலவான, பாரவத்த. கொழம்பகம ஆகிய தோட்டப்புறப் பகுதிகளில் இருந்து தான் பிள்ளைகள் வருகின்றனர். காரணம் அவர்கள் உள்ள பிரதேசங்களில் முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையிலான பாடசாலைகளே உள்ளன. ஆனால் எங்கள் பாடசாலையில் 6 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்கள் உள்ளன. க. பொ. த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றுவதாக இருந்தாலும் சரி உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதாக இருந்தாலும் சரி எமது பாடசாலையிலேயே எப்படியும் இங்குள்ள தோட்டப்புற பிள்ளைகள் படிக்க வர வேண்டும். தோட்ட மக்கள் வாழும் பகுதிகளில் உயர் தரத்திலான பாடசாலைகள் இல்லை. எங்கள் பாடசாலையில் கலைப் பிரிவும் வர்த்தகப் பிரிவும் உள்ளன.

நான் பாடசாலைக்கு அதிபராக வந்து இரு வருடங்கள் ஆகின்றன. ஆசிரியர் பற்றாக்குறை, பெற்றோர்களின் பொருளாதார நிலைமை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இப்பிரதேசத்திலுள்ள தோட்டப்புற மக்கள் இரத்தினக் கல் அகழ்வு தொழில்களில் ஈடுபடுபவர்களும் உள்ளார்கள். அவர்களுள் பெரும்பான்மையானவர்கள் கல்வியின் பால் அக்கறை இல்லாதவர்களே உள்ளனர். எனினும் இப்பாடசாலையில் கற்று வெளி





யேறிய மாணவர்கள் ஒரு உயர்ந்த நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

இப்பொழுது 420 பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர். தற்போது இணைப்பாடவிதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் மொழி தினப் போட்டிகள் என்று வரும் போது வலய மட்டப் போட்டிகள், மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு நிறைய பரிசில்கள் பெற்றுள்ளனர். சிங்கள மொழி தினப் போட்டிகளில் பங்கு பற்றுதல் மற்றும் தேசிய பிரதேச மட்டக் கலை கலாசாரப் கட்டுரைப் போட்டிகள் என மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு கொண்டு





பரிசில்கள் பெற்று வருகின்றார்கள். சிறந்த சமூகத்திற்கான நற்பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு பாடசாலை சமூகத்தையே சாரும்.

பிள்ளைகள் சீரும் சிறப்புப் பெற நூலகம் பெரும் பயனை அளிக்கக் கூடியவை. எனவே அவர்களுடைய தேவைகளை அதிபர் என்ற வகையில் இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் சிவில் சமூக தொண்டு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் ஊடாக தேவைகளையும் பொறுப்புக்களையும் வினைத்திறனுடன் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளேன்.

அவை மட்டுமல்ல இப்பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும், கல்வியற் கல்லூரிகளில் கல்வி கற்று வருகின்றனர். இன்னும் ஓரிரு வருடங்களில் இம்மாணவர்கள் வெளியேறி தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளுகின்ற நேரத்தில் இப்பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை நீங்கலாம் என்பது மட்டுமல்ல மேலும் பாடசாலை அபிவிருத்தி இலக்கை நோக்கிப் பயணிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இன்னும் உயர் தர வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லா நிலைமை காணப்படுகிறது. இப்பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழப் பட்டப் படிப்பினை முடித்து வருகின்ற கால கட்டத்தில் இங்குள்ள ஆசிரியர் பற்றாக் குறை நீங்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இப்பாடசாலையில் பல பௌதீக வளப் பற்றாக்குறைகள் நிலவுகின்றன. பாடசாலைக்கு ஒரு கேட்போர் கூடம் இல்லை. இவை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இவை தொடர்பில் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கைகள் விடுத்துள்ளோம். அவர்களால் இயன்றளவு உதவிகளை வழங்கவுள்ளதாக எம்மிடம் தெரிவித்துள்ளார்கள்.

எமது பழைய மாணவர்களுடன் எங்களுடைய பாடசாலையின் மேம்பாட்டுக்காக பங்காற்றி வருகின்றார்கள். பாடசாலையின் காரிய அலுலகத்தினை அபிவிருத்தி செய்தல், சுற்றுல் சூழலை அழகு படுத்தல், க. பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகள் நடத்துதல், வழிகாட்டல் கருத்தரங்குகள் போன்ற பல வேலைத் திட்டங்களை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

எல்லாவற்றிக்கும் மேலாக வகுப்பறைக் கட்டிட வசதிகள் இல்லை. பிரதான மண்டபம் இல்லை. ஒரு மண்டபம் இருக்கிறது. அதில் வகுப்புக்களை நடத்தி வருகின்றோம். பிரதான மண்டபம் ஒன்று நிரந்தரமாக இருக்குமானால் இன்னும் மாணவர்களுடைய திறமைகளை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

இப்பாடசாலையில் விளையாட்டில் திறமைமிக்க மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். மாகாண மட்டம், வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி முதலிடங்களைப் பெற்று வருகிறார்கள், ஆனால் பாடசாலைக்கு மைதானம் இல்லை. எனினும் உள்ள இடத்தைப் பயன்படுத்தி வலய மட்டத்தில் வலைப்பந்து, கரப்பந்து போட்டிகள் நடைபெற்றன. ஆனால் சிங்களப் பாடசாலைகளோடு போட்டி போட்டு எமது பாடசாலையே சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

செஸ் உள்ளிட்ட உள்ளக விளையாட்டுக்களிலும் பிள்ளைகள் ஆர்வம் காட்டி விளையாடி வருகிறார்கள். பாடசாலையினைச் சுற்றி இறப்பர் மரங்கள் சூழ்ந்து இருக்கின்றன. ஆனாலும் பெரிய இடவசதிகள் இல்லை. பாடசாலைக்கு என இரண்டு ஏக்கர் காணி இன்னும் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட வில்லை. இது அரச பெருந்தோட்டயாக்கத்திற்கு உட்பட்ட காணியாகும். நிரந்தரமாக இன்றும் பாடசாலைக்கு காணி வழங்கப்பட வில்லை. தோட்டக் காணியில் தான் பாடசாலை இயங்கி வருகிறது.

பாடசாலைப் பெற்றோர்களை பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தேயிலை மரம் நடும் திட்டம் தொண்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியவை. எமது பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோர்களை இனங்கண்டு அவர்களிடத்தில் சொந்தக் காணிகள் இருக்கும் பட்சத்தில் தேயிலை மரம் நடுகைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு பங்களிப்பு நல்கவுள்ளோம் . இறுதியாக, வாசிப்பு என்பது உளம் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆரோக்கியமான மருந்தாகவும் பயன்படும். இத்தகைய நூலகத்தை நிர்மாணித்துக் கொடுத்த தொண்டு நிறுவனத்திற்கு எமது உள்ளார்ந்த நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் அடைவதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

எஸ். வசந்தகுமார்



# கிழக்கின் குரல்

## உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினால் பல்வேறு நலன்புரித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் தெரிவித்தார்.

தேசிய வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பொத்துவில் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜெய விமன வீட்டுத்திட்ட திறப்பு விழாவும், உப உணவு செய்கையை ஆரம்பிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் எதிர்கொள்வதற்கும், உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாகவும் தேசிய உப உணவு உற்பத்தி வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட வேலைத் திட்டத்தின் கீழ் வருமானம் குறைந்த குடும்பங்களின் வருமானத்தை ஊக்குவிக்கும் முகமாக வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து வறுமையில் வாழாமல் இவ்வாறான வீட்டுத் தோட்ட உற்பத்திகளை செய்வதன் மூலம் வறுமையிலிருந்து மீள்வதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்க முடியும். வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை வீண்விரயம் செய்யாமல் அதனூடாக தங்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## பாக்.தூதுவர் ஒலுவில் விஜயம்; உலர் உணவுகளும் வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)



பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறுக் புர்கி கடந்த திங்கட்கிழமை ஒலுவில் பிரதேசத்திற்கு வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார். திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட கதிரை,மேசை போன்ற தளபாடங்கள் ஒலுவில் தாறூல் இல்ம் வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், 10 கிரிக்கட் விளையாட்டுக் கழகங்களுக்கான கடின பந்து உபகரணங்கள் மற்றும் 100 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளும் இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர் பாறுக் புர்கியினால் வழங்கி வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பின் வேண்டுகோளின் பேரில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியின் ஊடாக தாறூல் இல்ம் பாடசாலைக்கும், தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களைச் சேர்ந்த வறிய குடும்பங்களுக்கும் தளபாடங்களும், இதர பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களினதும், அவர்களது தேவைப்பாடுகளையும் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கான அன்பளிப்புகளையும் வழங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், ஒலுவில் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் ஊடக செயலாளரும், அட்டாளைச்சேனை இணைப்பாளருமான எஸ்.எம்.அறூஸ், பாலமுனை இணைப்பாளர் பீ.எம். ஹூஸையிர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## பெரியகல்லாறு பெண்கள் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு விழா



(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பெரியகல்லாறு மெதடிஸ் மிஷன் தமிழ் பெண்கள் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு விழா (ஸ்மார்ட் வகுப்பறை) அண்மையில் இடம்பெற்றது.

அதிபர் பூ.கமலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் கலந்து கொண்டார்.

அத்துடன் ஆரம்பக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தயாளசீலன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் நடேசமூர்த்தி உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கடற்படை முகாமுக்குள் கத்திக்குத்து; கடற்படை வீரர் உயிரிழப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் கடற்படை வீரரொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

உயிரிழந்தவர் மாத்தளை கன்தேகெதர பகுதியைச் சேர்ந்த கே. எம். டி. எஸ்.பண்டார என தெரியவந்துள்ளது.

நேற்று (08) அதிகாலை 2.45 மணியளவில் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மற்றைய விபரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் துறைமுக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குளவித் தாக்குதலால் 8 மாணவர்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு குறூப் , பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)



மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் குளவித் தாக்குதலினால் பாடசாலை மாணவர்கள் 8 பேர் நேற்று தாண்டியடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுணதீவு கன்னங்குடா மகா வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் காலை 7.00 மணியளவில் வீதியால் நடந்து சென்று கொண்டிருக்கையில், குறிஞ்சாமுனை பகுதியில் வீதிக்கு அருகிலுள்ள பனைமரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து மாணவர்களை தாக்கியுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட 8 மாணவர்கள் அருகிலுள்ள தாண்டியடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குளவிக் கூடுகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்னர்.



அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமக்கள் சேவை பணியகத்தின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு நல்லிணக்க மர நடுகை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக மக்கள் பணியகத்தின் பூங்கா வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஹியா றாஸீத் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எச்.ஜெய்னுதீன், ஓய்வு நிலை அதிபர் பரீட், பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ஐ.எல்.காலித், எஸ்.றிஸ்லி, உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர்.

(படம்; பாலமுனை தினகரன் நிருபர்)

## இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்புக்கு அலிஸாஹிர் மௌலானா எம்.பி விஜயம்





(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் கீழ் இயங்கும் ஸாஹிரா விசேட பாடசாலைக்கு அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்ஸெய்யித் அலிஸாஹிர் மௌலானா விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

அஸ்ஸெய்யித் அலிஸாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து முதன்முறையாக கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்புக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது நிர்வாக சபை உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் அதன் தேவைகளையும் கேட்டறிந்ததுடன் மாணவர்களுக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன.

## கிழக்கில் புதிய சோதனைச் சாவடி



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை மயிலத்தமடு மாதவனை பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சோதனைச் சாவடி மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் கடந்த 5ஆம் திறந்து வைக்கப்பட்டது.

மேய்ச்சல் தரை பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய சோதனைச் சாவடி அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக இப்புதிய பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

## நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கிளினிக் மருந்தகம் திறப்பு



( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் .ஐ எல் .எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் (07 )கிளினிக் மருந்தகம் திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர்.எம்.பீ அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிமனையின் பிரதி பணிப்பாளர் டொக்டர் திருமதி ஸக்கிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அலகினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உட்பட கல்முனை ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ. நபீல், பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் இந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆரையம்பதியில் வர்த்தக நிலையங்களில் திடீர் தீப்பரவல்!

(மட்டக்களப்பு குறூப்,புதிய காத்தான் குடி நிருபர்கள்)



காத்தான்குடி தெற்கு எல்லையிலுள்ள ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக மூன்று புடவைக்கடைகள், வாகனங்கள் கழுவும் சேர்விஸ் கராஜ் என்பன எரிந்து நாசமாகியுள்ளதுடன் அங்கிருந்த வாகனங்களும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன. இச்சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் படையினர், இராணுவத்தினர், பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாபெரும் இரத்ததான முகாம்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசெயலகத்தின் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் இரத்ததான முகாம் பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று நடைபெற்றது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், யுவதிகள், என சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் இரத்ததான முகாமில் கலந்துகொண்டனர். மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமைத்துவத்தின் கீழ் 6ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மொழித்தினப் போட்டி சாதனையாளர் கௌரவிப்பு




அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

தி/தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியானது திருகோணமலை வலயத்தில் சாதனை படைக்கும் பாடசாலைகளுள் பிரதானமானதாகும்.

அந்தவகையில் இம்முறை நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினம் 2023 இல் பிரிவு 4ல் தனிநடனத்தில் தி/தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி. யதுசிகா ராஜ்மோகன் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

# பலஸ்தீனத்துக்கு ஆதரவாக கொழும்பில் பேரணி









'நாம் ஒருவர்' என்ற அமைப்பினரால் கொழும்பு 7, ஹைபார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் (07) இன, மத, அரசியல் பேதமின்றி கொட்டும் மழையிலும் மக்கள் ஒன்றுகூடி பலஸ்தீன் நாட்டுக்கு ஆதரவாக குரல் எழுப்பினர்.

இந் நிகழ்வில் மும் மதத்தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க எம்.பி, ஜே.வி.பி எம்.பி விஜித ஹேரத், மனோ கணேசன் எம்.பி, றிசாத் பதியுத்தீன் எம்.பி, இராசமாணிக்கம் எம்.பி உட்பட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு பலஸ்தீனத்திற்கு சார்பாக குரல் எழுப்பியதோடு உரைகளும் இடம்பெற்றன.

படங்கள் அஷ்ரப் ஏ சமத்



## மலையகத்தில் கண்நோய் பரவல்

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

மலையகத்தில் மிக வேகமாக கண்நோய் பரவி வருவதாகவும் இதனால் அனைவரையும் அவதானமாக இருக்குமாறும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளின் மாணவர்கள் மத்தியிலேயே கண்நோய் மிக வேகமாகப் பரவி வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஆகையால், கண்நோயால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏனையோருக்கும் கண்நோய் பரவாதிருக்கும் வகையில் தமது வீட்டில் தம்மை தனிமைப்படுத்தி இருக்க வேண்டுமென்பதுடன், கண்களை தொடுவதற்கு முன்னர் சவர்க்காரத்தை பாவித்து கைகளை நன்றாகக் கழுவ வேண்டுமெனவும், மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், கண்நோயால் பாதிக்கப்படுகின்றவர்கள் மருத்துவ ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## மத்திய மாகாணத்தில் அதிபர் சேவை தரம்-03; 835 பேருக்கு நியமனம்

### ஆளுநர் லலித் யூ.கமகே

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாணத்தில் நிலவிய 835 அதிபர் சேவை தரம் 03க்கான வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கியுள்ளதாக, அம்மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்தார்.

கண்டி தர்மராஜ கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை (06) நடைபெற்ற அதிபர் நியமனம் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற 1,900 பேருக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



இன்னும் 150 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கவுள்ளோம்.

இதேவேளை, ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்க்கவும் அரசாங்கம் உத்தேசித்து வருகின்றது" எனத் தெரிவித்தார்.

## மலைச்சாரல்

## அமைச்சர் ஜீவன் தொண்டமானின் 29ஆவது பிறந்ததினம் இன்று



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் இன்று (09) தனது 29ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகின்றார்.

அவரின் பிறந்ததினத்தையிட்டு சமூகநலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சட்டத்துறையில் பட்டம் பெற்ற இளம் அரசியல்வாதியான அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மறுமலர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படுவதுடன், பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் மலையக மக்களின் குரலாக அவர் ஒலித்துக்கொண்டிருக்கிறார்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்றுள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இளைஞர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளார்.

மலையக மாற்றத்துக்காக தூரநோக்கு சிந்தனையுடன் செயற்படும் அமைச்சரின் முயற்சிகள் வெற்றியளிக்க இறைவனை பிரார்த்திக்கொண்டு அனைவரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

## தீபாவளிப் பண்டிகை; மஸ்கெலியா நகரில் PHI யினர் விசேட சோதனை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மஸ்கெலியா நகரில் அமைந்துள்ள உணவகங்கள், பேக்கரிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று புதன்கிழமை (08) விசேட சோதனையில் ஈடுபட்டனர்.

சுகாதாரமான முறையில் பொதுமக்கள் உணவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இந்தச் சோதனையை மஸ்கெலியா நகரில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதாரத்தை பேணாது உணவகங்கள், பேக்கரிகளை நடத்திய வர்த்தகர்கள் மற்றும் காலாவதியான உணவுகளை விற்பனை செய்த வர்த்தகர்கள் பலரை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இந்நிலையில், இந்த வர்த்தகர்கள் மீது ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, மஸ்கெலியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.நரேந்திரகுமார் தெரிவித்தார்.

இந்தச் சோதனை நடவடிக்கையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றி வரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## அலகொல்ல தமிழ் வித்தியாலய மதில் சரிந்து விழுந்தது

**ஊவா சுழற்சி நிருபர்**



ஊவா பரணகம பிரதேசத்தில் அமைந்துள்ள அலகொல்ல தமிழ் வித்தியாலயத்தின் பிரதான நுழைவாயில் மதில் சரிந்து விழுந்துள்ளதுடன், அப்பாடசாலையின் பிரதான மண்டப சுவரிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஊழியர்களும் பீதியில் உள்ளதாக, அப்பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதுளை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையைத் தொடர்ந்து அம்மாவட்டத்தின் பல இடங்களில் மண்சரிவு ஏற்படுவதுடன், வீதிகளில் தாழிறக்கமும் ஏற்பட்டு வருகின்றது.



கல்வி அமைச்சால் மாகாணங்களுக்கு இடையில் அண்மையில் நடத்தப்பட்ட அகில இலங்கை கணித போட்டியில் சிரேஷ்ட பிரிவு 2 இல் மத்திய மாகாணம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. முதல் முறையாக இப்போட்டியில் மத்திய மாகாணம் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எச்.எம்.பாரிஸ் நிற்பதை படத்தில் காணலாம்.
(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அருகில் சடலம் மீட்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

ஹட்டன், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அருகிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டது. காசல்ரீ கடை வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய விக்கிரம ஆராச்சிலாகே ஜெயதிஸ்ஸ என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இவர் நேற்று முன்தினம் இரவு காணாமல் போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# கேள்வி அறிவித்தல்

## Medical Insurance Cover and Fire & All Risk Insurance Cover 2024

### இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

### கேள்வி இல.: 95/2023.11.29

2024 ஆம் ஆண்டிற்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு **Medical Insurance Cover and Fire & All Risk Insurance Cover** ஐ வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தமை ஆணைக் குழுவின் கீழ் பதிவு பெற்ற புகழ் வாய்ந்த காப்புறுதி சேவை வழங்குநர்களிடமிருந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் கேள்விகளை அழைக்கின்றார்.

2023.11.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளருக்கு முதன்மை அலுவலகத்தின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அலுவலகரொருவரினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் தவிர்ந்த திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) அவரிடமிருந்து ஏற்புடையதான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். ஒரு காப்புறுதிக் கம்பனிக்கு ஒரு தொகுதி கேள்வி ஆவணங்கள் மாத்திரமே வழங்கப்படும். ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபா (ஐந்தாயிரம் ரூபா) அறவிடப்படும். பெறுகை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்வி ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு கேள்வியுடன் விலைமனு பிணையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.11.29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் 2023.11.29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர் உடனடியாகவே கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07.**
**SLRC Website: https://www.rupavahini.lk**

---

### விவசாயம், விவசாய அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

### தென் மாகாணம்

# ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு விவசாயக் குழுவினால் உற்பத்தி செய்யப்படும் புளி வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்வதற்காக புகழ்பெற்ற மற்றும் நிறுவப்பட்ட ஏற்றுமதியாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக அழைப்பு

புளி வாழைப்பழமானது வெளிநாட்டு சந்தையில் இருக்கும் இடத்தை விரிவுபடுத்துவதில் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது. எனவே, விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தென் மாகாண சபையின் பங்களிப்புடன் "புளி வாழை ஊக்குவிப்புத் திட்டத்தை" செயல்படுத்துகின்றது. இத்திட்டம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் 200 வாழை விவசாயிகளை ஊக்குவித்துள்ளது. அனைத்து விவசாயிகள் மற்றும் சேவை வழங்குநர்கள் பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக்கு பிந்திய கையாள்கை மற்றும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திக்கு பயிற்சி பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கைக்கு கூடுதலாக, பிற பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வாழை பயிரிடும் விவசாயிகள் மாவட்டம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளிலும் உள்ளனர்.

இந்த ஆர்வ வெளிப்பாட்டின் (EOI) நோக்கமானது, பொருத்தமான ஏற்றுமதியாளர்களை அவர்களது புளி வாழை உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கான திட்டத்துடன் வலையமைபிற்கு அழைப்பதாகும். மதிப்பீட்டிற்குப் பிறகு பொருத்தமான ஏற்றுமதியாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளருக்கு இலங்கை அரசாங்கத்தினால் (**GOSL**) முன்மொழியப்பட்ட வசதிகள் 200 விவசாயிகளுக்கு ஏற்றுமதிக்கான தரமான புளி வாழை பயிர்ச்செய்கைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அவற்றில் 200 ஏக்கரை உள்ளடக்கிய மாவட்ட விவசாய பயிற்றுவிப்பாளர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம் நிறைவடைந்துள்ளது, முழுமையாக உறுதியளிக்கப்பட்ட வாழைப்பழ பொதியிடல் இல்லம், செயலாக்க நிலைய நிர்மாணப் பணி நடந்து வருகிறது. (மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளரின் தேவைக்கேற்ப இது முடிவுறுத்தப்படும்), இந்த திட்டம் ஏற்றுமதியாளருக்கு விவசாயிகளை ஒழுங்கமைக்க உதவும்.

வலிமை மற்றும் ஏற்றுமதியாளரின் பங்கு குறைந்தபட்சம் 5 வருட காலத்திற்கு உற்பத்தியை தொடர்ந்து வாங்குதல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர் மூலம் தனிப்பட்ட விவசாயிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும், ஏற்றுமதிக்கான தரமான வாழை பயிர்ச்செய்கையில் விவசாயிகளின் அறிவு மற்றும் திறன்களை விரிவுபடுத்துதல், யார் வாங்க முடியும் என்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படும். நிராகரிக்கப்பட்ட வாழைப்பழத்தை (ஏற்றுமதித் தரத்தை விட குறைந்தவை) உள்நாட்டில் சந்தைப்படுத்துதல் அல்லது மதிப்பு கூட்டல் என்பன முன்கூட்டியே பயிற்சி அளிக்கப்பட வேண்டும், பயிர் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்க வேண்டும்.

ஏற்றுமதியாளர்/ஏற்றுமதி நிறுவனத்தின் தகுதிகள் ஏற்றுமதியாளர்/ஏற்றுமதி நிறுவனம் பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்வதில் சிறந்த சாதனை படைத்துள்ளதாக இருத்தல் வேண்டும். வாழைப்பழம் அல்லது தொடர்புடைய பொருட்களின் வருடாந்த ஏற்றுமதி தொகையைச் சமர்ப்பிக்கத்தல் வேண்டும். ஏற்றுமதியாளர்.்.ஏற்றுமதி நிறுவனம் விவசாயிகள்/ உற்பத்தியாளர்களுடன் பணிபுரிந்த அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஏற்றுமதியாளர்/ ஏற்றுமதி நிறுவனம் செல்லுபடியாகும் கம்பனிப் பதிவு/வியாபாரப் பதிவைப் பெற்றிருக்க வேண்டும், தற்போது எம்புல் வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்து வரும் நிறுவனத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

எப்படி விண்ணப்பிப்பது: திறன் கொண்ட நிறுவனத்தின் சுயவிவரம் உட்பட ஒரு ஆர்வ வெளிப்பாட்டு (EOI) முன்மொழிவு தயாரிக்கப்பட வேண்டும். ஆர்வ வெளிப்பாட்டை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை அமைச்சின் www.agrimin.sp.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சுருக்கப்பட்டியலின் முறை: விவசாயிகளுடனான வலையமைப்பு, சிறப்புப் பயிற்சி மற்றும் விவசாயிகளுக்கு நிறுவனம் வழங்கும் இதர வசதிகள், ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படும் அளவு, கொள்முதல் முறை, கொள்முதல் ஒப்பந்தத்தின் காலம், பணிபுரியும் களப் பணியாளர்களின் எண்ணிக்கை, நிதித் திறன், ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ்கள், எண்ணிக்கை ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டுள்ள வருடங்களின் எண்ணிக்கை (வாழை அல்லது பழங்கள்) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சாத்தியமான ஏற்றுமதியாளர்கள்/ஏற்றுமதி நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் முன்மொழிவுகளின் அடிப்படையில் பட்டியல்படுத்தப்படுவர்.

முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்: ஆர்வமுள்ள தரப்பினர் தங்களது ஆர்வ வெளிப்பாடுகளை 2023 நவம்பர் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி உள்ளூர் நேரம் அல்லது அதற்கு முன்னர் இயைபுடைய ஆவணங்களின் வன் பிரதிகள் மற்றும் தகவல்களுடன் தென் மாகாண, விவசாயம், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகால், உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு பதிவுத் தபால், கூரியர் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**செயலாளர்,**
**விவசாயம், விவசாய அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு,**
**4ஆம் மாடி, 'தக்ஷினபாய',**
**லபுதுவ, காலி.**

**091 2234604/ 091 4943088**
**www.agrimin.sp.gov.lk**
**secretary@agri.min.spgov.lk**

---

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட படி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல:** RDA/PD/CKEP/2013/01

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி/காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 06.09.2023 ஆம் திகதிய 2348/24 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : தொம்பே

1. கிராம சேவகர் பிரிவு
இல. 407பி, மாலிந்த கிழக்கு
கிராமத்தின் பெயர் : மாலிந்த
காணியின் பெயர் : -
ஆரம்ப வரைபட இல :
கடஸ்ரஸ் வரைபட இல. 511098
துண்டு இல : 01-02 (2 துண்டுகள்)

2. கிராம சேவகர் பிரிவு :
இல. 418ஏ. கப்புகொட
கிராமத்தின் பெயர் : கப்புகொட
காணியின் பெயர் : -
ஆரம்ப வரைபட இல :
கடஸ்ரஸ் வரைபட இல. 511123
துண்டு இல : 01-05 (5 துண்டுகள்)

**என்.ஏ.ஏ.எஸ். நிஷங்க ஆராச்சி,**
**பிரதேச செயலாளர்,**
**தொம்பே.**

**தொம்பே பிரதேச செயலகம்**
**வேகே, கிரிந்திவேல**
**02.10.2023**

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013.07.02 ஆம் திகதிய 1817/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 212 ஆம் இலக்க 2013.06.26 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2013.07.02 ஆம் திகதிய 1817/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 212 ஆம் இலக்க 2013.06.26 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்**

**எனது இல : 4-3/15/2011/vE/326**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல:**
ஹ/ඉ/1/අත්/2009/1
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகத்த மெதுர",**
**இல. 1200/6, ராஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்லை.**
17 ஜனவரி 2023 மற்றும் 21 ஜூன் 2023

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில், மெத பலாத சிறு பிரிவில், இல. 504A, மெத மாவில கிராம உத்தியோகத்தர் பிரிவில், மாவில கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.07.31 ஆம் திகதிய, பு 5192 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

01. துண்டு இல. 12 - கீனகெலே வத்தை 3×6 பகுதி - விஸ்தீரணம் : 0.0491 ஹெக்டயார்

வடக்கு - ஆர்.ஜே. பிரனாந்து மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் கினகெலே வத்தை 3×6 பகுதி (உ.வ 50324)

கிழக்கு - ஆர்.ஜே. பிரனாந்து மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் கினகெலே வத்தை 3×6 பகுதி (உ.வ 50324)

தெற்கு - துண்டு இல. 16

மேற்கு - துண்டு இல. 13 மற்றும் 11

---

**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

in the

**Sunday Observer**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமான நடவடிக்கைகாக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவிற்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   I. **RDA/GAM/CE/TEN/2023/21 -** சுதாகம வீதியில் கொங்க்ரீட் இட்டு அபிவிருத்தி செய்தல்

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கம்பஹா.**

---

# மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - புத்தளம்

மக்கள் வங்கி புத்தளம் பிராந்திய தலைமைக் காரியாலயத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 09.12.2023 மற்றும் 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | மக்கள் வங்கி - வென்னப்புவ கிளை வளாகம் |
|---|---|
| கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்பவ, நாத்தாண்டிய, கல்பிட்டி, மாதம்பே, ஆணமடுவ, தங்கொட்டுவ, மஹாவெவ, மாரவில |
| சேவை மையங்கள் | மதுரங்குளி, சிலாபம் கடற்றொழில், ஆராச்சிக்கட்டுவ, உடப்புவ, போலவத்த, லுனுவில, உல்ஹிட்டியாவ, கொட்டாரமுல்ல, வெலிபென்னகஹமுல்ல, நாரவில, நுரைச்சோலை, ஆண்டிகம, தொடுவாவ |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம், புத்தளம்.**
**தொலைபேசி இல. 032-2253301**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

# கேகாலை பிராந்தியம்

### மீட்கப்படாத ஈட்டு பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில்/ சேவை மையங்களில் 31.08.2022ஆம் தேதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 08.12.2023 தேதி கொடுக்கல் வாங்கல்கள் முடிவுறும் வரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மற்றும் இடங்களில் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 09.12.2023 மற்றும் 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | கேகாலை கிளை வளாகம் | வரக்காபொலை கிளை வளாகம் |
|---|---|---|
| கிளைகள் | கேகாலை, கேகாலை கடைவீதி, புலத்பொஹுபிட்டிய, ரம்புக்கனை, கொட்டியாகும்புர, மாவனல்லை, ஹெம்மாத்துகம அரனாயக | வரக்காபொலை, துல்ஹிரிய, கல்கமுவ, கொனகல்தெனிய, ருவன்வெல்ல, யட்டியாந்தொட்ட, தெரணியகலை, தெஹியோவிட்ட |
| சேவை மையங்கள் | மொரொந்தொட்ட, தேவாலேகம, பத்தம்பிட்டிய, மாவனல்லை, அலுத்நுவர | அல்கம, கலபிட்டமட, ஹொரகஸ்மங்கட, நெலுந்தெனிய, அமிதிரிகல, கரவனெல்ல, கிதுல்கல |

மேற்குறிபிட்டுள்ளவாறு, நடாத்த தீர்மானித்துள்ள இந்த ஏலவிற்பனைகளை மறு அறிவிப்பு இன்றி வங்கியின் விருப்பத்திற்கு ஏற்ப இரத்துச் செய்ய, ஒத்தி வைக்க அல்லது ஒன்றியைந்து நடாத்தும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு**
**இல. 17, வின்ஸ்டன் விக்ரமசிங்க மாவத்தை, கேகாலை**
**தொலைபேசி இல. 035 - 2222300 / 035 - 2222396**

PEOPLES BANK
Pride of the Nation

---

# மக்கள் வங்கி

### மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் சேவை நிலையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 08.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 2023.12.09 மற்றும் 2023.12.10 |
|---|---|
| ஏல விற்பனை நிகழும் இடம் | மக்கள் வங்கி - இரத்தினபுரி நகர கிளை - முதலாம் மாடி (குடுகல்வத்தை) |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | எம்பிலிபிட்டிய, பெல்மடுல்ல, உடவலவை, கொடகவெல, இறக்குவானை, கஹவத்த, பலாங்கொட, எஹலியகொடை, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தோட்டை, குருவிட்ட, கிரியெல்ல, நிவிதிகல, கலவானை, பல்லேபெத்தை |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் | பதலங்கல, கொலன்ன,செவனகல, ஓபனாயாக்க, பம்பஹின்ன, வெலிகெபொல, எஹலியகொடை, இரத்தினபுரி புதிய நகரம், வெவெல்வத்தை, வேலிஓயா, அயகம, கரவிட்ட |

இந்த ஏல விற்பனை மறு அறிவிப்பு இன்றி இரத்தச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்து செயற்பட அல்லது ஏலத்தை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு. என்பதை தெரியப்படுத்துகிறோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம் - புதிய நகரம், இரத்தினபுரி**
**தொலைபேசி இல. 0452223084 / 0452230818**

PEOPLES BANK
Pride of the Nation

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

# மீட்கப்படாதுள்ள தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், காரியாலயங்கள் மற்றும் அடகு மத்திய நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 2023.12.08ஆம் திகதி வரையில் மீட்கப்படாதுள்ள தங்க ஆபரணங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ளவாறு 2023.12.09ஆம் திகதியிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண காரியாலயங்கள், மாவட்டக் காரியாலயங்கள் மற்றும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அனைத்து ஏலவிற்பனைகளும் மு.ப 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| அடகு பெற்றுக் கொள்ளப்பட்ட இறுதித் திகதி | அடகு கால எல்லை | அடிப்படையாய் அமைந்த திகதி | கடந்துள்ள காலம் |
|---|---|---|---|
| 2022.10.31 | 12 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | ஒரு வருட காலம் கடந்த |
| 2023.04.30 | 06 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | 06 மாதங்கள் கடந்த |
| 2023.07.31 | 03 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | 03 மாதங்கள் கடந்த |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாகாணக் காரியாலயங்கள்** | | | | | | | |
| மத்திய (தொ.பே.இல. 0812214124 0812214115 /6/7) | வடமத்திய (தொ.பே.இல. 0252223080/ 0252225214) | வடமேல் (தொ.பே.இல. 0372231880) | சப்ரகமுவ (தொ.பே.இல. 0452224566) | ஊவா (தொ.பே.இல. 0552223635) | மேல் (தொ.பே.இல. 0332248731/ 0332248583) | கிழக்கு (தொ.பே.இல. 0652225881) | தென் (தொ.பே.இல. 0412226208/9) |
| **மாவட்டக் காரியாலயங்கள்** | | | | | | | |
| கண்டி (தொ.பே.இல. 0812214124/ 0812214115/6/7) | பொலனருவை (தொ.பே.இல. 0272223212) | குருநாகல் (தொ.பே.இல. 0372268323) | இரத்தினபுரி (தொ.பே.இல. 0452230512) | மொனராகலை (தொ.பே.இல. 0552273930) | கம்பஹா/ கொழும்பு (தொ.பே.இல. 0332234922) | அம்பாறை (தொ.பே.இல. 0632223420) | அம்பாந்தோட்டை (தொ.பே.இல. 0472240647/8) |
| மாத்தளை (தொ.பே.இல. 0552051332/3) | அனுராதபுரம் (தொ.பே.இல. 0252223080) | புத்தளம் (தொ.பே.இல. 0322223448) | கேகாலை (தொ.பே.இல. 0352230333) | பதுளை (தொ.பே.இல. 0552224192) | களுத்துறை (தொ.பே.இல. 0342264276/ 0342262526) | மட்டக்களப்பு (தொ.பே.இல. 0652225845) | மாத்தறை (தொ.பே.இல. 0412231585) |
| நுவரெலியா (தொ.பே.இல 0522224552/ 0522222630) | வடக்கு மாவட்டம் (தொ.பே.இல 0212280180) | | | | | | காலி (தொ.பே.இல. 0912222458) |

## கிளைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | | | | | | | | | |
| அகலவத்தை | அவிசாவளை | பதுரலிய | பேருவளை | புலத்சிங்கள | திவுலபிட்டிய | தொடங்கொட | கம்பஹா | கோணபொல | ஹோமாகமை |
| ஹொரணை | இங்கிரியா | ஜாஎல | களுத்துறை | மீகஹதென்ன | மில்லனிய | மினுவாங் கொடை | மீரிகமை | மிரிஸ்வத்த | மொரகஹஹேன |
| மொரொன்துடுவ | நீர்கொழும்பு | மத்துகமை | மாவரமண்டிய | நிட்டம்புவை | நுகேகொடை | பாணந்துறை | பிலியந்தலை | ராகமை | வாத்துவை |
| வலகெதர | வரக்காகொட | களனி | கிரிந்திவெல | கொலன்னாவை | | | | | |
| **மத்திய மாகாணம்** | | | | | | | | | |
| அக்கரப்பத்தனை | தம்புள்ளை | தன்துரே | தவுலகல | கலேவெல | கம்பளை | கினிகத்தேனை | ஹங்குராங் கெத்த | ஹதரலியத்த | ஹேதெனிய |
| உடுதும்பரை | உடவெல | கண்டி | கண்டி இரண்டாம் நகர் | கட்டுகஸ்தோட்டை | கொட்டகலை | லக்கலை | மெனிக்ஹின்ன | மாரஸ்ஸன | செங்கடகலை |
| மாத்தளை | மொரயாய | வத்தேகமை | வில்கமுவை | நாவுல | நாவலப்பிட்டி | நில்தண்டா ஹின்ன | நுவரெலியா | பேராதனை | பூஜாபிட்டிய |
| பூண்டுலோயா | இரத்தோட்டை | ரிகில்லகஸ்கடை | தெல்தெனியா | | | | | | |
| **வடமத்திய மாகாணம்** | | | | | | | | | |
| அனுராதபுரம் புதிய நகர் | அனுராதபுரம் | அரலகன்வில | பக்கமுன | போகஸ்வெவ | சுன்னாகம் | கல்அமுன | கலென்பிந்துனு-வெவ | கோணபத்திராவ | மன்னார் |
| மதவாச்சி | ஹிங்குராங்கொட | யாழ்ப்பாணம் | கதுருவெல | கதுருவெல புதிய நகர் | கஹட்டகஸ் திகிலிய | கனகராயன்குளம் | திரப்பனை | கிளிநொச்சி | மன்னம்பிட்டி |
| மெதிரிகிரியா | மிகிந்தலை | தம்புத்தேகமை நகர் | பொலநறுவை | புலஸ்திகமை | ரம்பேவ | செவனபிட்டிய | சிரிபுர | தலாவை | தம்புத்தேகமை |
| வவுனியா | | | | | | | | | |
| **வடமேல் மாகாணம்** | | | | | | | | | |
| பண்டுவஸ்நுவர | அலவ்வ | அம்பன்பொல | ஆணைமடு | போவத்தை | சிலாபம் | தும்மலசூரிய | கல்கமுவை | கிரியுல்ல | அத்துகல்புர |
| இப்பாகமுவை | கிரிமெட்டியான | குளியாபிட்டி | குருநாகல் | மஹவெவ | மஹவை | மாம்பூரி | மாவத்தகமை | மெல்சிறிபுர | முந்தல் |
| நாரம்மலை | நாத்தாண்டி | நவகத்தேகமை | நிக்கவெரட்டியா | பாலக்குடா | பன்னலை | பரகஹதெனிய | பெரகும்புர | பொல்பித்திகமை | பொத்துஹர |
| புத்தளம் | ரிதீகமை | வாரியபொலை | கல்பிட்டி | வென்னப்புவை | | | | | |
| **சப்ரகமுவ மாகாணம்** | | | | | | | | | |
| அரநாயக்க | பலாங்கொடை | புலத்கொஹுபிட்டி | தெஹியோவிட்ட | தெரனியகலை | தேவாலேகம | எஹலியகொடை | எம்பிலிபிட்டி | எரத்ன | கொடகவெல |
| ஹெம்மாதகமை | கஹவத்தை | கலவானை | கேகாலை | கேகாலை இரண்டாம் நகர் | கிரியெல்ல | கித்துல்கலை | கொலொன்ன | கொட்டியாகும்புர | குருவிட்டை |
| மாவனல்லை | நெலும்தெனிய | நிவித்திகலை | பெல்மதுளை | பிட்டகல்தெனிய | பொத்துபிட்டிய | புலிங்குபிட்டிய | இரக்வானை | ரம்புக்கனை | இரத்தினபுரி |
| ருவன்வெல்லை | ஸ்ரீபலா பத்தலை | வரக்காபொலை | வெலிகேபொல | எட்டியாந்தோட்டை | | | | | |
| **ஊவா மாகாணம்** | | | | | | | | | |
| வெல்லவாய | படல்கும்புர | பதுளை | பண்டாரவளை | பிபிலை | போகஹகும்புரை | புத்தள | தியத்தலாவை | கிராந்துரு கோட்டை | ஹல்தும்முல்லை |
| அப்புத்தளை | கந்தகெட்டியா | லுணுகலை | மடுல்லை | மஹியங்கனை | மாலிகா தென்னை | மெதகமை | மீகஹகிவுல | மொனராகலை | பசறை |
| ரிதீமாலியத்த | செவனகலை | சியம்பலாண்டுவை | தனமல்வில | ஊவா பரணகம | வெலிமடை | | | | |
| **கிழக்கு மாகாணம்** | | | | | | | | | |
| வாழைச்சேனை | அக்கரைப்பற்று | அம்பாறை | தெஹியத்தகண்டி | கல்முனை | சம்மாந்துறை | மகாஓயா | நிந்தவூர் | உஹனை | பொத்துவில் |
| தமனை | மட்டக்களப்பு | மட்டக்களப்பு இரண்டாம் நகர் | செங்கலடி | ஏறாவூர் | களுவாஞ்சிக்குடி | திருகோணமலை | திருகோணமலை இரண்டாம் நகர் | கந்தளாய் | கொக்கட்டிச் சோலை |
| மூதூர் | | | | | | | | | |
| **தென் மாகாணம்** | | | | | | | | | |
| அஹங்கமை | அங்குனு கொலபெலஸ்ஸ | அக்மீமன | அக்குரெஸ்ஸ | அம்பலாந் தோட்டை | பத்தேகமை | பலபிட்டி | பரவாகும்புர | பட்டபொல | பெலியத்த |
| மாத்தறை நகர் | தெய்யன்தர | தெனியாய | தெவிநுவர | திக்வெல்ல | எல்பிட்டி | காலி | கந்தரை | கோணகல்புர | ஹக்மனை |
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை இரண்டாம் நகர் | ஹிக்கடுவை | இமதூவ | கெக்கனதுர | களுவெல்ல | கம்புருகமுவ | கம்புருபிட்டி | கரந்தெனிய | கராபிட்டி |
| கட்டுவன | கிரிந்த | லுனுகம்வெஹெர | மாவரல | மித்தெனிய | மிரிஸ்ஸ | மொரவக்க | நெலுவ | பம்புரன | பிட்டபெத்தர |
| பிட்டிகல | ரத்ன | சூரியவெவ | தங்காலை | தல்கஸ்வெல | திஸ்ஸ மஹாராமை | திஹகொட | உடுகம | ஊரகஸ்மங் ஹன்திய | ஊருபொக்க |
| வலஸ்முல்லை | வராபிட்டி | வீரகெட்டிய | வெலிகமை | யக்கலமுல்ல | | | | | |

**குறிப்புகள்**

ஏல விற்பனையை பிற்போடுதல் அல்லது ஒன்றிணைத்துச் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குரியதாகும். லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்குரிய இக்கிளை கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

**பிரிவுத் தலைவர் கடன் அறவீடு**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**பிரதான காரியாலயம்**
**இலக்கம் 933,**

**வெதமுல்லை, களனி**

| | | |
|---|---|---|
| **அம்பாந்தோட்டை இரண்டாம் கிளை** | - | **அம்பாந்தோட்டை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது** |
| **கதுருவெல இரண்டாம் கிளை** | - | **கதுருவெல கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது** |
| **கேகாலை இரண்டாம் கிளை** | - | **கேகாலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது** |
| **திருகோணமலை இரண்டாம் கிளை** | - | **திருகோணமலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.** |

**2023.11.08**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வலு மற்றும் சக்தி அமைச்சு

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**ரத்தொலுகம வீடமைப்புத் திட்டத்தின் (Type 7F) வீட்டிற்கான பழுதுபார்த்தல் வேலை (400039158)**
**B/46/2023**

1. 15.0 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவில் ரத்தொலுகம வீடமைப்புத் திட்டத்தின் (Type 7F) வீட்டிற்கான பழுதுபார்த்தல் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
   இந்த வேலையின் நிர்மாணக் காலப்பகுதியானது மூன்று (03) மாதங்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி-6 அல்லது மேற்பட்ட CIDA பதிவு செய்தலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு: இந்த கேள்விக்கு விண்ணப்பிக்கும் விலைமனுதாரர் சி-6 அல்லது மேற்பட்ட CIDA பதிவு செய்தலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை (Rs.2,969.25+2.5% SSCL+15% VAT) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், 2023.11.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2023.11.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk/ என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 150,000 ரூபா பெறுமதியானதும் இலங்கையிலுள்ள உரிமமுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011 5455335. தொலைநகல்: 011-5455424**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**Servicing of Split Air Conditioners at all CPC premises for the year 2024**
**B/48/2023**

''2024 ஆம் ஆண்டிற்காக இபெகூ இன் பின்வரும் இடப்பரப்புக்களில் Servicing of Split Air Conditioners" என்ற வேலைக்காக கடந்த கால அனுபவத்தையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

(01) தலைமையகம், பிளவர் வீதி, தேர்ஸ்டன் வீதி, முத்துராஜவெல, பிராந்திய அலுவலகம்
நுகேகொட மற்றும் விவசாய இரசாயனம் கொலொன்னாவ.
(02) பிராந்திய அலுவலகம் அநுராதபுரம்
(03) பிராந்திய அலுவலகம் காலி மற்றும் சுற்றுலா பங்களா மாத்தறை
(04) பிராந்திய அலுவலகம் கேகாலை, குருநாகல் மற்றும் பேராதனை
(05) பிராந்திய அலுவலகம் மட்டக்களப்பு மற்றும் சுற்றுலா பங்களா சீனன்குடா
(06) பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணம்
(07) பிராந்திய அலுவலகம் பதுளை

ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை (Rs.1696.71+2.5% SSCL+15% VAT) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், 2023.11.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் **https://eroc.drc.gov.lk/** என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது **https://ceypetco.gov.lk/public-tenders/.** என்ற இபெகூ இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம்.

அனைத்து விலைமனுக்களும் 70,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.11.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**
**தொலைபேசி: 0094–11 5455335.**
**தொலைநகல்: 0094-11-5455424**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want
Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# ஹக்மன பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் - 2024

ஹக்மன பிரதேச சபைக்குச் சொந்தமான அட்டவணையில் குறிப்பிடப்பிடப்படும் சொத்துக்களை 2024 ஜனவரி 01 முதல் 2024 டிசம்பர் 31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி நிபந்தனைகள், வரைபு, உடன்படிக்கைகள் மற்றும் மேலதிக விபரங்களை பிரதேச சபை அலுவலகத்தில் விசாரித்து அறிந்துக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் : 2023.11.08 முதல் 2023.11.22 பி.ப 2.00 வரை
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் : 2023.11.23 மு.ப. 10.00 வரை
கேள்விப் பத்திரங்கள் திறத்தல் : 2023.11.23 மு.ப. 10.30

கேள்விகள் இரு பிரதிகளுடன் பூர்த்தி செயய்யப்பட்டு மூலப் பிரதியை வேறுவேறாக இட்டு அவ் உறைகளை 2023.11.23 மு.ப. 10.00இற்கு கிடைக்குமாறு செயலாளர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன என்ற பெயரில் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது சபை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். உங்களால் கேள்வி சமர்ப்பிக்கப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் உருப்படியை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

| தொடர் இல | விபரம் | குறைந்தபட்ச கேள்வி ரூபா | கேள்விப்பிணைத் தொகை மீளளிக்கப்படும் ரூபா | கேள்வி விண்ணபப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ஹக்மன வாரச்சந்தை வரி சேகரித்தல் | 1,000,100.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | ஹக்மன அன்றாட சந்தை வரி சேகரித்தல் | 311,760.00 | 5,000.00 | 750.00 |
| 03 | மீன் விற்பனை நிலையம் வரி சேகரித்தல் | 72,050.00 | 3,000.00 | 750.00 |
| 04 | ஹக்மன பொது மலசலகூட அமைப்பு குத்தகைக்கு விடல் | 60,000.00 | 1,000.00 | 250.00 |

**செயலாளர்**
**பிரதேச சபை**
**ஹக்மன**
**2023.11.06**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பலாங்கொடை நகரசபை

## 2024ம் ஆண்டிற்கான வழங்குவோர் மற்றும் கான்ட்ரெக்டாளர்கள் என்போரை பதிவுசெய்தல்

2024ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்படும் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக சேவையாளர்கள் மற்றும் கான்டெக்டாளர்களை பதிவு செய்வதற்காக 2023.11.30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள், பலாங்கொடை நகர சபையின் செயலாளராகிய என்னால் கோரப்படுகிறது. வழங்குபவர் மற்றும் கான்ட்ரெக்டாளர்கள் ஆக பதிவு செய்யும் போது கீழ்க்காணும் பதிவு கட்டணத்திற்கு புறம்பாக அரசினால் அனுமதிக்கப்பட்ட வரிப்பணங்களும் அறவிடப்படும்.

**வழங்குவோர்**

| தொடர் இல | உபகரணங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1 | காரியாலய உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள் | 1000,00 |
| 2 | வீட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் | 1000,00 |
| 3 | கணினி, கணினிப்பாகங்கள் மற்றும் அச்சு மை CD, டோனர், காட்ரிச், ரிபன் கணினி மென்பொருள் | 1000,00 |
| 4 | கட்டிட நிர்மாண உபகரணங்கள் | 1000,00 |
| 5 | வீதி மேம்பாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (6X9, 6X4, 4X4, 4X2, 2X2, 1 ½, 1 ¾, ½ அளவிலான கருங்கல், கற்தூள், A, B, C) | 1000,00 |
| 6 | பெயர் பலகை, அறிவித்தல் பலகைபேனர்கள், கட்டவுட், டிஜிடல் போஸ்டர்கள் | 1000,00 |
| 7 | விளையாட்டு உபகரணங்கள், பாலர் பாடசாலை பொருட்கள் | 1000,00 |
| 8 | நிறப் பூச்சு (எனமல், எமல்ஷன்) | 1000,00 |
| 9 | மின்சார உபகரணங்கள் (மின்குமிழ் மற்றும் மின் உபகரணங்கள்) | 1000,00 |
| 10 | அச்சீட்டு செயற்பாடுகள் மற்றும் றப்பர் சீல் | 1000,00 |
| 11 | காரியாலய உபகரணங்கள் மீள்திருத்தம் (தட்டச்சு இயந்திரம், பிரதியீட்டு உபகரணங்கள், ரோனியோ உபகரணங்கள், பெக்ஸ் உபகரணங்கள், கால அட்டவணை உபகரணம், கணினி) | 1000,00 |
| 12 | வாகன சேவைகள், புனரமைத்தல். வாகன பாகங்கள் (டயர், டியுப், பெடரி, உற்பட) | 1000,00 |
| 13 | கூலி வாகனங்கள் - கல், மணல் கொண்டு செல்லும் வாகனங்களை வழங்கல் | 1000,00 |
| 14 | சுகாதார உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள், சவர்க்காரம், அழுக்குநீக்கும் பொருட்கள் | 1000,00 |
| 15 | பீங்கான் பொருட்கள் | 1000,00 |
| 16 | வாசிகசாலை புத்தகங்கள் | 1000,00 |
| 17 | சீருடைகளுக்கான துணி வகைகள் | 1000,00 |
| 18 | காது உபகரணம், கண்ணாடி, | 1000,00 |
| 19 | உணவுப்பண்டங்கள் | 1000,00 |
| 20 | மேல் கூறப்பட்டவை அல்லாத வெவ்வேறுபட்ட உபகரணங்கள் | 1000,00 |

**கான்ட்ரெக்டாளர்கள்**

| தொடர் இல | உபகரணங்கள் | பதிவுக் கட்டணம் ரூபா. |
|---|---|---|
| 1 | ரூபா 100,000 வரை | 1000,00 |
| 2 | ரூபா 100,000 தொடக்கம் 250,000 வரை | 1500,00 |
| 3 | ரூபா 250,000 தொடக்கம் 500,000 வரை | 1750,00 |
| 4 | ரூபா 500,000 தொடக்கம் 1,000,000 வரை | 2000,00 |
| 5 | ரூபா 1,000,000 மேல் | 2500,00 |

**நிபந்தனைகள்**

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவை வழங்களின் கீழ் பதிவு செய்துகொள்ளளுக்கான கட்டணம் மற்றும் உரிய வரிப்பணத்தினை காசோலையாகவோ அல்லது பணமாகவோ 2023.11.30 ஆம் திகதிக்கு முன்பாக பலாங்கொடை நகரசபைக்குச் செலுத்துவதன் மூலம் உங்கள் பதிவினை மேற்கொள்ள முடியும்.

அதற்காக உங்களால் தயாரிக்கப்பட்ட பெயர், விலாசம், தொலைபேசி எண் மற்றும் வழங்கப்படவுள்ள பொருள் அல்லது சேவை என்பவவை அடங்கிய விண்ணப்பப் படிவமொன்றினை முன்வைத்தல் வேண்டும்.

**பலாங்கொடை நகரசபைக்கு 2024ஆம் வருடத்திற்கான வழங்குவோரை பதிவுசெய்தல்**
**முன்மாதிரிப் படிவம்**

பதிவுசெய்ய என்னும் அயிதம் /அயிதங்கள்:.................................... பற்றிய தகவல்

01. தனிநபர் / வியாபார பெயர் :..........................................
02. தனிநபர் / வியாபார முகவரி :..........................................
03. தனிநபர் / வியாபார பதிவு இல :..........................................
04. தனிநபர் / வியாபார தொலைபேசி எண் :..........................................
05. தனிநபர் / வியாபார தொலைநகல் எண் :..........................................
06. தனிநபர் / வியாபார மின்னஞ்சல் முகவரி :..........................................
07. வியாபார உரிமையாளரின் பெயர் :..........................................
08. வியாபார உரிமையாளரின் அல்லது இலகுவாக தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி எண் :..............................
09. பொருள் மற்றும் சேவைவழங்கல் தொடர்பானஅனுபவம் :..........................................
10. கடன் அடிப்படையில் பொருள் மற்றும் சேவை வழங்கல் முடியுமா என்பதை குறிப்பிடுக :..........................................
11. கடன் அடிப்படையில் பொருள் மற்றும் சேவை வழங்கல் முடியுமாயின் எவ்வளவு காலத்திற்கு? ..................

**பதிவுக்கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரம்**

காசோலை பணம் கட்டண இல :..........................................
பணம் இலங்கை ரூபாயில் :..........................................
திகதி :..........................................

மேல் கூறப்பட்ட தகவல் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிபடுத்துகிறேன். பலாங்கொடை நகரசபையின் 2024 ஆண்டிற்கான பொருள் மற்றும் சேவை வழங்குவோராக / கான்ட்ரெக்டாளராக பதிவுசெய்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி : ..............................
..................................................
கையொப்பம்
முத்திரை

04. நீங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவத்தின் உறையின் வலதுபுற மேல் பகுதியில் "வழங்குவோர் மற்றும் கான்ட்ரெக்டாளர்களை பதிவுசெய்தல் - 2024"எனகுறிப்பிடப்பட வேண்டும்.

05. பதிவுசெய்யப்பட்ட வழங்குவோரிடம் சபையின் தேவைகேற்ப விலைகோரல் பெறப்படும். சபையின் தேவைகேற்ப அதற்கு அப்பாலும் பொருள் மற்றும் சேவை பெற்றுகொள்வதற்கான உரிமை சபைக்கு உண்டு.

06. இதற்கு மேலாக அரசினால் காலத்துக்கு காலம் வரி மற்றும் கட்டணம் உள்ளடக்கப்படும்.

07. மேலதிக தகவல்களுக்கு காரியால தொலைபேசி எண் 045-4930830/045-2287275 அழைப்பதன் மூலம் மற்றும் www.balangoda.uc.gov.lk காரியாலய இணையதலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ்.எச்.எ. கருணாரத்ண**
**செயலாளர்**
**2023-11-09 ஆம் திகதி**

**பலாங்கொடை நகரசபை**

# பண்டாரவளை மாநகர சபை - பெறுகை அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல் – 2024.01.01 முதல் 2024.12.31 வரை

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 (அவ்விரு தினங்களும் உள்ளடங்கலாக) ஆம் திகதி வரையிலான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு குத்தகைத்தாரர்களை தெரிவுசெய்வதற்காக 2023.11.30 ஆம் திகதி மு.ப. 10.00 வரை முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள், 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் இத்தால் கோரப்படுகின்றன.

02. பெறுகை கேள்வி மாதிரி படிவங்களை 2023.11.09 ஆம் திகதி முதல் 2023.11.29 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை) பண்டாரவளை மாநகர சபையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் படிவக் கட்டணத்தை செலுத்தி (செல்லுபடியான இலங்கை பணத்தில்) பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 02 வழங்கப்படுவதுடன் அதன் மூலப்பிரதி மற்றும் துணைபிரதியினை முறையாக பூர்த்தி செய்து மீளளிக்கப்டும் பிணை வைப்பு மற்றும் கிராம சேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டையின் பிரதி ஆகியவை விண்ணப்பப்படிவ மூலப்பிரதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி நிபந்தனைகள் அடங்கிய விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து அதனை வெவ்வேறான உறைகளில் இட்டு உரியவாறு மூலப்பிரதி மற்றும் துணைப்பிரதி என குறிப்பிட்டு (அவற்றின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சொத்தின் விபரத்தையும் குறிப்பிட்டு) அதன் இரு பிரதிகளையும் ஒரு கடித உறையில் இட்டு முத்திரையிட்டு 2023.11.30ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில், "பெறுகைக்குழுவின் தலைவர், மாநகர சபை, பூங்கா வீதி, பண்டாரவளை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மாநகர சபையின் மாநகராட்சி ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலும் தபால் மூலம் அனுப்புகையில் ஏற்படும் தொலைதல் மற்றும் காலதாமதம் தொடர்பில் மாநகர சபையால் பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்படாது என்பதோடு காலதாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை - 01**

| தொடர் இல. | குத்தகைக்கு வழங்கதலுடன் தொடர்புடைய சொத்து மற்றும் அதன் இலக்கம் | | குறைந்தபட்ச பெறுகை கேள்வி (வரி இன்றி) ரூ. சதம் | பெறுகை வைப்புத் தொகை | |
|---|---|---|---|---|---|
| | சொத்து | இலக்கம் | | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் ரூ. சதம் |
| 01 | மாட்டிறைச்சிக் கடை | E-08 | 840000.00 | 25000.00 | 20000.00 |
| | | E-09 | 840000.00 | 25000.00 | 20000.00 |
| 02 | கோழியிறைச்சிக் கடை | E-01 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-02 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-05 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-06 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-12 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-13 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-16 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-17 | 360000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-10 | 540000.00 | 25000.00 | 10000.00 |
| 03 | மீன் கடைகள் | E-03 | 365000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-04 | 365000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-14 | 365000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-15 | 365000.00 | 25000.00 | 10000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை | E-07 | 400000.00 | 25000.00 | 10000.00 |
| | | E-11 | 400000.00 | 25000.00 | 10000.00 |
| 05 | சில்லறைச் சந்தை | | 4800000.00 | 100000.00 | 30000.00 |
| 06 | மொத்தச் சந்தை | | 6037000.00 | 100000.00 | 25000.00 |
| 07 | புதிய பேருந்து தரிப்பிடமருகில் பொது மலசலகூடம் | | 3000000.00 | 25000.00 | 10000.00 |
| 08 | வேன் தரிப்பிடமருகில் பொது மலசலகூடம் | | 786500.00 | 25000.00 | 10000.00 |
| 09 | மொத்தச் சந்தை அருகில் பொது மலசலகூடம் | | 625000.00 | 25000.00 | 10000.00 |
| 10 | ஐக்கிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள பொது மலசலகூடம் | | 312000.00 | 25000.00 | 5000.00 |
| 11 | கடைத் தொகுதியில் அமைந்துள்ள பொது மலசலகூடம் | | 312000.00 | 25000.00 | 5000.00 |
| 12 | சுதந்திர வர்த்தகத் தொகுதியில் அமைந்துள்ள பொது மலசலகூடம் | | 249000.00 | 25000.00 | 5000.00 |
| 13 | பொலிஸ் நிலையமருகில் அமைந்துள்ள பொது மலசலகூடம் | | 156000.00 | 25000.00 | 3000.00 |
| 14 | தேகப்பயிற்சி நிலையம் | | 486000.00 | 15000.00 | 10000.00 |

03. 2023.11.30 ஆம் திகதி மு.ப.10.00 யின் பின்னர் உடனடியாக பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் கேள்வி மனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் வருகை தந்து அதனை பரிசீலிக்கலாம். மேலும் இது தொடர்பிலான மேலதிக தகவல்களை பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது 057-2222275 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

**நிபந்தனைகள்**

01. பெறுகை கேள்வி மனு மாதிரிப்படிவங்களை பெற்றுக் கொள்கையில் விண்ணப்பதாரின் தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சொத்துக்களை குத்தகைக்கு பெறுவதற்காக கேள்வி மனு மாதிரிப்படிவங்களை முன்வைக்கையில் விண்ணப்பதாரரால் ஒரு சொத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப்படிவங்களை வெவ்வேறாக பெற்றுக் கொள்ளவேண்டியடன் அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி மனு மாதிரிப்படிவ கட்டணத்தை வேறுவேறாக செலுத்துதல் வேண்டும். மேலும் மேற்படி கேள்வி மனுக்களை முன்வைக்கையில் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் விதத்தில் செயற்படுதல் வேண்டும்.
03. சொத்துக்களை குத்தகைக்கு பெறுவதற்காக அட்டவணையில் ஒவ்வொரு இலக்கமுடைய சொத்துக்களுக்காக முன்வைக்கப்படும் அதிகூடிய கேள்வி மனுவில் இருந்து ஆகக் குறைந்த கேள்வி மனு வரை கவனத்திற் கொள்ளப்படுவதுடன், அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் வைப்பொன்றை கேள்விதாரரால் இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் மாநகர சபையில் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். மேலும் மேற்படி வைப்பிற்கான பணம் செலுத்துதல் 2023.11.29 ஆம் திகதி பி.ப. 3.00 இற்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
04. பெறுகை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்கையில் கேள்விதாரரால் குறிப்பிடப்படும் திருத்தங்கள் இருப்பின் அவற்றை அவரின் சுருக்க கையொப்பத்தினை இட்டு உறுதிப்படுத்தி இருப்பதுடன் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்கையில் அழிக்கும் திரவம் (Tipex) பாவித்தல் கூடாது.
05. அட்டவணையில் குறிப்பிடப்படும் விதத்தில் சொத்தினை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக ஆகக்குறைந்த கேள்வியினை விட குறைவாக கேள்வித் தொகை குறிப்பிடப்பட்டிருப்பின் அவ் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதுடன், மீளளிக்கப்படும் வைப்பானது சபை வசமாக்கப்படும்.
06. விண்ணப்பதாரர்கள் பண்டாரவளை மாநகர சபைக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் எவ்விதத்திலும் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளாத ஒருவராக இருக்க வேண்டியதுடன், இதற்கு முன்னர் சொத்துக்களை குத்தகைக்கு பெற்று குத்தகை நிபந்தனைகள் மற்றும் பெறுகை சட்டங்களை மீறாத ஒருவராக இருத்தல் வேண்டும். யாதேனுமொரு விதத்தில் கேள்வியினை வழங்கியதன் பின்னர் அவ்வாறானதொரு விடயம் உறுதிசெய்யப்படின் கேள்வி வழங்கப்பட்டிருப்பினும் அது இரத்துச் செய்யப்பட்டு பிணை வைப்பினை சபை வசமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
07. கேள்வியினை முன்வைக்கும் கேள்விதாரர்கள் இதற்கு முன்னர் கடைகளை குத்தகைக்கு விடுவதற்காக பண்டாரவளை மாநகர சபையின் கேள்வி மனு கோரலின் மூலம் முறையான விதத்தில் கடைகள் அல்லது சொத்துக்களை குத்தகைக்குப் பெற்றுருப்பின் ஒப்பந்தத்தின் பிரகாரம் சிறந்த முறையில் ஒப்பந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்து பண்டாரவளை மாநகர சபை மீதான நம்பிக்கையினை சிதைக்காத ஒருவராக இருக்க வேண்டியதுடன், கேள்வி மனுக்களை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை பண்டாரவளை மாநகர சபைக்கு எந்தவித நிலுவையினையும் செலுத்துவதற்கு இல்லாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
08. ஒவ்வொரு குத்தகை சொத்துக்களுக்காக முன்வைக்கப்படும் அல்லது திறக்கப்படும் கேள்வி மனுக்கள் மதிப்பீட்டுக் குழுவிற்கு முன்வைக்கப்படுவதுடன், அக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் கேள்விதாரர்களுக்கு பெறுகைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அறிவிக்கப்படுவதுடன், மேற்படி அறவித்தலின் பின் ஒரு வாரத்திற்குள் முன்வைக்கப்பட்ட வருடாந்த கேள்வித் தொகையில் 03 மாதத்திற்கு போதுமான தொகையை மாநகர சபையில் வைப்பிலிடல் வேண்டும். அதன் பின்னர் நகர சபையுடன் உடன்படிக்கைக்கு வரல் வேண்டும்.
09. தற்போதளவிலும் பண்டாரவளை மாநகர சபைக்குரிய கடைகள் அல்லது வேறு பிணை முறிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் பெறுகை விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படுவது அவர்களால் உரிய பிணை முறிகளுக்காக செலுத்த வேண்டியுள்ள குத்தகை அல்லது வாடகைத் தொகையானது பெறுகையினை பெற்றுக் கொள்ளும் தினத்திற்கு முன் நிறைவுற்ற மாதம் வரை எவ்வித நிலுவையுமின்றி செலுத்தியிருப்பின் மாத்திரமேயாகும்.
10. தெரிவு செயப்பட்டுள்ள கேள்விதாரர்களுக்கு அறிவித்ததன் பின்னர் குறித்த தினத்திற்கு முன்னர் உரிய தொகையினை வைப்புச் செய்து ஒப்பந்தமேற்படுத்த வேண்டியதுடன் குறித்த நபரால் மேற்படி பணத்தினை செலுத்தாது ஒப்பந்தமேற்படுத்தப்படாவிடின் அவரால் வைப்பு செய்யப்பட்ட மீளளிக்கப்படும் வைப்புத்தொகை சபை வசமாக்கப்படும்.
11. மொத்தச்சந்தை சில்லறைச்சந்தை, புதிய பேருந்து தரிப்பிடம் ஆகியவற்றில் அமைந்துள்ள பொது மலசலகூடங்கள் மற்றும் வேன் தரிப்பிடமருகில் அமைந்துள்ள பொது மலசலகூடம் ஆகியவற்றிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களால் முன்வைக்கப்பட்ட கேள்வித்தொகையில் மேலே 08ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் வைப்பினை குறைத்து எஞ்சியத் தொகைக்கு பண்டாரவளை மாநகர சபைக்காக வங்கி பிணை முறியொன்றினை மாகநராட்சி ஆணையாளர் பண்டாரவளை எனும் பெயரில் வைப்பு செய்தல் வேண்டும். அப்பிணை முறியானது 2024.12.31 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். அவ் வைப்பினை பணமாகவும் வைப்புச் செய்ய இயலும்.
12. நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகளுக் கேள்விதாரர் உடன்படல் வேண்டும்.
13. கிடைக்கப் பெறும் கேள்விகளில் பொருத்தமான கேள்வியொன்றினை ஏற்றுக் கொள்ளல் அல்லது அனைத்தையும் நிராகரிப்பதற்கான முழு உரிமையும் பெறுகைக்குழுவிற்கு உரித்தானது என்பதுடன் அத் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2023.11.08 ஆம் திகதி**
**பண்டாரவளை மாநகர சபை**
**பூங்கா வீதி, பண்டாரவளை.**

**த.கஜேந்திர குமார்,**
**மாநராட்சி ஆணையாளர் / பெறுகைக்குழுவின் தலைவர்,**
**மாநகர சபை, பண்டாரவளை.**

# இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

TRC

## மீன்பிடி சம்பந்தமாக பயன்படுத்தப்படுகின்ற வானொலி இயந்திரங்களின் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.

இறக்குமதித் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத வானொலி இயந்திரங்கள் தொடர்பாக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு **2023 நவம்பர் 01** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிப்பதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**2023 நவம்பர் 01** ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சகல இறக்குமதித் தகவல்கள் இல்லாத வானொலி இயந்திரங்கள் யாவற்றுக்கும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு **2024 ஜனவரி 31** ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் எதுவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத வானொலி இயந்திரமொன்றை பயன்படுத்துதல் சட்டவிரோதமானது என அறிவுறுத்துகின்றோம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08.**

**தொலைபேசி : 011-2689345 தொலைநகல் : 0112-2689341**
**மின்னஞ்சல் : dgtsl@trc.gov.lk**




# பெறுகை அறிவித்தல்

## பெந்தோட்ட பிரதேச சபை

**கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி: 2023 நவம்பர் 21ம் திகதி**

பெந்தோட்ட பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்கு 2023.11.21 பிற்பகல் 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். அன்றே அந்த நேரத்திலேயே கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

| விபரம் | தேவைப்படும் பதிவு (CIDA) 2023.02.09ம் திகதிய அரச நிதி சுற்று நிருப இல. 04/2016 (iv) இன் பிரகாரம் | கேள்விப் பிணை அல்லது நிதி வைப்பு (ரூ.) மற்றும் செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ.) | கடந்த 10 வருடங்களில் வேலைகளுக்குச் சமமான தன்மையான மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் 02 ஒப்பந்தங்கள் நிர்மாணித்த அனுபவம் அல்லது 70% வேலை முடிவுறுத்தியிருத்தல் |
|---|---|---|---|---|
| 01. பெந்தோட்ட பிரதேச சபை தலைமையகக் கட்டிடம் புதுப்பித்தல் (மிகுதி வேலைகள்) SP/G/BNPS/2023/001 | C4,C5,C6 மட்டும் (கட்டிடங் களுக்கு) | கேள்விப் பிணை 400,000.00 அல்லது நிதி வைப்பு 200,000.00 2024.03.17 வரை | 5,000.00 | சமமான தன்மையுடன் மற்றும் சிக்கலான குறைந்த பட்சம் 02 ஒப்பந்தங்களை நிர்மாணித்த அனுபவம் அல்லது 70% வேலைகளை முடிவுறுத்தல் |
| 02. பெந்தோட்ட பிரதேச சபை கோனகல புதிய சந்தையுடன் இரு மாடி கட்டிடம் நிர்மாணம் 02ம் கட்டம் SP/G/BNPS/2023/002 | C4,C5,C6 மட்டும் (கட்டிடங் களுக்கு) | கேள்விப் பிணை 400,000.00 அல்லது நிதி வைப்பு 200,000.00 2024.03.17 வரை | 5,000.00 | |

02. கேள்விப் பத்திரங்கள் 2023.11.20 பிற்பகல் 2.00 வரை பெந்தோட்ட பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) கட்டிடங்களுக்கான பதிவு (C4, C5, C6) ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த ஒப்பந்தம் ஒப்படைக்கப்படும்.

04. கேள்வி வைத்தல் தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) மூலம் இடம் பெறும், உத்தேச திட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 50 மில்லியனுக்கு குறைவானபடியால் பிரதேச நிதி விருப்பு மற்றும் CIDA தரத்தின் விருப்பு அரச நிதி சுற்று நிருப இல. 4/2016 (iv இல் குறிப்பிட்டவாறு பொருந்தும்) Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Since the total cost estimate of this procurement (excluding VAT and other taxes) is below rs. 50 million regional preference and CIDA grade preference shall apply as stipulated in public Finance circular no, (04/2016) iv

05. பெறுகை சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் பெந்தோட்ட பிரதேச சபை தலைமையகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

06. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது சகல கேள்வியுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் விதத்தில் கேள்விப் பிணையொன்றை அல்லது நிதி வைப்பை சமர்ப்பித்தல் வேண்டும். வங்கிப் பிணை முறி ஆயின் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றின் மூலம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அதனை நிபந்தனையற்ற மற்றும் கோரியவுடன் மீள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். இப் பிணைமுறி கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடும் மாதிரியின் பிரகாரம் **'செயலாளர், பெந்தோட்ட பிரதேச சபை'** என குறிப்பிடப்படல் வேண்டும். நிதி வைப்பாயின் குறித்த தொகையை பெந்தோட்ட பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் வேறு வேறாக சமர்ப்பிக்க வேண்டியதுடன் அங்கு **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என குறிப்பிடப்பட வேண்டியுள்ளதுடன் இறுதியில் ஒரு உறையில் இட்டு கீழ்க் காணும் முகவரிக்கு 2023.11.21 பிற்பகல் 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விகள் சமர்ப்பிப்போர் அல்லது அவர் சார்பாக அதிகாரம் ஒப்படைக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விகளின் செல்லுபடி காலம் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் முதல் 91 நாட்களாகும்.

09. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.11.13 மு.ப. 10.00 இற்கு பெந்தோட்ட பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.

**10. பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்**

**2023.11.01**

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**செயலாளர்,**
**பெந்தோட்ட பிரதேச சபை,**
**பெந்தோட்ட.**

**Tele - 034-2275419, 034-3029531, 034-3029530**
**E-mail: bentotaps@yahoo.com**

# மக்கள் வங்கி

## பதுளை பிராந்தியம்

### மீட்கப்படாத தங்க நகை அடகுப் பொருட்கள் ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.08.2022 ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 08.12.2023 ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

**09.12.2023 மற்றும் 10.12.2023 ஆகிய திகதிகளில் ஏலம் நடைபெறும்**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பதுளை கிளைத் தொகுதியில் | பண்டாரவளைக் கிளைத் தொகுதியில் |
|---|---|---|
| கிளைகள் | பதுளை மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுனுகலை கிராந்துருகோட்டை பதுளை முதியங்கனை | வெலிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம் பொரலந்தை, பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை |
| சேவை மையங்கள் | பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மீகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | வெலிமடை நகரம், லூணுவத்த, மெதவெல, போகஹகும்புர, பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பெரஹெட்டிய, பல்லகெட்டுவ |

மேற்குறிப்பிடப்பட்டபடி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை மீள் அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளர் மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம் இல. 24, ஆர்.எச். குணவர்த்தன மாவத்தை, பதுளை.**
**தொலைபேசி எண்கள்**
**055-2222165 055-2222342 055-2223067**


www.peoplesbank.lk

PEOPLE'S BANK
Pride of the Nation


# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

SRI LANKA IMMIGRATION AND EMIGRATION

# விலைமனு கோரல் (IFB)

**இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஐந்து (5) மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை (e-Passports) வழங்கல் செய்வதற்கான கொள்முதல்**

**IFB No: PS/03/PB/PR/05/28/23**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுத் தலைவரினால் (CAPC) **இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஐந்து (5) மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை (e-Passports) வழங்கல் செய்யும் கொள்முதல் நடவடிக்கைக்கு** தகைமையுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2. தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள **சர்வதேச போட்டி அடிப்படையில் (ICB- இரண்டு கடித உறை அமைப்பு)** விலைமனுக் கோரல் நடத்தப்படும். மேலும் வழிகாட்டு நெறிகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகைமைகளைக் கொண்டுள்ள அனைத்து விலைமனுதாரர்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

   ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கு விலைமனுதாரர் கரைநிரலில் (blacklisted) சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது. தகைமையுள்ள விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும். (மேலதிக தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன):

   a) **பொதுவான அனுபவம்**
   விலைமனு சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக குறைந்தபட்சம் கடந்த பத்து (10) வருடங்களில் விலைமனுதாரர், ஒப்பந்ததாரராக, துணை ஒப்பந்ததாரராக அல்லது முகாமைத்துவ ஒப்பந்ததாரராக கடவுச்சீட்டு தயாரிப்பதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

   b) **ஒத்த இயல்புடைய ஒப்பந்தத்தில் பெற்றுள்ள விசேட அனுபவம்:**
   விலைமனு சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக கடந்த பத்து (10) வருடங்களில் குறைந்தபட்சம் மூன்று (3) மில்லியன் எண்ணிக்கையைக் கொண்ட இலத்திரனியல் கடவுச்சீட்டு தயாரிப்புக் கருத்திட்டம் ஒன்றை (01) விலைமனுதாரர் வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

   c) **தரம் மற்றும் உத்தரவாத தேவைப்பாடுள்:**
   இலத்திரனியல் கடவுச்சீட்டு தயாரிக்கப்படும் தொழிற்சாலை, ISO 14298 - இன்டர்கிராப் – அரசாங்கத் தரநிலை அல்லது அதற்குமேல் மற்றும் ISO 9001:2015 தரச் சான்றிதழ்கள் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

   d) **சராசரி வருடாந்த வருமானப் புரள்வு :**
   விலைமனுதாரரின் குறைந்தபட்ச சராசரி வருடாந்த வருமானம் **USD17** மில்லியனாக இருத்தல் வேண்டும். இது கடந்த 3 வருடங்களில் நடந்து கொண்டிருக்கும் அல்லது நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காகப் பெறப்பட்ட மொத்த சான்றளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாக கணக்கிடப்படும்.

   e) **நிதி மூலங்கள்:**
   விலைமனுதாரர் திரவச் சொத்துக்கள், கட்டுப்பாடற்ற உண்மையான சொத்துக்கள், கடன் வசதிகள் மற்றும் பிற நிதி வழிகள் போன்ற நிதி ஆதாரங்களுக்கான அணுகல் அல்லது கிடைக்கும் தன்மையை நிரூபித்தல் வேண்டும். அது பணப்புழக்கத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான **USD 1** மில்லியனை விடக் குறையாத ஒப்பந்த முன்பணத் தொகையாகவும் இந்த திட்டத்திற்கான விலைமனுதாரரின் ஏனைய கடமைகளின் நிகர மதிப்பாகவும் காணப்படுதல் வேண்டும்.

3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை, இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாய", 14 ஆம் மாடியில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கணக்காளரிடம் (கொள்முதல்) **2023 நவம்பர் 09** ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை கீழே (பந்தி 6 இல்) குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பரீட்சிக்க முடியும். தொலைபேசி இலக்கம் : **+94112887328** மற்றும் மின்னஞ்சல் **acc_proc@pubsec.gov.lk** விலைமனு ஆவணங்கள் பரீட்சிப்புத் தேவைக்காக மாத்திரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் **(www.pubsec.gov.lk)** இணையத்தளத்திலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் **(www.immigration.gov.lk)** இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

4. இங்கு கீழே (பந்தி 06 இல்) குறிப்பிடப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத இலங்கை **ரூபா.500,000.00** அல்லது இலங்கையில் சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையை கட்டணமாகச் செலுத்தி எழுத்துமூல கோரிக்கையொன்றை தனது வியாபார கடிதத் தலைப்பில் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக செலுத்தப்படுதல் வேண்டும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் **2023 டிசம்பர் 21 ஆம் திகதி பி.ப. 2.00** மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் **2023 டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் **இலங்கை ரூபாய் இருநூறு மில்லியன் (200 மில்லியன்)** அல்லது அதற்கு சமமான தொகை இலங்கையில் சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்தில் வங்கி உத்தரவாதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. விலைமனு முன் சந்திப்பொன்று **2023 நவம்பர் 23 ஆம் திகதி மு.ப.11.00** மணிக்கு **இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாய", 14 ஆம் மாடியில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின்** கேட்போர்கூடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு முன் சந்திப்புக் கூட்டத்தில் பங்குபற்ற முடியும்.

தலைவர்
அமைச்சரவையினால் நியமிக்கப்பட் கொள்முதல் குழு (CAPC)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
"சுஹுருபாய", 14 ஆம் மாடி,
ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை,
இலங்கை.
2023 நவம்பர் 09 ஆம் திகதி.

SELACINE

Daily News Classifieds, the Housewives' companion

# உலகக் கிண்ணத்தில் தனது கடைசி போட்டியில் இலங்கை இன்று களத்தில்

## நியூசிலாந்துக்கு எதிராக மழை குறுக்கிட வாய்ப்பு



உலகக் கிண்ணத்தின் அரையிறுதி வாய்ப்பை இழந்த இலங்கை அணி இம்முறை உலகக் கிண்ணத்தில் தனது கடைசி போட்டியில் இன்று நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

பெங்களூர், எம். சின்னசுவாமி மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இன்று நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை அணி 2025 சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்குத் தகுதி பெறுவதற்கு முக்கியமானதாக உள்ளது. மறுபுறம் நியூசிலாந்து அணி தனது அரையிறுதி வாய்ப்புக்கும் இன்றைய போட்டி தீர்க்கமாக உள்ளது.

எனினும் பெங்களூரில் மழையுடன் கூடிய காலநிலை நிலவிவரும் நிலையில் இன்றைய போட்டிக்கு மழை குறுக்கிட அதிக வாய்ப்பு இருப்பதாக காலநிலை அவதான நிலையத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இன்று பெங்களூரில் மழை பெய்ய 90 வீத வாய்ப்பு இருப்பதாக சர்வதேச காலநிலை எதிர்வுகூறல்களை வெளியிடும் அக்குவெதர் ஊடக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அணி புள்ளிப்பட்டியலில் 8 போட்டிகளில் 2 வெற்றி 6 தோல்விகளுடன் 4 புள்ளிகளை பெற்று 8 ஆவது இடத்தில் இருந்தது. பாகிஸ்தானில் 2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத்திற்கு தகுதி பெற உலகக் கிண்ணத்தில் முதல் எட்டு இடங்களை பெறும் அணிகளுக்கே வாய்ப்பு உள்ளது. எனவே, அந்த வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள குசல் மெண்டிஸ் தலைமையிலான இலங்கை அணி இன்றைய தினம் வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

மறுபுறம் இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் உலகக் கிண்ண அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதி பெற்றிருக்கும் நிலையில் எஞ்சியுள்ள ஒரு இடத்திற்காக நியூசிலாந்துடன் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இடையே மும்முனை போட்டி நிலவுகிறது.

இந்த மூன்று அணிகளும் தலா 8 புள்ளிகளை பெற்றிருப்பதோடு மேலும் ஒரு ஆட்டம் எஞ்சியுள்ளது. எனினும் நியூசிலாந்து அணி நிகர ஓட்ட விகிதத்தில் முன்னிலையில் இருக்கும் நிலையில் இன்றைய போட்டியில் வெற்றி பெற்றால் அரையிறுதி வாய்ப்பை அதிகரித்துக்கொள்ளும். முன்னதாக நியூசிலாந்து அணி பாகிஸ்தானையும் இதே சின்னசுவாமி மைதானத்திலேயே எதிர்கொண்டது. அந்த போட்டியில் மழையால் டக்வர்த் லுவிஸ் முறையில் நியூசிலாந்து அணி தோல்வியை சந்தித்தது. இந்த நிலையில் இன்றைய தினத்திலும் மழை இடையூறு செய்தால் நியூசிலாந்து அணியின் அரையிறுதி எதிர்பார்ப்பு மற்ற போட்டி முடிவுகளில் தங்கி இருக்க வேண்டி ஏற்படும்.

குறுகிய பௌண்டரி எல்லையைக் கொண்ட சின்னசுவாமி மைதானம் அதிக ஓட்டங்கள் குவிக்கும் மைதானமாக உள்ளது. எந்த ஓட்ட இலக்கும்இங்கு பாதுகாப்பானதாக இல்லை. கடந்த முறை நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிராக 402 ஓட்டங்களை பெற்றபோதும் வெற்றி பெற முடியவில்லை.

இங்கு இடம்பெற்ற 41 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் 15 முறையும் பதிலெடுத்தாடிய அணிகள் 22 முறையும் வெற்றியீட்டியுள்ளன. எனவே, நாணய சுழற்சியில் வெல்லும் அணி பதிலெடுத்தாட தீர்மானிக்கும் வாய்ப்பு அதிகம்.

# ஷகீபின் முடிவுக்கு பங்களாதேஷ் பந்துவீச்சு பயிற்சியாளர் அதிருப்தி

## மைதானம் சென்று தடுக்க நினைத்ததாகக் கூறுகிறார்







பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் அஞ்சலோ மத்தியூஸ் 'டைம் அவுட் முறையில் ஆட்டமிழந்து செல்வதை பார்ப்பதற்கு கடினமாக இருந்ததாக பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் அலன் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் மைதானத்திற்குச் சென்று தனது முடிவை மாற்றிக் கொள்ளும்படி ஷகீபிடம் கூற நினைத்ததாகவும் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான டொனால்ட் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில் கடந்த திங்கட்கிழமை (6) நடந்த இந்தப் போட்டியில் துடுப்பெடுத்தாட வந்த மத்தியூஸின் தலைக் கவசம் உடைந்த நிலையில் மாற்று கவசம் ஒன்றை கோரிய நிலையிலேயே ஷகீப் அல் ஹசன் கால தாமதத்திற்காக டைம் அவுட் முறையில் நடுவரிடம் ஆட்டமிழப்பு கோரியிருந்தார்.

தனது ஆட்டமிழப்புக் கோரலை மீட்டுக்கொள்வது பற்றி நடுவர் கோரிய போதும் ஷகீப் அந்த முடிவில் இருந்து விலகவில்லை.

இது தொடர்பில் கிரிக்பிளொக் இணையதளத்திற்கு பேட்டி அளித்த அலன் டொனால்ட் கூறியதாவது,

"அந்த சமயத்தில் பரவாயில்லை நண்பா, விரைவாக தலைக்கவசத்தை சரி செய்து கொண்டு விளையாடுங்கள் என்று சொல்வதே சரியானதாக இருந்திருக்கும்.

அந்த நிகழ்வு நடந்தபோது களத்திற்குள் சென்று, போதும் நிறுத்துங்கள் என்று அணியின் தலைவர் ஷகீப்பிடம் சொல்ல நினைத்தேன்.

இறுதியில் போட்டி முடிந்து ஹோட்டல் அறைக்குள் சென்று நான் என்ன நடந்தது என்று வியப்பில் அமர்ந்தேன். குறிப்பாக இலங்கை அணியினர் எங்களுக்கு கை கொடுக்காமல் சென்றனர். அந்த சமயத்தில் கோபத்திலிருந்த நான் முதல் ஆளாக சென்று அவர்களுக்கு கை கொடுக்க வேண்டும் என்று விரும்பினேன். இவ்வாறு நான் நினைப்பதற்காக என்னை பழைய காலத்து ஆள் என்று இப்போதைய வீரர்கள் நினைக்கலாம். ஆனால் கிரிக்கெட்டில் இது போன்ற நிகழ்வுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதை என்னுடைய எண்ணமாகும்" என்று கூறியுள்ளார்.

இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. போட்டிக்குப் பின்னர் இலங்கை அணி வீரர்கள் நடுவர்களுக்கு கை கொடுத்துவிட்டு பங்களாதேஷ் வீரர்களுக்கு கைகொடுக்காமல் மைதானத்தை விட்டு வெளியேறினர்.

# சர்வதேச செய்திகள்

# ஹமாஸ் கோட்டையான காசா நகரில் இஸ்ரேலியப் படை தரைவழி மோதல்

## தொடர்ந்தும் வான் தாக்குதல்: ஈரானின் பங்கேற்போடு சவூதியில் அவசர மாநாடு

இஸ்ரேல்–காசா போர் இரண்டாவது மாதத்தை எட்டியிருக்கும் நிலையில் ஹமாஸ் அமைப்பின் கோட்டையாக இருக்கும் காசா நகரின் மையப்பகுதியை நோக்கி முன்னேறுவதாக இஸ்ரேல் கூறியிருக்கும் அதேநேரம் ஆக்கிரமிப்பு படைகளுடன் கடுமையாக சண்டையிட்டு வருவதாகவும் இழப்புகளை ஏற்படுத்தி இருப்பதாகவும் ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தபோதும் அங்கு இஸ்ரேலிய போர் விமானங்கள் தொடர்ந்தும் இடைவிடாது தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் காசா பகுதி எங்கும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. அல் ஷிபா மற்றும் இந்தோனேசிய மருத்துவமனைகள், அதேபோன்று கான் யூனிஸ், நுசைரத் மற்றும் ஜபலியா அகதி முகாம்களுக்கு அருகிலும் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் மேலும் 241 பேர் கொல்லப்பட்டதாக அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி போர் வெடித்த கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 10,569 ஆக அதிகரித்துள்ளது. இதில் 4,324 சிறுவர்கள், 2,823 பெண்கள், 649 வயதானவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இதில் 1,350 சிறுவர்கள் உட்பட 2,550 பேர் காணாமல்போயிருப்பதோடு இதில் பெரும்பாலானவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தவிர 193 மருத்துவ பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 45 அம்புலன்ஸ் வண்டிகள் தாக்கப்பட்டுள்ளன.

இதனால் காசாவில் கொல்லப்பட்ட, காயமடைந்த மற்றும் காணாமல்போனவர்கள் எண்ணிக்கை 40,000ஐ தாண்டி இருப்பதாக காசாவின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலிய தரைப்படைகள் நிலத்தடியில் இருக்கும் ஹமாஸ் அமைப்பின் பரந்த சுரங்கப்பாதை கட்டமைப்புகளை கண்டுபிடித்து அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே காசா பகுதியை இரண்டாக பிரித்திருப்பதாகவும் காசா நகரை சுற்றிவளைத்திருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. எனினும் இஸ்ரேலிய தரைப்படை, சுரங்கப்பாதைகளில் மறைந்திருந்து அதிரடி தாக்குதல்களை நடத்தும் பலஸ்தீன போராளிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நேற்றைய தினம் வடக்கு காசாவில் இடம்பெற்ற மோதல்களில் மேலும் ஒரு இஸ்ரேலிய வீரர் கொல்லப்பட்டு இருவர் காயமடைந்ததாக இஸ்ரேலிய இராணுவம் உறுதி செய்துள்ளது. இதன்படி கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை குறைந்தது 31 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறுவதற்கு உதவியாகவும் காசா நகரின் கிழக்கு பக்கமாக உள்ள கட்டடங்களை இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்கி அழித்து வருவதாக கூறப்படுகிறது. இதன்மூலம் அந்த டாங்கிகள் காசா நகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேற வழி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**தெற்கிலும் அவலம்**

போதிய எரிபொருள், நீர் மற்றும் மா இல்லாதது மற்றும் வான் தாக்குதல்களால் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் காரணமாக வடக்கு காசாவில் இருக்கும் அனைத்து பேக்கரிகளும் மூடப்பட்டுள்ளன.

ஒருவருக்கு தினசரி தேவைக்கு 50 தொடக்கம் 100 லீற்றர் நீர் தேவைப்படும் நிலையில் காசாவில் குடிப்பது மற்றும் துப்புரவு உட்பட அனைத்துத் தேவைகளுக்காகவும் ஒருவருக்கு சராசரியாக மூன்று லீற்றர்களே இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் உணவு விநியோகம் தீர்ந்து வருவதாக குறிப்பிட்டிருக்கும் உலக உணவுத் திட்டம் அங்கு ஐந்து நாட்களுக்கு போதுமான உணவுகளே கையிருப்பில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

காசா போர் வெடிப்பதற்கு முன் அங்கு தினசரி 500 லொறி வண்டிகள் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஒக்டோபர் 21 ஆம் திகதி தொடக்கம் குறைந்தது 451 லொறிகளே காசாவுக்குள் நுழைந்துள்ளன. இதில் 158 வண்டிகள் மாத்திரமே உணவுப் பொருட்கள் ஏற்றிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசா நகரை சுற்றிவளைத்திருக்கும் இஸ்ரேல் அந்த குறுகிய நிலத்தின் வடக்கில் இருந்து மக்கள் தெற்கை நோக்கி செல்ல அனுமதித்தபோதும் அங்கு எந்தப் பகுதியிலும் பாதுகாப்பு இல்லை என்பது உயிரிழப்புகள் காட்டுகின்றன. மத்திய மற்றும் தெற்கு காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் சுமார் 3,600 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




காசாவில் இருக்கும் மக்கள் வடக்கில் இருந்து தெற்கை நோக்கி வெளியேறுவதனால் அவர்கள் எதிர்கொள்ளும் அவலநிலை தீர்ந்துவிடாது. அங்கு ஏற்கனவே பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் நடத்தப்படும் 92 தற்காலிக முகாம்களில் 550,000க்கும் மேற்பட்டவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

இந்த முகாம்களில் வசதிகள் குறைவாக இருப்பதோடு நோய்களும் வேகமாக பரவி வருகின்றன.

இங்கே 600க்கும் அதிகமானவர்கள் ஒரு கழிப்பறையை பகிர்ந்து வருவதாக ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இங்கிருப்பவர்கள் இடையே கடுமையான சுவாச நோய், தோல் தொற்று நோய்கள், வயிற்றுப்போக்கு மற்றும் சின்னம்மை நோய்கள் பரவி இருப்பதாக ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது. இங்கிருப்பவர்கள் உணவை பெறுவதும் கடினமாக உள்ளது என்று அது தெரிவித்துள்ளது.

**காசாவின் எதிர்காலம்**

காசாவில் மேற்கொள்ளும் தரைவழி நடவடிக்கை ஹமாஸ் அமைப்பினால் பிடித்து வைத்திருக்கும் பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்று இஸ்ரேல் அஞ்சுகிறது. இந்தப் பணயக்கைதிகள் சுரங்கப் பதையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்நிலையில் பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை போர் நிறுத்தம் இல்லை என்று இஸ்ரேல் கூறி வருகிறது. மறுபுறம் காசா தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

"பொதுமக்களைக் கொல்வதைத் தவிர வேறு எந்த இராணுவ சாதனையையும் தரையில் நிகழ்த்த முடிந்ததா, என்ற (இஸ்ரேலுக்கு) நான் சவால் விடுகிறேன்" என்று மூத்த ஹமாஸ் அதிகாரியான காசி ஹமாத், அல் ஜசீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.



"காசா முறியடிக்க முடியாதது என்பதோடு அமெரிக்கர்கள் மற்றும் சியோனிஸ்ட்களின் தொண்டையில் முள்ளாக தொடர்ந்து இருக்கும்" என்றும் ஹமாத் தெரிவித்தார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்று ஹமாஸுக்கு உதவியாக அமையும் என்று இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நம்புகின்றன. எனினும் பிரதமர் நெதன்யாகு சண்டை நிறுத்தம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செவ்வாயன்று (07) வலியுறுத்தி இருந்தார்.

ஹமாஸை ஒழிப்பதாக சூளுரைத்து வரும் இஸ்ரேல் காசாவில் எதிர்காலம் பற்றியும் பேசியுள்ளது. போருக்குப் பின்னர் ஒரு காலவரையற்ற காலத்திற்கு காசாவின் பாதுகாவலராக இருக்கப் போவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எனினும் காசாவில் ஆட்சிபுரிய இஸ்ரேல் விரும்பவில்லை என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். போரை முடித்த பின் இஸ்ரேலோ அல்லது ஹமாஸோ காசாவில் ஆட்சி புரியாது என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கல்லன்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காசா ஆட்சியில் ஹமாஸ் அங்கமாக இருக்காது என்றும் போருக்குப் பின்னரான காசா தொடர்பிலும் எவ்வாறான ஆட்சி இருக்க வேண்டும் என்பது தொடர்பில் ஆரோக்கியமாக பேச்சுவார்த்தை தேவை என்றும் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்திருக்கும் ஹமாஸ் அமைப்பு, காசா அரசு என்பது முழுமையாக பலஸ்தீன விவகாரம் என்றும் அந்த உண்மையை எந்த சக்தியாலும் மாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

1967 ஆறு நாள் போரின் மூலம் இஸ்ரேல் ஆக்கிரமித்த காசா பகுதியில் இருந்து அது 2005 ஆம் ஆண்டு வாபஸ் பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற தேர்தலில் பலஸ்தீன அதிகாரசபையை தோற்கடித்து ஹமாஸ் அமைப்பு அங்கு ஆட்சியை கைப்பற்றியது. 2014 ஆம் ஆண்டிலும் காசாவுக்கு இஸ்ரேல் தனது தரைப்படையை அனுப்பியிருந்தது.

**சவூதியில் மாநாடு**

இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த எதிர்வரும் நாட்களில் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் மாநாட்;டை சவூதி அரேபியா கூட்டவுள்ளதாக அந்நாட்டு முதலீட்டு அமைச்சர் கலீபா அல் பாலஹ் தெரிவித்துள்ளார்.

"இந்த வாரத்தின் அடுத்த சில நாட்களில் ரியாதில் அவசர அரபு மாநாட்டை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்" என்று சிங்கப்பூரில் நடைபெறும் ப்ளும்பர்க் புதிய பொருளாதார மன்றத்தில் நேற்று (08) உரையாற்றிய பாலிஹ் தெரிவித்தார்.

"அடுத்த சில நாட்களில் இஸ்லாமிய மாநாடு ஒன்றையும் சவூதி அரேபியா கூட்டவுள்ளது. மோதலுக்கு அமைதித் தீர்வு ஒன்றை எட்டும் நோக்கிலேயே சவூதி அரேபியாவின் தலைமையின் கீழ் குறுகிய காலத்தில் இந்த மாநாடுகள் மற்றும் ஒன்றுகூடல்கள் நடத்தப்படுகின்றன" என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஈரானிய ஜனாதிபதி இப்ராஹி ரைசி வரும் ஞாயிற்றுக்கிழமை (12) சவூதி அரேபியா பயணிக்கவிருப்பதாக ஈரானிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் சீனாவின் மத்தியஸ்தத்தில் ஈரான் மற்றும் சவூதி அரேபியா பல ஆண்டுகள் நீடித்து வந்த முறுகலை முடிவுக்குக் கொண்டுவந்த பின் ஈரானிய அரச தலைவர் ஒருவரின் முதல் விஜயமாக இது உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 9ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கான 60/70 தர Bulk Bitumen 1,400 MT கொள்வனவு செய்வதற்கான மனுக்கோரல்**

| விபரம் | இயந்திராலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 60/70 Grade Bulk Bitumen | All RDA Asphalt Plants | 1,400 MT |

மேற்குறிப்பிடப்பட்ட 60/70 தர Bulk Bitumen கொள்வனவு செய்வதற்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2023.11.09** ஆம் திகதி முதல் **2023.11.30** ஆம் திகதி வரை **www.rda.gov.lk** இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## மக்கள் வங்கி

### கொழும்பு வெளி-1 பிராந்திய தலைமைக் காரியாலயம் மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் 09.12.2023 & 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பத்தரமுல்ல | கங்கொடவில |
|---|---|---|
| கிளைகள் | அதுருகிரிய<br>பத்தரமுல்ல<br>கொலொன்னாவ<br>கொட்டிகாவத்த<br>கடுவெல | மஹரகம<br>கொட்டாவ<br>நுகேகொட நகரம்<br>கங்கொடவில<br>நுகேகொட<br>பிடகோட்டே |
| சேவை மையங்கள் | தலவதுகொட,<br>மாலபே, ஹோகந்தர,<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,<br>வெல்லம்பிட்டிய,<br>கொதட்டுவ,<br>முல்லேரியா புதிய நகரம், நவகமுவ,<br>பண்டாரவத்த | பன்னிப்பிட்டிய,<br>பமுனுவ, ஹபரக்கட,<br>மத்தேகொட கொஹீவல<br>தெல்கந்த, ஜயவர்தனபுர,<br>அம்புல்தெனிய, நாவல,<br>ராஜகிரிய<br>அதுல்கோட்டே,<br>தலபத்பிட்டிய |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளி -1)**
**மக்கள் வங்கி, இல. 177A, உயர் மட்ட வீதி** (High Level Road),
**தொலைபேசி இல. 0112812260 / 0112854189**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**(வலு மற்றும் சக்தி அமைச்சு)**

**Mechanical cleaning of 09 Nos. of Oil Storage Tanks in China Bay Upper Tank Farm in Trincomalee**

**B/47/2023**

1. அண்ணளவாக 10 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதும் திருகோணமலை சீனன் குடாவின் மேல் மட்டத்திலுள்ள தாங்கி பண்ணையின் 09 எண்ணிக்கையான எண்ணெய் களஞ்சியப்படுத்தும் தாங்கிகளை பொறிமுறை மூலம் சுத்தப்படுத்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   இந்த வேலையானது பொறிமுறை முறைமைகளினூடாக மேல் மட்டத்திலுள்ள தாங்கி பண்ணை பிரதேசத்தில் அமைந்துள்ள 65 இலிருந்து 72 வரையும் மற்றும் 30 ஆம் இலக்க தாங்கி ஆகியவற்றை சுத்தப்படுத்தல் மற்றும் குறிப்பிட்டுள்ள தாங்கிகளுக்காக வாகனங்களின் வசதிக்காக அணுகுவழி வீதிகள் மற்றும் அணைக்கட்டு சுவர்களை நிர்ணயித்தல் ஆகியனவாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி-7 அல்லது சி-6 CIDA பதிவை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. இந்த வேலையின் கால எல்லையானது இரு (02) மாதங்களாகும்.
5. அனைத்து முன்வைப்புக்களும் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த கால எல்லையாகிய அறுபத்தி மூன்று (63) நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (அதாவது: 2024.01.30 ஆம் திகதி வரையும்)
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை (2.5% SSCL+15% VAT அடங்கலானது) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், 2023.11.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப.9 மணிக்கும் பி.ப.3 மணிக்குமிடையில் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
7. விலைமனுக்கள் 2023.11.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் **https://eroc.drc.gov.lk/** என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 5455335. தொலைநகல்: 5455424**

---

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் ஜா-எல மற்றும் பேலியகொட இடைமாற்றங்களிலுள்ள கட்டிடங்களின் கூரை, சாக்கடைகள், valance board மற்றும் கீழ்நோக்கிய குழாய்களின் இணைப்பை அகற்றல் மற்றும் நிறுவுதல். RDA/EOM&M/CKE/RF/P&J/2023/23 |
| 02. | மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமவிலிருந்து குருநாகல் வரையுமான பிரிவில் மின்னியல் மற்றும் வளிச்சீராக்கல் இணைந்த பராமரிப்பு வேலைகளுக்காக மின்னியல் தொழிலாளர்களை வழங்கல். RDA/EOM&M/ELE/MNT/CE/2023/38 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.11.09 ஆம் திகதியிலிருந்து 2023.11.30 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர், **EOM&M** பிரிவு பெறுகைக் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

---

## பெறுகை அறிவித்தல்

## நாவலப்பிட்டி நகர சபை

நாவலப்பிட்டி நகர சபைக்கு சொந்தமான கீழேயுள்ள இல.01,02,03,04 என தரப்பட்டுள்ள சொத்துக்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | சொத்து பற்றிய விபரம் | குறைந்த பட்ச கேள்வி | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) | கேள்விப்பிணை வைப்புத் தொகை (மீளளிக்கப்படும்) |
|---|---|---|---|---|
| 01 | நவீன வர்த்தக கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள இலக்கம் 40,41 கடை அறை மாட்டிறைச்சி விற்பனைக்காக | ரூ. 6,450.000.00 | ரூ, 3000.00 | ரூ. 250,000.00 |
| 02 | நவீன வர்த்தக கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள இல. 42 கடைஅறை ஆட்டிறைச்சி விற்பனை மற்றும் கோழியிறைச்சி விற்பனைக்காக | ரூ. 2,200.000.00 | ரூ. 3000.00 | ரூ.100,000.00 |
| 03 | பஸ் நிலையத்திற்கு அருகில் பொது மலசலகூடம் | ரூ.12,300.00 (ஒரு நாளைக்கு) | ரூ. 1000.00 | ரூ.10,000.00 |
| 04 | நவீன வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் மலசலகூடம் | ரூ. 3100.00 (ஒரு நாளைக்கு) | ரூ. 1000.00 | ரூ.10,000.00 |

* கேள்விப் பத்திரங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய ஆவணங்களை 2023.11.09 முதல் 2023.11.27 வரை மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை அலுவலக நேரங்களில் நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
* பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பப் படிவங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறு உறைகளில் இட்டு, நகல் பிரதியில் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு 2023.11.28 மு.ப 9.30 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், நாவலப்பிட்டி நகர சபை, நாவலப்பிட்டி, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அன்றே மு.ப 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.
* கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சொத்து பற்றிய விபரங்களை குறிப்பிடுதல் வேண்டும்.
* கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைச் சபைக்கு உரியது. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**டி.எப்.டி.பீ.பீ. திஸாநாயக்க,**
**செயலாளர்,**
**நாவலப்பிட்டி நகர சபை**
**2023.11.06**

---

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### ரூ. 250,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.40%2027'A' தொடர்களின் கீழ் ரூ. 60,000 மில்லியனையும் 10.75%2028'A' தொடர்களின் கீழ் ரூ. 110,000 மில்லியனையும் 11.25% - 2031 "A" தொடர்களின் கீழ் ரூ. 80,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 நவம்பர் 13ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.40% 2027'A' | 10.75% 2028'A' | 11.25% 2031'A' |
|---|---|---|---|
| ISIN* | LKB 00827A151 | LKB 01028C151 | LKB01231C151 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 60,000 மில்லியன் | ரூ. 110,000 மில்லியன் | ரூ. 80,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.40% ஆண்டொன்றிற்கு | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2019 சனவரி 15 | 2018 மார்ச் 15 | 2019 மார்ச் 15 |
| முதிர்வுத்திகதி | 2027 சனவரி 15 | 2028 மார்ச் 15 | 2031 மார்ச் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 ஜனவரி & 15 ஜீலை | 15 மார்ச் & 15 செப்டெம்பர் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 3.8103 | ரூ. 100.00 இற்கு ரூ. 1.8015 | ரூ.100 இற்கு ரூ. 1.8853 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 நவம்பர் 13, திங்கட்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2023 நவம்பர் 13, திங்கட்கிழமை மு.ப.11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2023 நவம்பர் 15 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி லிமிடட் | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி.வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: 2477011, தொலைநகல்: 2477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

---

## இலங்கை வங்கி

### 1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.07.11 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு S.W. ஹப்புவத்த அத்தாட்சிப்படுத்திய 2008.02.11ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 19630, 2017.03.15ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 24491, பிரசித்த நொத்தாரிசு R.M.K.S.M. ரத்நாயக்க அத்தாட்சிப்படுத்திய 2014.04.30ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 2976, R.M.K.S. ராஜபக்ஷ அத்தாட்சிப்படுத்திய 2019.04.11ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 2320, 2021.09.15ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 3226 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது கடன் வசதி மீது 2023.06.13 வரையான வட்டியும் முதலுமாக 10,308,429.29 ரூபாயும் (பத்து மில்லியன் முந்நூற்று எட்டாயிரத்து நானூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபத்தொன்பது சதம்) அத்துடன் 2023.06.14ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டுத் தசம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 7,850,000.00 ரூபாய் (ஏழு மில்லியன் எண்ணூற்று ஐம்பதாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இரண்டாவது கடன் வசதி மீது 2023.06.13 வரையான வட்டியும் முதலுமாக 4,418,512.50 ரூபாயும் (நான்கு மில்லியன் நானூற்றுப் பதனெட்டாயிரத்து ஐந்நூற்றுப் பன்னிரெண்டு ரூபாய் ஐம்பது சதம்) அத்துடன் 2023.06.14ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு ஏழு தசம் இரண்டு ஐந்து வீதப்படி (7.25%) 4,004,000.00 ரூபாய் (நான்கு மில்லியன் நான்காயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் மீவெல்லேவா எலக்ட்ரோனிக்ஸ், இல. 14/16, மாஹோ வீதி, நிக்கவரெட்டிய என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஹேரத் முதியன்சேலாகே டிங்கிரி பண்டா ஹேரத் மற்றும் திருமதி. ஹேரத் முதியன்சேலாகே பத்ம ஷாந்தி குமாரி ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்படி 2008.02.11ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 19630, 2017.03.15ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 24491, 2014.04.30ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 2976, 2019.04.11ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 2320, 2021.09.15ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 3226 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது கடன் வசதி மீதான 10,308,429.29 ரூபாயையும் (பத்து மில்லியன் முந்நூற்று எட்டாயிரத்து நானூற்று இருபத்தொன்பது ரூபாய் இருபத்தொன்பது சதம்) இரண்டாவது கடன் வசதி மீதான 4,418,512.50 ரூபாயையும் (நான்கு மில்லியன் நானூற்றுப் பதனெட்டாயிரத்து ஐந்நூற்றுப் பன்னிரண்டு ரூபாய் ஐம்பது சதம்) அத்துடன் 2023.06.14ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்ற முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நிக்கவரெட்டிய கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

"தங்கஹமுலஹேன" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அரச காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் S.M. திசாநாயக்க தயாரித்த 1999.03.20ஆம் திகதிய 7361ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வட மேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று, மகுல் ஒதோட்ட கோரளை, நிக்கவரெட்டிய பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட நிக்கவரெட்டிய கிராம சேவகர் பிரிவிலுள்ள நிக்கவரெட்டிய எனுமிடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் குறித்த 7361ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு B1ஐயும் கிழக்கில் குறித்த 7361ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு B1ஐயும் தெற்கில் FVP. 1991இல் உள்ள காணித்துண்டு 36ஐயும் மேற்கில் புத்தளம் - குருணாகல் பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பத்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே10) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு நிக்கவரெட்டிய காணிப் பதிவகத்தில் பக்கம் A 38/269இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**இலங்கை வங்கி**
**நிக்கவரெட்டிய**

**திரு. V.A.R.P. விதானாராச்சி**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

## நாவலப்பிட்டி நகர சபை

## பெறுகை அறிவித்தல்

நாவலப்பிட்டி நகரசபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளில் வாகன நிறுத்தும் இடங்களுடன் சம்பந்தப்பட்ட அன்றாட நிறுத்துமிட கட்டணங்களை அறவிட்டு நடத்திச் செல்வதற்காக 2024.01.01 முதல் 2024.12.31 வரை வருடாந்த குத்தகைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கிய ஆவணங்கள் 2023.11.09 முதல் 2023.11.27 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வேலை நாட்களில் நாவலப்பிட்டி நகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. மீளளிக்கப்படும் கேள்விப்பிணை வைப்புக்கள் ரூ.100,000.00 மற்றும் படிவக்கட்டணம் ரூ.1000.00 செலுத்தி கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறாக உறைகளில் இட்டு, பின்னர் இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு, 2023.11.28 மு.ப. 9.30 இற்கு முன் கிடைக்குமாறு " செயலாளர், நாவலப்பிட்டி நகர சபை நாவலப்பிட்டி" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அன்றே மு.ப.10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.
03. மாதாந்த குறைந்தபட்ச கேள்வி ரூ.303,820/- ஆகும்.
04. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நாவலப்பிட்டி நகரசபையின் அன்றாட வாகனங்களின் கேள்வி - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உரியது. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

**அட்டவணை**

| தொடர் இல | குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட வீதிகள் | கட்டணங்கள் அறவிடல் 01 லொறி ஒன்றிற்கு | 02 வேன்/ கார் ஒன்றிற்கு | 03 முச்சக்கர வண்டி ஒன்றிற்கு | 04 மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு |
|---|---|---|---|---|---|
| 01 | ஸ்ரீ கவிஷ்வர மாவத்த | ரூ.100.00 | ரூ.50.00 | ரூ.20.00 | ரூ.10.00 |
| 02 | போகன்ஸ் வீதி | | | | |
| 03 | பஸ் நிலைய வாகன நிறுத்துமிடத்தின் ஒரு பகுதி (பொது மலசல கூடம் முன்னால்) | | | | |
| 04 | நகரசபை வீதி | | | | |
| 05 | சொய்சாகெலே வீதி | | | | |
| 06 | பெனிதுடுமுல்ல வீதி | | | | |
| 07 | தொலஸ்பாகே வீதி | | | | |
| 08 | சினமா வீதி | | | | |

**டி.எம்.டி.பீ.பீ.திஸாநாயக்க**
**செயலாளர் - நாவலப்பிட்டி நகர சபை - 2023.11.07**

---

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - பொலன்னறுவை

மக்கள் வங்கி பொலன்னறுவை பிராந்திய தலைமைக் காரியாலயத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 09.12.2023 மற்றும் 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பொலன்னறுவை கிளை | தெஹியத்த கண்டிய கிளை |
|---|---|---|
| கிளைகள் | பொலன்னறுவை, ஹிங்குராகொட, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரக்கிளை, பக்கமுன, தம்பாளை | அரலகண்வில, வெலிகந்தை, தெஹியத்த, கண்டிய |
| சேவை மையங்கள் | கதுறுவெல, தியசென்புர, வைத்தியசாலை வளாகம், தியபெதுமை, லங்காபுர, ஜயந்திபுர | மன்னம்பிட்டிய, செவனபிட்டிய, சிறிபுர, சந்துன்புர |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம்**
**புதிய நகர், பொலன்னறுவை**
**தொலைபேசி இல. 027-2223900, 027-2224404, 027-2225760, 027-2226626, 027-2226625**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - அநுராதபுரம்

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 08.12.2023 வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் - 09.12.2023 & 10.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | அநுராதபுரம் - 008 | கெக்கிராவ - 042 | மதவாச்சி - 096 |
|---|---|---|---|
| கிளைகள் | அநுராதபுரம், நொச்சியாகம, அநு/ நுவரவெவவ, தலாவ | கொக்கிராவ, தம்புத்தேகம, எப்பாவல, கல்கிரியாகம, கல்னேவ, மீகலேவா | மதவாச்சி, பதவியா, கெபிதிகொல்லாவ, கஹடகஸ்திகிலிய, கலென்பிந்துனுவெவ, ஹொறொவ்பொத்தான |
| சேவை மையங்கள் | அநுராதபுரம், ரம்பீவ, நச்சதுவ, வில்லாச்சிய, திறப்பனே, மிஹிந்தல, சாலியவெவ | கணேபல்பொல, மரதன்கடவல, புலனேவ, தம்சோபுர, ரஜித ஹந்திய, ராஜங்கனய | பதவி - ஶ்ரீபுர<br>பதவி - பராக்கிரமபுர |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அநுராதபுரம்.**
**தொலைபேசி இல. 025-2223035/025-2234870**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

# அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

